# ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 பிரமாதி௵ பங்குனி௴ கதிர் 9

ஏப்ரல் 1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை — 1

ராம்கார் காங்கிரஸ் — 15

53வது இந்திய தேசீய காங்கிரஸ் — 17

அக்கா (தொடர் கதை) — எம். வி. வேங்கடராமன் 49

வேதாந்த ரகசியங்கள் — ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள் 57

ரஜபுத்திர ரமணி — "தனிராம் பிரேம்ஜீ" 62

சுதந்திரத்தின் தேவைகள் யாவை— ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள் 7. வெ. சா. 70

பொருளாதாரமும் புதிய திட்டங்களும் — வ.அ. தியாகராஜன் M.A. 77

சக்ரவர்த்தி விஜயராகவாச்சாரியார் — "ஒரு காங்கிரஸ்வாதி" 86

அன்றுட உலகம் — 89

சந்ததமும் இளமையோடிருக்க வழியென்ன? "ஆசிரமவாசி" 94

# ஜோதி

கதிர் 3 ஏப்ரல்—1940 சுடர் 9

## ராம்கார்

ஒரு தனி மனிதனோ, அல்லது ஒரு ஜாதியோ, அல்லது ஒரு தேசமோ நன்றாக வாழ்ந்திருந்து பிறகு வீழ்ந்துவிடலாம். வாழ்வுக்குப் பிறகு தாழ்வு ஏற்படுவது சகஜந்தான். ஆனால் அந்தத் தாழ்விலிருந்து வாழ்வு காண வேண்டுமென்ற விருப்பம் யாருக்கும் இருக்கவேண்டும். அந்த விருப்பம் இருந்தால், நாம் தாழ்வுற்றிருக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படும். இதனால் மனிதன் சிந்திக்கத் தொடங்குகிறான். சிந்தனை ஏற்பட்டு விட்டால்தான், அவன் விடுதலைபெறுவானே! வாழ்வு காணும் மார்க்கத்தைக் கோலுவானே! வாழ்வும் பெற்று விடுவானே! ஆனால் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருப்பவர்களுக்கு இந்தச் சிந்தனை சக்தியின் ஆணிவேர் அழுகிப் போய்விடுகிறது. இவர்கள், மில்ட்டன் என்ற கவிஞன் கூறிய மாதிரி, சுலபமான அடிமைத்தனத்தில் திருப்தி யடைந்து விடுகிறார்களே தவிர, கடினமான சுதந்திரத்தை விரும்புகிறார்களில்லை.

ராம்கார் காங்கிரஸ், வேறெதைச் செய்தாலும் செய்யா விட்டாலும், ஜனங்களிடத்திலே இந்தச் சிந்தனை சக்தியையாவது தூண்டிவிடும் என்று நாம் எதிர் பார்த்தோம். ஆனால் ஏமாற்ற மடைந்தோம். வழக்கம் போல் தலைவர்கள் தரிசனம் கொடுத்தார்கள்; ஜனங்கள் பார்த்துச் சந்தோஷப்பட்டார்கள். மத பீடங்களிலிருந்து குருமார்கள் உபதேசம் செய்வதைப்போல் தலைவர்கள் பேசினார்கள்; உபதேசங் கேட்டு மட்டும் மோட்ச லோகத்தை யடைந்துவிடலாமென்று கருதி, கண்மூடி கை கட்டி உட்கார்ந்திருக்கும் சிஷ்யக் கூட்டத்தைப்போல், காங்கிரசுக்கு வந்திருந்த ஜனங்களும், தலைவர்களுடைய பேச்சைக் கேட்டுத் திருப்தி யடைந்து, தீர்த்த யாத்திரைக்குப் போய்வந்தவர்கள் தாங்கள் இந்த இக லோகவாழ்க்கையில் செய்யவேண்டிய முக்கியமான காரியத்தைச் செய்து முடித்து விட்டதாக ஒரு வித மன நிம்மதி பெறுகிறார்களே அந்தமாதிரியான நிம்மதியுடன் வீடு திரும்பி விட்டார்கள். வருஷந்தோறும் நடைபெறுகிற இந்தச் சம்பிரதாயமான

காட்சி, இந்த வருஷம் ராம்காரில் சிறிது மாற்றமடையும் என்று நாம் உண்மையில் நம்பினோம். ஏனென்றால், காலத்தின் தேவையும், சந்தர்ப்பங்களின் பொருத்தமும், நமது பார்வை, எண்ணம், செயல் எல்லாவற்றையுமே சிறிது மாற்றி யமைத்துக் கொள்ளுமாறு தூண்டுகின்றன. உலகத்தின் மூலை முடுக்கிலுள்ள எந்தச் சிறிய தேசத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் இந்தத் தூண்டுதலினால் உந்தப்பட்டு வருகிறது. ஆனால் முப்பத்து முக்கோடி தேவர்கள் நிறைந்த—இதனை அடுத்த வருஷத்திலிருந்து நாற்பது கோடி தேவர்கள் என்று திருத்திக் கொண்டு விடுகிறோம்—இந்தத் திருநாட்டிலே, காலத்தைக் கடந்த பரம்பொருளிடத்தில் பரம நம்பிக்கை வைத்திருக்கிற மஹா ஜனங்கள் நிறைந்தஇந்த தேசத்திலே, காலத்தையொட்டிக் காரியங்களைச் செய்ய நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை யென்றால், அந்தக் காலம்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும். அதாவது, காலத்தை நாம் பின்பற்றிச் செல்லாவிட்டால், அது தானாகவே வலிய நம்மை இழுத்துக்கொண்டு போகும். இதனை நமது தலைவர்கள் விரைவில் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

அதிகாரத்திற்கு ஆடம்பரம் தேவைதான். அஃது அழகான பெண்ணுக்கு ஆபரணம் அழகு கொடுப்பது போல இருக்கும். ஆனால் அடிமைத்தனத்திற்கு ஆடம்பரமா? குருட்டுப் பெண்ணுக்குக் கண்ணாடியா? நமது காங்கிரஸ்களிலாகட்டும், மாகாண மகாநாடுகளிலாகட்டும் இன்னும் எந்தச் சாதாரண சிறிய கூட்டத்திலாகட்டும் மயில்வாகன ஊர்வலங்க ளென்ன? பூமாலை அலங்காரங்களென்ன? பந்தல் ஜோடிப்புகளென்ன? இவைகளுக்காக எவ்வளவு ரூபாய் செலவு! எவ்வளவு கால உழைப்பு! எல்லாம் இரண்டு மூன்று நாள் வேடிக்கைக்குத் தான். கண்ட பலன் என்ன? அந்நிய மூலதனத்தினால் நடைபெறும் ரெயில்வே கம்பெனிக்கு வருமானம்! பெட்ரோல் கம்பெனிக்கு லாபம்! தபால், தந்தி, டெலிபோன் முதலியவற்றினால் அரசாங்கத்திற்கு ஊதியம்! அந்நிய மின்சார யந்திரங்களுக்கு நல்ல கிராக்கி! ஆம்; அந்நிய சாதனங்களைக் கொண்டுதானே அந்நிய ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும்? விஷத்தை முறிக்க, விஷத்தைக் கொடுக்க வேண்டு மென்ற தர்க்க நியாயம் ஏன் இதற்கும் பொருந்தாது!

நமது தீண்டாமைப் பாவத்திற்காக, தெய்வசக்தி கோபங் கொண்டு பீஹார் மாகாணத்தில் பூகம்பத்தை உண்டு பண்ணிவிட்ட தென்று முன்னர் நமக்குச் சமாதானம் கூறப்பட்டது. இப்பொழுது அதே மாகாணத்திலுள்ள ராம்காரில், மனிதசக்தி தடுமாறி நிற்பதைக் கண்டு, இயற்கைச் சக்தி கோபங் கொண்டு விட்ட தென்று நாம் திருப்பிச் சமாதானம் கூறலாமா? தெய்வமும் இயற்கையும் ஒன்றுதானே! ஆனால் இப்படி யெல்லாம் நமது கற்பனா சக்தியை நாம் உபயோகிக்க விரும்பவில்லை.

ராம்கார் காங்கிரஸானது, காற்றுக் காரணமாகவும் மழை காரணமாகவும்

ஒழுங்காக நடை பெறுமல் போய் விட்டதற்கு நாம் வருந்துகிறேம். இதனுல், காங்கிரஸை நடத்தி வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களுக்கும், மற்றப் பிரதிநிதிகள் முதலாயிஞேர்க்கும் அதிக கஷ்டமும் நஷ்டமு மேற்பட்டன. இவர்களனை வருக்கும் நமது அநுதாபம்.

ஆனுல் இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தைத்தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேம். பிரதி வருஷமும், இந்தியாவின் ஒவ்வோரிடத்திலும் காங்கிரஸைக் கூட்டி அதற்காக லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து ஒரு நகரத்தை நிர்மாணித்து பிறகு அதனைக்கலைத்து விடுவதற்குப் பதிலாக, இந்தியாவின் மத்தியஸ்தலமாயுள்ள ஓரிடத்தில், காங்கிரஸ் கூடுவதற்கென்று பெரிய தொரு கட்டிடம் ஸ்திரமாகச் சமைத்து அதிலேயே பிரதிவருஷமும் ஏன் காங்கிரஸை நடத்தக் கூடாது? இதனுல் பிரதிநிதிகளுடைய சிரமம் குறையும்; தொண்டர்களின் உழைப்பு மிச்சமாகும். வருஷந்தோறும் காங்கிரஸுக்கென்று திரட்டப்படுகிற லட்சக்கணக்கான ரூபாய்களை, கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு உபயோகப்படுத்தலாம். வருஷந்தோறும் கட்டிக் கட்டிக் கலைப்பதை விட ஸ்திரமான ஒரு கட்டிடங் கட்டி அதனை தேசிய இயக்கத்தின் தலைமை ஸ்தானமாகவும், தேசியப் பொருட்காட்சி சாலையாகவும், தேசிய யாத்திரை ஸ்தலமாகவும் உபயோகித்துக் கொள்ளலாம். தேசிய சக்திகளைச் சிதற விடாமல் பாதுகாத்துக் கொளவதற்கு இஃதொரு சிறந்த சாதனமாகும். நமது தேசத்தின் கலை, நாகரிகம் முதலிய அனைத்தையும் பிரதி பலித்துக் காட்டும் ஆலயமாக இஃது இருக்க வேண்டும். இந்த யோசனையை நமது தலைவர்களுக்கும், காங்கிரஸ் பொக்கிஷத்தின் திறவுகோல்களென்று சொல்லப்படும் சேத் யமுனுலால் பஜாஜுக்கும், ஜி. டி. பிர்லாவுக்கும் சமர்ப்பிக்கிறேம்.

ராம்கார் காங்கிரஸ் நடவடிக்கைகளை ஊன்று நோக்கிய நமக்குச் சில உண்மைகள் புலனுகின்றன. அவற்றை வரிசைப் படுத்திக் கூற விரும்புகிறேம்.

1. காங்கிரஸில் இப்பொழுது பேச்சுவன்மை அபிவிருத்தி யடைந்திருக்கிறது. செல்வத்தின் செல்வர்களோடு, சொல்லின் செல்வர்களும் அதிகப் பட்டிருக்கிறுர்கள்.

> இதற்கு அத்தாட்சி; நீங்கள் தர்க்க வாதத்தில் அதிக முன்னேற்ற மடைந்திருப்பதைக் காண்கிறேன். இதற்காக உங்களைப் பாராட்டுகிறேன். ஏனென்ருல் ஒரு ஜனநாயக ஸ்தாபனத்தில், தங்கள் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கூடியவர்களும், உயர்ந்த முறையில் வாதஞ் செய்யும் திறமையுடையவர்களும் தேவை.—விஷயாலோசனைக்கூட்டத்தில் காந்தியடிகள் பேச்சு.

2. காங்கிரஸானது பாமர ஜனங்களுக்காக உழைக்கிற ஒரு ஸ்தாபனமா, அல்லது பாமர ஜனங்களுடைய ஸ்தாபனமா என்பதைப் பற்றி தலைவர்களுக்குள்ளேயே தெளிவு ஏற்படவில்லை யென்று தெரிகிறது.

இ. அ. (அசல் தீர்மானம் சம்பந்தமாக) கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்த பிரேரணைகள் எதைக் காட்டுகின்றன வென்ருல், நாம்

கிழ்ப்படிந்து நடப்பதை மறுக்கத் தயாரா யிருக்கிறோம்; ஆனால் சட்ட மறுப்புக்குத் தயாராயில்லை யென்பதைக் காட்டுகிறது. இதனால் எதிர் பலாத்காரமே உண்டாகும். அதனால் கஷ்டப்படுகிறவர்கள் நாமல்ல; பாமர ஜனங்கள்.—விஷயாலோசனைக் கூட்டத்தில் சர்தார் படேல் பேச்சு.

நாம் கோருகிற சுயராஜ்ய மானது, ஹிந்து ராஜ்யமாகவோ, முஸ்லீம் ராஜ்ய மாகவோ கிறிஸ்தவ ராஜ்யமாகவோ இராது. தேசத்தின் முழுவதற்குமுரிய சுய ராஜ்யமாகவே அஃது இருக்கும். அதில்—அந்தச் சுயராஜ்யத்தில்—சமுதாயத்தின் மேற்படியிலுள்ள ஒரு சிலர் மட்டும் அதி காரஞ் செலுத்த மாட்டார்கள். பாமர ஜனங்களே அதிகாரஞ் செலுத்துவார்கள்.—பகிரங்க காங்கிரஸில் அசல் தீர்மா னத்தைப் பிரேரித்து பண்டித ஜவஹர் பேசிய பேச்சு.

3. காங்கிரஸ் கட்சியினர், மாகாண அரசாங்க நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டது சுயராஜ்யப் போராட்டத்தைத் துரிதப் படுத்து வதற்காக வல்ல; போராட்டத்திலி ருந்து ஓய்வு கொள்வதற்காக. காங்கி ரஸில் ஏற்பட்ட பலஹீனம் காரண மாகவே, காங்கிரஸ், மந்திரிப் பதவி களை ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று முடிவு செய்தது.

இ. அ: (1935ம் வருஷத்து இந்தியா அரசாங்க) சட்டத்தை நிராகரிப்பதாக காங்கிரஸ் செய்த தீர்மானம் உலகத்திற்கு நன்கு தெரியும். ஆயினும் அந்தச் சமயத் தில் போராட்டம் வேண்டாமென்றும் ஓய்வு கொள்ள வேண்டு மென்றும் காங்கிரஸ் தீர் மானித்தது.—மௌலானா அஸாத்தின் தலைமைப் பிரசங்கம்.

நம்மிடத்தில் பலமிருந்திருந்தால், பார்லி மெண்டரி வேலைத் திட்டத்தை, அதன் குறைபாடுகளைத் தெரிந்திருந்தும், பரிசோ தனை செய்யத் தொடங்கி யிருக்கமாட் டோம்,—விஷயாலோசனைக் கூட்டத் தில் சர்தார் படேலின் பேச்சு.

4. தேசம் முன்னேறிக் கொண் டிருக்கிறதா? பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறதா? அதாவது தேசம் விழித்துக்கொண்டு விட்டதா? அல்லது தூங்கிக்கொண்டிருக்கிறதா? இந்த விஷயத்தில் தலைவர்களுக் குள்ளேயே மயக்கம் இருக்கிறது போல் தோன்றுகிறது.

இ. அ. 1923ம் வருஷத்தில் நாம் லட் சியத்தை யடைய விரும்பினோம். ஆனால் அப்பொழுது, மைல் கற்கள்கூட நமது கண்களுக்குத் தெரியாதபடி லட்சியம் வெகு தொலைவில் இருந்தது. இப்பொழுது ஏறெடுத்துப் பாருங்கள், மைல் கற்கள் தெளிவாகத் தெரிவதோடு, லட்சியமும் தூரத்திலில்லை யென்று தெரிகிறது.—மௌலானா அஸாத்தின் தலைமைப் பிரசங்கம்.

சுதந்திரத்தை யடைவதாகிற கனவுகளி னால் நாம் உற்சாகப்பட்டு விடக்கூடாது. நமது தூக்கத்திலிருந்து நாம் விழிக்கவேண் டும்.—மௌலானா அஸாத்தின் முடி வுரை.

தேசம், தூக்கத்திலிருந்து விழித்தது. உலகத்தில் நியாயமானதொரு ஸ்தானத்தை யடைய வேண்டுமென்று நான் விரும்புகி றேன்,—ஸ்ரீமதி சரோஜனி தேவியின் வந்தனோபசாரப் பேச்சு.

ராம்கார் காங்கிரஸுக்கு வரவேற்பு கூட்டத் தலைவரா யமர்ந்த பாபு ராஜேந்திர பிரசாத்தும், தலைவரா யமர்ந்த மௌலானா அபுல் கலாம் அஸாத்தும் அறிவுக் கடலில் லாகவ மாக நீந்தும் ஆற்றல் பெற்றவர்கள். வேறெந்த சுதந்திர நாட்டிலேனும் இவர்கள் பிறந்திருப்பார்களானால், அந்த நாட்டின் கலைப் பொக்கிஷம்

இவர்களிடத்தில்தான் ஒப்புவிக்கப்படும் என்று திண்ணமாகக் கூறுவோம். உதாரணமாக பாபு ராஜேந்திரரின் கலாசாலை வாழ்க்கை, எந்த அறிஞராலும் பொறாமைப்படத் தக்கது. எம். ஏ. பரீட்சை வரையில், மாகாணத்தின் முதல்வராகவே அவர் தேறி வந்தார். அவரை நேரில் பார்த்தவர்களுக்கு, அவர் ஏழு பாஷைகளில் நிரம்பிய புலமையுடையவரென்பது தெரியாது. ஆங்கிலம், சரித்திரம், பொருளாதாரம் முதலிய துறைகளில் அவருக்குள்ள புலமை ஒருபுறமிருக்கட்டும்; அவருடைய சட்ட ஞானத்திற்கு ஈடாகவுள்ளவர் இந்தியாவில் ஒரு சிலர்தான். வக்கீல் தொழிலை நடத்தி அவர் ஏராளமாக எப்படிச் சம்பாதித்தாரோ அப்படியே ஏராளமாகக் கொடுத்தும் விட்டார். அவர் வக்கீல் தொழிலை விடுத்து, காந்தியடிகளின் இயக்கத்தில் சேர்ந்தபோது, பாங்கியில் அவருக்கிருந்த பணம் பதினைந்து ரூபாய் தான். புலமைக்கும் வறுமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்பார்கள். ஆனால் ராஜேந்திரரிடத்தில் அந்தப் புலமையானது, வறுமையின் செழுமையாக—தியாகமாக—பரிணமித்திருக்கிறது. இவர், காங்கிரஸிலே சேர்ந்திராவிட்டால், இவ்வளவு காலத்தில் எங்கிருக்க வேண்டும்? ஒரு மாகாண கவர்னராகவோ, அல்லது சமஷ்டி கோர்ட் பிரதம நீதிபதியாகவோ இருக்க வேண்டுமென்று அந்நிய அறிஞர்கள் இவரைப் பார்த்து அநுதாபப் படுவதுண்டு. இப்படிப்பட்ட அறிஞர்தான், ராம்கார் காங்கிரஸ் வரவேற்புக் கூட்டத் தலைவர். சென்ற வருஷத்தில் இவரே காங்கிரஸ் தலைவராக இருந்தார் என்பதையும் இங்குக் கவனத்திற்குக் கொண்டு வைத்துக் கொள்வது நல்லது

மௌலானா அஸாத்தின் அறிவு உருவத்தைச் சிறிது வரைந்து காட்டுவோம். உலகத்திலே ஒரு சிலர் அதிமேதாவிகளாகவே பிறக்கிறார்கள் என்று சொல்வதுண்டு. இப்படிப்பட்டவர்களுடைய நுண்ணிய புலமை, இவர்களின் பாலிய பருவத்திலேயே நன்கு விகசித்து விடுகிறது. பிற்காலத்திலே இவர்கள், அதி மேதாவிகள் என்று உலக அறிஞர்களால் போற்றப்படுகிறார்கள். தாந்தே என்ற இத்தாலியக் கவிஞன், ஒன்பது வயதிலேயே கவி பாடத் தொடங்கினான். வால்டேர் என்ற பிரெஞ்சுப் புலவன், பன்னிரண்டு வயதிலேயே, பாதிரிமார்களைக் குறித்து ஸ்துதி நிந்தையாகக் கட்டுரைகள் எழுதி, அதிகார ஆதிக்கத்திலிருந்தவர்களைத் திடுக்குறச் செய்து விட்டான். ஷெல்லி, பைரன் முதலிய ஆங்கிலக் கவிஞர்கள், மிகச் சிறு வயதிலேயே-ஏறக்குறைய பதினைந்து வயதுக்குள்—மணங்கமழும் கவிகளைக் கொட்டி விட்டார்கள். இப்படிப்பட்ட அதிமேதாவிகளின் திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர் நமது ராஷ்டிரபதி—மௌலானா அஸாத்—என்று நாம் எண்ணுகிற போதே நாம் பெருமை யடைகிறோம். நமது எழுதுகோல்கூட உற்சாகத்தோடு செல்கிறது. மௌலானா சாஹிபுவின் புனித வாழ்க்கையை நாம் ஆராய்ச்சி செய்து பார்க்கிற போது, பிரமிக்கத் தக்க சம்பவங்கள் எத்தனையோ நடைபெற்றிருக்கின்றன. இவர், உலகப் பிரசித்தி பெற்றதும், எகிப்தின் தலைநகரமான கெய்ரோவிலுள்ளதுமான

'அல்–அஷார்' சர்வ கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த போது, சுமார் பதினான்கு வயதில், வகுப்புக்களை நடத்தும் ஆசிரியராக அமர்த்தப் பெற்றிருக்கிறார். இவர், தமது பதினைந்தாவது வயதில், ஓர் இலக்கியப் பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்து திறம்பட நடத்தினார். இஸ்லாமியக் கலை உலகத்திலே பிரசித்தி பெற்றவர்களான கவிஞர் ஹாலி என்ன, மௌலானா ஷிப்லி என்ன முதலியவர்களெல்லாரும், அஸாத்தின் இளமையையும் புலமையையுங் கண்டு பிரமித்துப் போயிருக்கிறார்கள். திருக்குர்-ஆனுக்கு இவர் செய்துள்ள வியாக்கியானம், அறிஞருலகத்தில் பெரிதும் போற்றப்பட்டு வருகிறது. பாபு ராஜேந்திரரைப் போலவே, இவருடைய புலமையும் தியாகமாகப் பரிணமித்து, இந்திய தேசிய ரதத்தின் ஓர் அச்சாணியாக அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட இரண்டு புலவர் சிகாமணிகள், ஒரே வருஷத்தில் ஒரே காங்கிரஸில் முறையே வரவேற்புக் கூட்டத் தலைவராகவும், தலைவராகவும் அமர்ந்து தொண்டாற்றும் சந்தர்ப்பம் பெற்றது மிக அபூர்வம். இந்த அபூர்வ ஒற்றுமை, தேசிய ரதத்தை எவ்வளவு தூரம் முன்னுக்குத் தள்ளிச் சென்றிருக்கிறதென்பதுதான் ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

புலமை என்கிற பின்னணிப் படுதாவில் பாபு ராஜேந்திரருடையவும் மௌலானா அஸாத்தினுடையவும் உருவத்தைச் சித்திரித்துக் கொண்டு, அவர்கள் ராம்கார் காங்கிரஸில் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகளை நாம் கவனிக்கிற போதுதான், நமது அறிவிலே ஒரு மயக்கமும் இதயத்திலே ஒரு கலக்கமும் ஏற்படுகின்றன. உண்மையில், நுண்ணறிவு வாய்ந்த புலவர்களுக்குக் கர்மக்ஷேத்திரத்தில் இடமில்லையோ வென்ற சந்தேகங் கூட நமக்கு ஏற்பட்டு விடுகிறது. கர்மக்ஷேத்திரத்தில் புகுந்து வினையாற்ற முன்வரும் புலவர்களுக்குக் கவி உள்ளம் வேண்டும். அந்தக் கவி உள்ளம் இந்த இருவருடைய பிரசங்கங்களில் தேடித் தேடியும் காணப்படவில்லையென்பதை வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறோம்.

பாபு ராஜேந்திருடைய வரவேற்புரையின் முதற்பாகத்தை நாம் படிக்கிற போது, புராதன சரித்திரச் சின்னங்கள் நிறைந்த ஒரு மாகாணப் பொருட் காட்சிசாலையில் சுற்றிக் கொண்டிருப்பதாகவே நாம் கருதினோம். பிந்திய பாகத்தைப் படிக்கிறபோது, ஒரு துறவி மடத்தில் நுழைகிற உணர்ச்சி நமக்கு ஏற்பட்டது. நமது வருங்கால வாழ்க்கைக்கும், நிகழ்கால உறுதிக்கும், செயலாற்றும் திறனுக்கும் பரிசோதனை ஏற்பட்டிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில், பரிசோதனை ஸ்தலமாக ஏற்பட்டிருக்கும் காங்கிரஸ் மகாசபையில் பீஹார் மாகாணத்தின் புராதனப் பெருமைக்கு இடமெங்கே யென்று நாம் கேட்கிறோம். பாபு ராஜேந்திரர், சென்ற வருஷம் காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருந்தவர். தமது தலைமைக் காலத்தில், காங்கிரஸ் என்னென்ன வேலைகளைச் செய்திருக்கிறது, இன்னும் என்னென்ன வேலைகளை அது செய்யாமல் விட்டு விட்டது, இந்த வருஷம்,

என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டும் என்பன போன்ற விஷயங்களை யெல்லாம் அவர் தொகுத்துக் கூறி யிருக்கவேண்டும். இதையே தேசம் அவரிடமிருந்து எதிர்பார்த்தது. அப்படிச் செய்திருக்க வேண்டியது அவர் கடமையுங் கூட. ஆனால் துரதிருஷ்டவசமாக, எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லாமல் மற்றவற்றை யெல்லாம் அவர் சொல்லி யிருக்கிறார். நமது புராதனப் பெருமை, நமது நிகழ்கால வாழ்க்கைக்குச் சிறிது கூடப் பயன்படவில்லை யென்றால், நாமும் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் இறங்கவில்லை யென்றால், அந்தப் புராதனப் பெருமையைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பேசுவதில் என்ன பயன்? பீஹார் மாகாணத்தில் புத்தரும் மஹா வீரரும் அவதரித்தார்கள்; பெரிய ஏகாதிபத்தியம் அங்கு ஸ்தாபிக்கப்பட்டது; சிறந்த சர்வகலாசாலை அங்குப் பிரகாசித்தது. இவையெல்லாம் வாஸ்தவந்தான். ஆனால் இப்பொழுது அந்த மாகாணந்தான், பாபு ராஜேந்திரரின் கருத்துப்படியே, பொருளாதாரத்திலும், கல்வியிலும், வியாபார முயற்சிகளிலும் பிற்போக்கடைந் திருக்கிறது. இந்த மாகாணத்தில் தான் அநேக லட்சம் பேரைக் கொள்ளை கொண்ட மகத்தான பூகம்பம் ஏற்பட்டது. காங்கிரசின் ஐம்பத்து மூன்று வருஷ சரித்திரத்திலேயே இல்லாதபடி, மழையினாலும் காற்றினாலும் காங்கிரசே நடைபெறாமல் போய்விட்டது இந்த மாகாணத்தில் தான். பழைய பெருமை' புதிய நிலைமையைச் சமாளிக்க முடியவில்லை.

பாபு ராஜேந்திரர் தமது பிரசங்கத்தின் பிற்பாகத்தில், புத்தர் பிரான் பிட்சுக்களை நோக்கி வஜ்ஜியர்களைப் பற்றிச் சொன்ன ஏழு உபதேசங்களை நமக்கு ஞாபக மூட்டி, அதேமாதிரி, மகாத்மா காந்தியும், இந்தக் காங்கிரஸ் மகா சபையைப் பற்றித் தமது ஆசிரமப் பெண்களிடம் சொல்லுகிற விதமாக நாம் நடந்து கொள்ளக் கூடாதா வென்று கேட்கிறார். ஆம்; அப்படியே நடந்து கொள்ளலாம். ஆனால் நாம் வஜ்ஜியர்களில்லையே. அவர்கள் சுதந்திர புருஷர்கள்; வஜ்ரதேகிகள். நாமோ அடிமைகள்; அதனால் பலஹீனர்கள். அடிமைத் தனத்திலிருந்து விடுதலை பெறுவதுதான் நமது முதல் வேலை. அந்த விடுதலை பெற்ற நிலையிலேயே, மேற் கூறப்பட்ட ஏழு குணங்களும் நம்மிடத்தில் தாமாகவே வந்துவிடும். இப்பொழுதுகூட, நம்மிடத்தில் மேற்படி குணங்களில் சில இல்லாமற் போகவில்லை. நாம் பெண்களைத் தெய்வங்களாகவே போற்றுகிறோம்; தேவாலயத் திருப்பணிகள் நடத்துகிறோம்; சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோம். ஆயினும் இவை விடுதலை யளிக்க வில்லையே.

மகாத்மா காந்தியை நாம் புத்தராகப் போற்றுகிறோம்; ஆனால் நாம் பிட்சுக்களாகிவிடவோ, நமது தாய்மார்களை பிட்சுணிகளாக்கிவிடவோ நாம் தயாராக இல்லை. கர்ம வீரர்களாகவே வாழவும் வாழ்விக்கவும் நாம் விரும்புகிறோம்.

மௌலானா அஸாத்தின் தலைமையுரையைச் சிறிது கவனிப்போம். சென்ற ஆறு ஏழு மாதங்களாக நடை

பெற்ற சம்பவங்களைத் தொகுத்து இந்தப் பிரசங்கத்தில் கூறி யிருக்கிறார். அந்த அளவுக்குத்தான் இவருடைய பிரசங்கத்தை நாம் பாராட்ட முடிகிறது. தற்போதைய காங்கிரஸ் சேனாதிபத்தியத்தின் திடமில்லாத மனப்போக்கை இவருடைய பிரசங்கம் அப்படியே படம் பிடித்து காட்டுகிறது என்று சொல்லலாம். காங்கிரஸ் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறது, இனி என்ன செய்யப் போகிறது என்ற விவரங்கள் இவருடைய பிரசங்க வாயிலாக வேனும் தெரிவிக்கப் படுமென்று நாம் ஆவலுடன் எதிர் பார்த்தோம். ஆனால் 'இந்தியா பரிபூர்ண சுயராஜ்யம் பெறத்தீர்மானித்து விட்டது' என்ற பழைய வாசகத்தையே திருப்பித் திருப்பிக் கூறுவதாக இருக்கிறது இவருடைய பிரசங்கம்.

ஆனால், ஹிந்து-முஸ்லீம் பிரச்னையைப் பற்றி இவர் சிறிது விஸ்தரித்துப் பேசியிருக்கிறார். காங்கிரஸானது, வகுப்புப் பிரச்னைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து விட்டதென்பது நமது கருத்து. அந்த முக்கியத்துவத்தை, இவரும் தமது பிரசங்கத்தில் கொடுத்திருக்கிறாராயினும், சில சில இடங்களில் இவர் ஒரு புதிய திருஷ்டியுடன், விகாசமடைந்த பார்வையுடன் மேற்படி பிரச்னையைப் பார்க்கிறார். உதாரணமாக

"முஸல்மான் என்ற ஹோதாவில் இஸ்லாமிய மதத்திலும் இஸ்லாமியக் கலையிலும் எனக்கு ஒரு விசேஷ சிரத்தை யுண்டு. இவற்றில் யாரேனும் தலை யிட்டால் நான் அதைச் சிறிதுகூடச் சகிக்க மாட்டேன். ஆனால் எனது வாழ்க்கையின் அநுபவங்கள், நிலைமைகள் முதலியன இன்னும் சில விஷயங்களையும் நான் கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. நான் ஓர் இந்தியன் என் பதிலே பெருமை கொள்கிறேன். இந்திய தேசிய சமுதாயம் என்ற பொதுத் தொகுப்பில் நான் பிரிக்க முடியாத ஒரு பாகம். இந்த மகத்தான கட்டிடத்திற்கு—இந்திய தேசிய சமுதாயம் என்ற கட்டிடத்திற்கு நான் அவசியம் தேவை. நான் இல்லா விட்டால் இந்தியாவின் இந்தக் கட்டிடம் பூர்த்தி பெறாது. இந்தியா வென்னும் கட்டிடம் சமைவதற்கு நான் ஓர் அவசியமான பொருளாயிருக்கிறேன். இந்த உரிமையை நான் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை"

என்று இவர் கூறுகிற போது, குறுகிய சந்திலிருந்து திறந்த மைதானத்திற்கு வருகின்ற உணர்ச்சி நமக்கு ஏற்படுகிறது. இந்த வாசகங்களை நமது முஸ்லீம் சகோதரர்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்.

மௌலானா அஸாத், தமது தலைமையுரையின் இறுதியில் 'நமது வெற்றியானது, ஒற்றுமை, கட்டுப்பாடு, மகாத்மா காந்தியின் தலைமையில் பூரண நம்பிக்கை ஆகிய இவற்றைப் பொறுத்திருக்கிறதென்று' பிரதிநிதிகளுக்கு ஞாபக மூட்டியிருக்கிறார். ஒரு ஸ்தாபனமோ அல்லது ஓர்

இயக்கமோ முதன் முதலாக ஆரம்பிக்கப்படுகிற காலத்தில் இந்த ஸ்தாபனத்தில் அல்லது இந்த இயக்கத்தில் சேர்ந்துள்ள எல்லாரும் ஒற்றுமையாயிருக்க வேண்டும்; கட்டுப் பாட்டுக்குட்பட்டு நடக்க வேண்டும்; தலைவரிடத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பன போன்ற பொதுவான ஆரம்ப பாடங்கள் போதிக்கப் படுவதுண்டு. காங்கிரசின் ஐம்பத்து மூன்றாவது வருஷ அரசியல் வாழ்க்கையில், இன்னும், இந்த ஆரம்ப பாடந்தான் நமக்குப் போதிக்கப்படுகிறது! எந்த விஷயம் நம்மிடத்தில் இல்லையோ அந்த விஷயந்தான் நமக்கு ஞாபக மூட்டப்படுவது வழக்கம். ஆகவே, இப்பொழுது காங்கிரசில் ஒற்றுமை, கட்டுப்பாடு, தலைவரிடம் நம்பிக்கை ஆகிய மூன்றும் இல்லை யென்று பொருள் உண்டாகிறது. இதற்குக் காரணம் என்ன? ஏன் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது? இந்த அடிப்படையான விஷயங்களில் நமது தலைவர்கள் உடனே கவனஞ் செலுத்த வேண்டுகிறோம். ஒற்றுமையும், கட்டுப்பாடும், தலைவரிடம் நம்பிக்கையும் இருந்திரா விட்டால், ராஜகோட் சத்தியாக்கிரகமோ, உப்புச் சத்தியாக்கிரகமோ ஆரம்பித்திருக்க மாட்டோம். ஆனால் இப்பொழுது தேசம் தயாராயில்லை யென்று தலைவர்கள் சொல்கிறார்கள். இரண்டு முறை தயாராயிருந்த தேசம் இப்பொழுது ஏன் தயாராக இல்லை? இதற்குக் காரணம் என்ன? தலைமை ஸ்தானத்திலேயே ஏதோ குறைபாடுகள் இருக்கின்றன, அல்லது அது கையாண்டு வந்த முறைகளில் ஏதோ பிசகுகள் இருக்கின்றன வென்பது தெரியவில்லையா? இவற்றிற்குப் பரிகாரந் தேடுதல் தேசத்திற்கு இன்றியமையாததாகும்.

பாட்னாவில் காரியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானம், அப்படியே கால் புள்ளி, அரைப் புள்ளி கூட மாற்றப்படாமல் ராம்கார் காங்கிரசில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குத்தான் மகத்தான காங்கிரஸ் கூடியது. நூற்றுக்கணக்கான மைல்களிலிருந்து, ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் லட்சக்கணக்காக ரூபாய்களைச், செலவழித்துக் கொண்டு வந்து, மழையிலும் காற்றிலும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தது; இந்த ஒரு தீர்மானத்திற்குக் கை தூக்குவதற்குத்தான். இன்னும் அதிகமான தீர்மானங்கள் செய்யப்படவில்லை யென்பது நமது குறையல்ல. ஆனால், நிறைவேறிய இந்த ஒரு தீர்மானமும் நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்லவில்லையே யென்பதுதான் நமது குறை. இந்த ஒரு தீர்மானமானது, நமது லட்சியம் இன்னதென்று யாருக்கும் சந்தேகமில்லாமல் தெளிவாக்கி விட்டதென்று சொல்கிறார்கள். அப்படியானால்லாகூர் காங்கிரசிலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிற பூரண சுயேச்சைத் தீர்மானங்களெல்லாம் சந்தேக மனப்பான்மையுடன்தான் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றனவா? நமது லட்சியத்திலேயே நமக்கு நம்பிக்கையில்லையா? சென்ற செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் ஐரோப்பிய யுத்தம் தொடங்கப் பட்ட காலத்திலிருந்து ஒரே மாதிரியான, கருத்தும் வாசகமும் அடங்கிய தீர்மானத்தைத்தான் காங்கிரஸ் காரியக்

கமிட்டி திருப்பித் திருப்பி நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு தடவையிலும், பூரண சுதந்திரம்பெற இந்தியா தீர்மானித்து விட்டதென்று வற்புறுத்துவதின் ரகசியந்தானென்ன? லட்சியத்தை யடைவதற்குரிய திட்டங்களைவகுக்காமல், அந்த லட்சியத்தை மட்டும்திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் அந்த லட்சியம் கைகூடிவிடுமா? பிரதிவருஷமும் கூடுகிற காங்கிரஸானது, லட்சியத்தை யடைவதற்குரிய திட்டங்களை வகுத்து அவை நடைமுறையில் கொணரப்பட என்னென்ன செய்ய வேண்டும், அடுத்த வருஷத்து வேலைத் திட்டமென்ன, சென்ற வருஷத்து வேலைத் திட்டத்தின் விளைவென்ன, அவற்றில் என்னென்ன குறைபாடுகள் இருந்தன, அவற்றை நீக்க என்ன வழி, இவைகளையெல்லாம் ஒரு காங்கிரஸ் ஆலோசிக்க வேண்டும். ஆனால் நமது தலைவர்கள் எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லாமல் விடுத்தது போல காங்கிரசும், எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் விட்டு விட்டதென்பதுவே நமது அபிப்பிராயம்.

காங்கிரஸ் வாதிகள், சுதந்திர பிரதிக்ஞையில் கூறப்பட்டுள்ள நிர்மாண திட்டங்களை நிறைவேற்றி வைக்கிறார்களென்றும் கட்டுப்பாடாயிருக்கிறார்களென்றும் தமக்குத் திருப்தி ஏற்பட்டாலன்றி தாம் சட்ட மறுப்பை ஆரம்பிக்கப் போவதில்லையென்று காந்தியடிகள் கூறியிருப்பதை ஞாபகமூட்டுவதாக, தீர்மானத்தின் ஒரு பகுதி கூறுகிறது. சுதந்திர பிரதிக்ஞையில் காணப்படுகிற நிர்மாண திட்டங்கள் என்ன? பழைய திட்டங்கள்தான். அதாவது சர்க்கா சுற்றுதல், தீண்டாமை, யொழித்தல், மதுவிலக்கு, ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை ஆகியவைதான். முதலாவது இவை, திட்டங்கள் என்று சொல்வதற்குரியனவா? இவையெல்லாம் நல்ல எண்ணங்கள்; நல்ல நோக்கங்கள். அந்தக் கௌரவந்தான் இவற்றிற்குக் கொடுக்க முடியும். இந்த எண்ணங்களைச் செயலில் கொணர, கையாளப்படும் முறைகளுக்கே திட்டங்கள் என்று பெயர். உதாரணமாக, ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை என்கிறார்கள். இந்த ஒற்றுமைக்கு என்ன வழி? எல்லாரும் ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்று எண்ணினால் மட்டும் போதுமா? ஒரு பிரிவு, ஒற்றுமையை நாட, எதிர்ப்பிரிவு ஒற்றுமையை நாடாமலிருந்தால் அதற்கென்ன மார்க்கம்? இதே மாதிரிதான், தீண்டாமை, மதுவிலக்கு முதலியவைகளின் விஷயத்திலும். என்னென்ன முறைகளைக் கையாண்டால் இந்தப் பயன் விளையும் என்று ஒரு திட்டம் போட்டுக் கொடாமல், வெறுமனே நிர்மாண் திட்டங்களை நிறைவேற்றுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் அவை நடைபெற்றுவிடுமா?

இந்த நிர்மாண திட்டங்கள், 1940ம் வருஷத்துச் சுதந்திர பிரதிக்ஞையில் புகுத்தப்பட்ட காலத்திலேயே, இதற்கு ஆட்சேபனை கிளம்பியது. அப்பொழுது, கைராட்டினஞ் சுற்றுதல் முதலியவற்றில் நம்பிக்கையில்லாதவர்கள், அந்தப் பாகத்தை விட்டு விட்டு, பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளலாமென்று காங்கிரஸ் சேனாதிபதி

யத்தினின்று தாக்கீது பிறந்தது. இந்த நிபந்தனையின் மீதுதான் அநேகர் அப்பொழுது பிரதிக்ஞை யெடுத்துக் கொண்டார்கள். இப்பொழுது காங்கிரஸ் தீர்மானத்தில் சுதந்திரப் பிரதிக்ஞை வற்புறுத்தப் படுகிறது. அப்படியானால் நிபந்தனையுடன் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டவர்களுடைய நிலைமை என்ன? அவர்களனைவரும், சுதந்திரப் போராட்டத்தின் சைநிகர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்களா? சுதந்திர பிரதிக்ஞை சம்பந்தமாக அன்று ராஜேந்திரர் பிறப்பித்த அறிக்கையும், இந்தத்தீர்மானத்தில் கண்டுள்ள வாசகமும் முன்னுக்குப் பின் முரணாயிருக்கிறதென்பது நமது அபிப்பிராயம்.

இந்தியாவின் யுத்த உதவியைப் பற்றி இந்தத்தீர்மானத்தில்அதிகமாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் காரியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானங்களிலும், மௌலானா அஸாத்தினுடைய தலைமைபுரையிலும் இந்த விஷயம் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, பிரிட்டிஷ் அரசாங்கம், ஏதோ இந்தியாவை யுத்தத்திற்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டமாதிரியாகவும், நிபந்தனையின்றி உதவி செய்ய காங்கிரஸ் மறுப்பது போலவும் ஒரு நிலைமையைச சிருஷ்டித்து, அந்த அடிப்படையின் மீது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. காங்கிரசின் விருப்பு வெறுப்புகளைக் கவனியாமலேயே இந்தியாவின் உதவியைப் பிரிட்டிஷ் அரசாங்கம் பெற்றுக்கொண்டுதான் வருகிறது; அதற்கு கிடைத்துக் கொண்டும் வருகிறது. தற்போதைய இந்தியா அரசாங்கம் இந்திய தேசீய அரசாங்கமல்ல; பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஒரு கிளை ஸ்தாபனம் மாதிரி. தலைமை ஸ்தாபனத்தின் உத்திரவைப் பொறுத்தே கிளை ஸ்தாபனமும் இயங்குகிறது. இதனுடன், நமது மஹாராஜாக்கள் வேறே இருக்கிறார்கள். அப்படியிருக்க காங்கிரசின் விருப்பத்தைக் கேட்கவேண்டிய அவசியமென்ன? அப்படிக் கேட்டதாகவும் தெரியவில்லையே.

இந்தத் தீர்மானமானது, உலகத்தின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறதென்றும், உலகத்தார் முன்னிலையில் நம்மைத் தலை நிமிர்ந்து பார்க்கும்படி செய்திருக்கிறதென்றும் கூறுகிறார்கள். இது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

பொதுவாக, காங்கிரஸ் நிறைவேற்றியுள்ள இந்தத் தீர்மானத்தினால், இந்தியா, ஓர் அங்குலம்கூட முன்னேற்றமடையவில்லை யென்பதுதான் நமது கருத்து. முதலில் நாம் கூறியபடி இந்தத் தீர்மானம் ஜனங்களுடைய சிந்தனை சக்தியைக்கூடத் தூண்டிவிடவில்லை யென்று நாம் சொன்னால் அஃது இந்தத் தீர்மானத்தைத் தயாரித்தவர்களுடைய திறமையை குறை கூறியதாகாது.

சோஷலிஸ்டுகள் என்கிற கட்டுப்பாடில்லாத கட்சியினர் இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கின்றனர். இப்படி இவர்கள் ஆதரவு கொடுத்தது சரியா, தவறு என்பதை நாம் இங்கு ஆராய்ச்சி செய்யவிரும்பவில்லை. ஏனென்றால் அஃது ஆராய்ச்சிக்குரிய அவ்வளவு முக்கிய விஷய

மல்ல. ஆனால் இந்த வருஷம், இவர்கள் இந்தத் தீர்மான விஷயத்தில் ஒரே மாதிரியாக நடந்து கொண்டிருக்கின்றனர். சென்ற வருஷம் திரிபுரியில் நடந்துகொண்டதைப் போல் விஷயாலோசனைக் கூட்டத்தில் ஒரு விதமாகவும் பகிரங்ககாங்கிரசில் வேறு விதமாகவும் நடந்து கொண்டார்களே அப்படி யெல்லாம் இந்த வருஷமும் நடந்து கொள்ள வில்லை. இதுவே விசேஷமல்லவா?

காந்தியடிகள் இந்தக் காங்கிரசில் இரண்டு முறை பேசி யிருக்கிறார். ஒன்று விஷயாலோசனைக் கூட்டத்தில்; மற்றொன்று பகிரங்க காங்கிரசில். பிரதி வருஷமும் காந்தியடிகள் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுவது ஒரு சம்பிரதாயமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இது தவிர, காரியக் கமிட்டி கூட்டங்களில் அவ்வப்பொழுது கலந்துகொள்வது வழக்கம். ஆனால் இந்த வருஷம் நேர்முகமாகக் கலந்துகொண்டு இரண்டு முறை பேசி யிருப்பது ஏதோ விசேஷத்தையே குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவருடைய பேச்சுக்களில் விசேஷமோ புதுமையோ ஒன்றும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. சென்ற வருஷம் ராஜகோட்டை நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து, அது காரணமாக திரிபுரி காங்கிரசுக்கு வராமலிருந்த காந்தியடிகள் இந்த வருஷம் காங்கிரசுக்கு விஜயஞ் செய்து இரண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தி யிருப்பதனால் அவை விசேஷத் தன்மை பெற்றிருக்கின்றன வென்று சொன்னால், அப்படிப்பட்ட விசேஷத் தன்மையை காந்தியடிகளே விரும்ப மாட்டாரென்று நாம் கருதுகிறோம்.

உத்தியோக முறையில், காங்கிரஸானது காந்தியடிகளைப்போராட்டத்தின் தலைவராக இன்னும் நியமிக்கவில்லையாயினும், அவர், ஒரு சேனாதிபதியினுடைய கண்டிப்பான தோரணையிலேயே மேற்படி இரண்டு தடவையிலும் பேசி யிருக்கிறார். இது வியக்கத் தக்கதாயினும் பாராட்டத் தக்கதே. வியப்பு ஏனென்றால், அஹிம்சா தர்ம அகராதியில் சைனியம், தளபதி, போராட்டம் முதலிய சொற்றொடர்களுக்கு இடம் உண்டாஎன்பதுசந்தேகாஸ்பதமான விஷயமல்லவா? ஆனால் கண்டிப்பான தோரணையும் விபரீத வியாக்கியானத்திற்கு இடங்கொடாத வாசகங்களுந்தான் காங்கிரஸ் நடவடிக்கைகளில் தேவை என்று கருதிக் கொண்டிருக்கிற நமக்கு, காந்தியடிகளின் பேச்சு, ஒரு வித உற்சாகத்தையே கொடுக்கிறது. இதற்காக அவருடைய பேச்சுகளை நாம் பாராட்டவே செய்கிறோம்.

'சத்தியம், அஹிம்சை, சர்க்கா ஆகிய மூன்றிலும் பூரண நம்பிக்கை கொள்ளாவிட்டால் நீங்கள் என்னுடைய போர் வீரர்களா யிருக்க முடியாது' என்று காந்தியடிகள் தமது பிரசங்கத்தில் குறிப்பிடுகிறார். மனிதனாகவுள்ள யாருக்குமே, அதிலும் பாரத தேசத்திலே பிறந்த யாருக்குமே—சத்தியத்திலும் அஹிம்சையிலும் நம்பிக்கை இல்லாமற் போகாது. அப்படி வாழ வேண்டுமென்ற எண்ணமும் இல்லாமற் போகாது. ஆனால் அவற்றை அன்றாட வாழ்க்கையில்—அதிலும் அரசியல் அடிமைத்தனத்திலிருந்து கொண்டு—எப்படி அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவது என்பதுதான், பொதுஜனங்

களுக்குப் புரியாத ஒரு பிரச்னையா யிருக்கிறது. தர்மம், சத்தியம், அஹிம்சை முதலியன எல்லாம் தத்துவங்கள். காலம், இடம், சந்தர்ப்பம் இவற்றைப் பொறுத்து இந்தத் தத்துவங்களுக்கு மதிப்பு கணிக்கப்படுகிறது. ஒரு நூற்றாண்டிலே ஹிம்சையாகக் கருதப்பட்டது, மற்றொரு நூற்றாண்டிலே அஹிம்சையாகக் கொள்ளப்படுகிறது. கிறிஸ்தவ மதத்தில் சேராதவர்கள் கடவுள் துரோகிகள் என்று கருதப்பட்டு உயிரோடு நெருப்பிலிட்டுக் கொளுத்தப்பட்டார்கள் ஐரோப்பாவில் பதினைந்தாவது பதினேழாவது நூற்றாண்டுகளில். அப்பொழுது அது மதத்தின் தருமமாகக் கருதப்பட்டது. இப்பொழுது அஃது அதருமமாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் மஹாபாரத காலத்தில், நூற்றுவர் சபையினில் பாஞ்சாலி துகிலுரியப்படுவதை ஐவர் பார்த்துக் கொண்டு சும்மாயிருந்தார்கள். இதற்கு பொறுமை என்றும் அஹிம்சை யென்றும் அந்தக் காலத்தில் கூறினார்கள். இந்தக் காலத்தில் இந்த மாதிரி சம்பவம் நடைபெற்றால் நாம் என்ன செய்வது? அதே மாதிரி பொறுமையா யிருக்கலாமா? இருக்கவேண்டியதுதானா? ஏற்கனவே அஹிம்சா தர்மத்தை அநுஷ்டிக்கும் படியான அவசியத்தில் வைக்கப் பட்டிருக்கும் நமக்கு, இதனை எப்படி வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள உபயோகித்துக் கொள்வது என்று விளக்கிக் காட்டினால், பொது ஜனங்களிடத்தில் ஏற்பட்டிருக்கும் கலக்கம் தெளியும். இதேமாதிரி தான் சத்தியமும். சத்தியம் என்பது பொய் பேசாமலிருப்பது மட்டுமல்ல. சத்தியமே கடவுள் என்று சொல்லப்படுகிறபோது, அதனுடைய விரிவுக்கு எல்லையே காண முடியாது. அப்படிப்பட்ட விரிந்த தத்துவப் பொருளை எப்படி நமது குறுகிய வாழ்க்கையில் கொண்டு புகுத்துவது என்று திட்டம் போட்டுக் காட்டி, இன்னின்ன சந்தர்ப்பத்தில் இன்னின்னமாதிரி பேசுங்கள், இன்னின்ன மாதிரி நடவுங்கள் என்று வரையறுத்துக் காட்டினால் பொது ஜனங்கள் அப்படியும் நடக்கத் தயாராயிருப்பார்கள். தவிர, சத்தியம், அஹிம்சை யென்பன, மனிதனுடைய ஆந்தரிக வாழ்க்கையைப் பொறுத்த விஷயங்கள். அவனுடைய சுற்றுப்புறம் களங்கமற்று இருந்தால், அவனுடைய அகவாழ்வும் தானாகவே தூய்மை பெற்றுவிடும். களங்கமற்ற சுற்றுப்புறத்தை ஜனங்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதுதான் சுயராஜ்யம். இதற்கல்லவோ நாம் முதலில் முயலவேண்டும்?

மற்றும், சத்தியம், அஹிம்சை இவற்றின் அடையாளமே கைராட்டினம் என்று சொல்லப்படுகிறது. காந்திய கோஷ்டியினரில் எத்தனை பேருக்கு இந்த நுண்மை புரிந்திருக்கிறதோ என்னவோ நமக்குத் தெரியாது. ஆனால் நமக்கு இஃது ஒரு புதிராகவே இருக்கிற தென்பதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு விடுகிறோம். காந்தியர்களில் எத்தனை பேர், தினந்தோறும் கைராட்டினத்தில் நூல் நூற்கிறார்கள்? எத்தனை பேருக்கு கைராட்டினத்தினால் தான் சுயராஜ்யம் கிடைக்குமென்று நம்பிக்கை இருக்கிறது? இதைப்பற்றி ஒரு புள்ளி விவரம் எடுத்து வெளியிட்

டால் காந்தியடிகளுள்பட அனைவருக்கும் உபயோகமாயிருக்கும்.

பொதுவாக, ராம்கார் காங்கிரசினால் ஜனங்களுடைய திகைப்பு நீங்கவில்லை; அவர்களுக்கு வழியும் காட்டப்படவில்லை. தற்போது, ஐரோப்பாவின் மேற்குப் போர் முனையில் எப்படி யுத்தம் நடப்பதுபோல நடவாமலிருக்கிறதோ, அதுபோல் காங்கிரஸ் ரதமும் ஓடுவதுபோல ஓடாமல் இருக்கிறது.

பின்லாந்து

பின்லாந்துப் போராட்டம் ஒரு தினுசாக முடிந்து விட்டது. ருஷ்யாவுடன் அது சமரஸ ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டது. மேற்கு வல்லரசுகள் அதற்குச் செய்த உதவியும், காட்டிய அநுதாபமும், அதற்கு வெற்றியை உண்டாக்கிக் கொடுக்கவில்லை. ஏற்கனவே, அது மேற்கு வல்லரசுகளின் பேச்சைக் கேளாமல் ருஷ்யாவுடன் ஒரு சமரஸத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தால் இத்தனை உயிர்ச் சேதங்களும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டிரா. ஆனால் இனி அதைப்பற்றிப் பிரலாபித்துப் பயனில்லை. இதன் மூலமாக வேனும், சிறிய தேசங்கள் ஒரு படிப்பினையைக் கற்றுக் கொண்டால் அவைகளின் க்ஷேமத்துக்கு நல்லது.

ஸ்ரீ ராம. முத்துராமன் செட்டியார் அவர்கள் 'ஜோதி' யின் அபிவிருத்தியை முன்னிட்டு மோல்மேன் மார்க்கத்தில் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருகிறார்கள். அபிமானிகள் அனைவரும் அவருக்குத் தக்க உதவி புரிந்து, அவர் மூலம் சந்தாதார்களாகப் பதிவு செய்து கொண்டு 'ஜோதி' க்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்

# ராம்கார் காங்கிரஸ்

**இடம்:** பீஹார் மாகாணத்தில், ராஞ்சி என்ற பிரசித்த நகருக்குச் சமீபத்தில், தாமோதர நதிக்கரையில், காங்கிரஸ் கூட்டுவதற் கென்று நிர்மாணிக்கப்பட்ட நகரத்திற்கு 'மஷார்புரி' என்று பெயர். பீஹார் மாகாணத்தில், ஜனுப் மஷார்-உல்-ஹக் என்ற ஒரு பிரபல காங்கிரஸ் தலைவர் இருந்தார். அவருடைய பெயர் இந்த நகரத்திற்கு இடப்பட்டது.

**காலம்:** 1940ம் வருஷம் மார்ச் மாதம் 19, 20, 21ந் தேதிகளில் நடைபெறுவ தென்று தீர்மானிக்கப் பட்டிருந்தது. ஆனல் ஓயாத மழையின் காரணமாக, காங்கிரஸ் மூன்று நாட்களும் தொடர்ந்து நடைபெருமல் 20-3-40ல் ஒரே நாள் சில மணி நேரத்தில் கூடிக்கலைந்தது.

**தலைவர்:** மௌலானு அபுல் கலாம் அஸாத்.

**வரவேற்புக்கூட்டத் தலைவர்:** பாபு ராஜேந்திர பிரசாத்.

**பொதுக் காரியதரிசி:** ஸ்ரீ அநுக்ரஹ நாராயண சின்ஹா.

**தொண்டர் படைத் தலைவர்:** ஸ்ரீ சியாமா பிரசாத் சிங்.

**ஸ்திரீ தொண்டர் படைத் தலைவர்:** ஸ்ரீமதி பிரபாவதி தேவி.

**புதிய காரியக் கமிட்டி அங்கத்தினர்கள்:** பண்டித ஜவஹர்லால் நேரு, பாபு ராஜேந்திர பிரசாத், ஆசாரியா கிருபாளினி, ச. ராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீமதி சரோஜனி தேவி, கான் அப்துல் கப்பர் கான், சேத் யமுனலால் பஜாஜ், சர்தார் வல்லபாய் படேல், புலாபாய் தேசாய், சங்கரராவ் தேவ், டாக்டர் பிரபுல்ல சந்திர கோஷ், ஜனுப் அஸப் அலி, டாக்டர் சையத் முகம்மது.

இவருடைய பிரசங்கம்தான்

அடுத்த

பக்கத்திலிருப்பது

# 53வது இந்திய தேசிய காங்கிரஸ்

## வரவேற்புக் கூட்டத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் பிரசங்கம்

### நல்வரவு

பீஹார் மாகாணம் தனியொரு மாகாணமாகத் தோன்றி 30,32 வருஷங்கள் தானாகின்றன. இதற்குள், மூன்றாவது முறையாக இப்பொழுது, இந்திய தேசிய காங்கிரஸை இங்கே நடத்தி வைக்கும் ஏற்பாடுகளைச் செய்யும் பாக்கியம் அதற்குக் கிடைத்திருக்கிறது. உங்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நல்வரவு கூறுகிறேன். இங்கே நீங்கள் தங்குவதற்காக நாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் அவற்றை நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்களென்று நம்புகிறேன். இப்பொழுது காங்கிரஸ் கூடியிருக்கும் இந்த இடம், சில மாதங்களுக்கு முன் ஒரு காடாகவே இருந்தது. இந்தக் காட்டைத் திருத்தி, மஷார்புரி என்று ஒரு நகரம் அமைத்து அங்கு ஜல வசதியும் வெளிச்ச வசதியும் ஏற்படுத்தி வைப்பதென்பது சுலபமான காரியமாயிருக்கவில்லை. ஆனால் எங்களுடைய தொண்டர்களின் உற்சாகத்தினால் சிறப்பாக இஞ்சினீரிங் சிப்பந்திகளின் உற்சாகத்தினால் இந்தக் கஷ்டங்களெல்லாம் எங்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. ஆனால் இந்த மாகாணத்திலுள்ள எல்லாரும் தங்களாலியன்றளவு பொருளையும் மனிதர்களையும் கொடுத்துதவி, இஞ்சினீர்களுடைய வேலையைச் சுலபமாக்கி விட்டார்கள். சென்ற மூன்று வார காலமாக இங்கு அதிகமான மழை பெய்தது. இதனால் ஒரு முறை செய்த வேலையை, இரண்டு முறை அல்லது மூன்று முறை திருப்பித் திருப்பிச் செய்ய வேண்டியிருந்தது. எனவே பணச் செலவு அதிகம் ஏற்பட்டது. தொண்டர்களும் அதிக சிரமப்பட வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் தைரியத்தைக் கைவிடவில்லை. இன்று நீங்கள் பார்க்கும் மஷார்புரி அவர்களுடைய தைரியத்தின் விளைவுதான். ஆதலின் உங்களனைவருக்கும் நல்வரவு கூறுவதோடு, எங்களுடன் சேர்ந்து உழைத்த, எங்களுக்கு உதவி செய்த எல்லாத் தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கிறேன்.

### மதங்களின் பிறப்பிடம்

பீஹார், ஒரு பிற்போக்கான மாகாணம் என்று கருதப்படுகிறது. இன்று

இஃது உண்மைதான். ஆனால் இந்த பீஹார் மாகாணம் எப்பொழுதும் இப்படியிருந்ததில்லை. இனியும் அப்படியிராது. ஏனென்றால், ஒரு தேசம் முன்னேறுவதற்கு என்னென்ன பொருள்கள் தேவையோ அவையெல்லாம் இந்த மாகாணத்தில் இருக்கின்றன. பீஹாரின் சரித்திரத்தைப் பற்றி விரிவாகச் சொல்வது எனக்குப் பொருந்தாது. ஏனென்றால் எனக்கு அவ்வளவு திறமையுமில்லை; உங்களுக்கு அவகாசமுமில்லை. ஆனால் இது மட்டும் கூற விரும்புகிறேன். மஹா பாரத காலம் முதல் பக்த்யார் கில்ஜி காலம் வரையில், இந்திய சரித்திரத்தில் பீஹார் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை வகித்திருந்தது. அது மட்டுமல்ல. பீஹார் மாகாணத்தின் சரித்திரமே இந்தியாவின் சரித்திரமாக அநேக தடவைகளில் இருந்து வந்திருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணனோடு போராடிய ஜராசந்தன் இந்தப் பிராந்தியத்தின் அரசனாயிருந்தான். ஜராசந்தன் வாழ்ந்து வந்ததற்கு அடையாளமாக அநேக சின்னங்கள் இப்பொழுதும் ராஜ்கீர் என்ற ஊரில் இருக்கின்றன. புத்த மதமும் ஜைன மதமும் இந்த மாகாணத்தில்தான் பிறந்தன. இந்த மாகாணத்திற்கு பீஹார் என்று பெயர் வந்ததே, புத்த விஹாரங்கள் பல நிறைந்திருந்த காரணத்தினால்தான். இந்த மாகாணத்தின் பெரும் பாகத்திலுள்ள மண் துசியானது, புத்தருடையவும், மஹா வீருடையவும் சுவடு பெற்று புனிதமடைந்திருக்கிறது. இந்த மஹான்களுடைய சின்னங்கள் பல இந்த மாகாணத்தில் ஆங்காங்குச் சிதறிக் கிடப்பதைச் சரித்திரக்காரர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். பௌத்த மதம் பிறந்து ஆயிர வருஷங்களுக்கு மேலாக வளர்ந்து, செழிப்புற்று, பின்னர் நான்கு திசைகளுக்கும் பரவியது இந்த மாகாணத்திலிருந்துதான். மஹா போதி விருட்சத்தின் கிளைகள் இலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றினின்று தோன்றிய விருட்சங்கள் பல இன்றும் அநுராதபுரத்தில் இருப்பதை நீங்கள் பார்ப்பீர்கள். இலங்கையிலிருந்து தென் துருவம் வரை புத்த மதம் பரவியிருக்கிறது. வடக்கே இந்த புத்த மதமானது நேபாளம், திபேத்து, சீனு, ஜப்பான் முதலிய எல்லா நாடுகளிலும் பரவியிருக்கிறது. கிழக்கே, பர்மா, சையாம், சுமத்ரா முதலிய பிரதேசங்களில் பரவியிருக்கிறது மேற்கில் ஆப்கானிஸ்தானம், துருக்கிஸ்தானம் முதலிய நாடுகளில் இது பரவியிருக்கிறது. இன்று, எந்த இடத்தில் புத்த மதம் பிறந்ததோ அந்த இடத்தில் அது பெயரளவுக்குத்தான் இருக்கிறது. ஆனால் மானிட சமூகத்தின் நான்கில் ஒரு பங்கினர் இந்த புத்தமதத்தினால் ஆறுதலடைந்து வருகின்றனர். ஜைன மதமோ, இந்தியாவின் எல்லைக்குள்ளேயே தன்னை வரம்பு படுத்திக் கொண்டு விட்டது. புத்த மதமும் ஜைன மதமும் ஒரே காலத்தில் ஒரே இடத்திலேயே பிறந்தன. இரண்டும் இந்தியாவில் பிறந்தன. புத்த மதம், தன் பிறந்த இடத்தை விட்டு விட்டு, உலகத்தை வென்று கொண்டு விட்டது. ஜைன மதமோ, இந்தியாவுக்குள்ளேயே தங்குவது நல்லதென்று கருதி விட்டது. இப்பொழுதும் இந்தியாவில் லட்சக் கணக்கான மக்கள் ஜைன மதத்தைப் பின் பற்றுகிறார்கள். வட பீஹாரில் பிறந்த

ஜைன மதம், கோட்டா நாகபுரி, கார்க்கண்ட் முதலிய ஊர்களின் வழியாகச் சென்று கடைசியில் குஜராத், ராஜபுதனம் முதலிய பிரதேசங்களில் தன் செல்வாக்கை உபயோகித்தது. அந்தப் பிரதேசங்களிலும் அதற்குத் தெற்கிலும் ஜைன மதத்தைப் பின்பற்றுவோர் இப்பொழுதும் பெரும்பாலோராயிருக்கின்றனர்.

## ஏகாதிபத்திய ஸ்தாபிதம்

புத்த மதம், ஜைன மதம் முதலியவை தோன்றியதால் மட்டும் பீஹார் மாகாணம் பிரசித்தி யடையவில்லை. இந்த மாகாணத்தில் பல ஏகாதிபத்தியங்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. ஆனால் இந்தக் காலத்து ஏகாதிபத்தியங்களைப் போலல்ல; அவை வேறு மாதிரியாக இருந்தன. இந்தியாவுக்கு ஜனநாயகமென்பது தெரியாதென்றும், சுயேச்சாதிகார அரசாங்கம்தான் இங்கு பெற முடியுமென்றும் சிலர் கருதுகின்றனர். பீஹார் சரித்திரம் முழுவதும் இந்தக் கருத்தை மறுப்பதாகவேயிருக்கிறது. கிரீஸ் தேசத்தில் குடியரசுகள் ஏற்பட்டு ஒன்றுக் கொன்று சண்டை போட்டுக் கொண்டிருந்த காலத்திலும், அதற்கு முன்னரும் இந்த மாகாணத்தில் அநேக குடியரசுகள் இருந்தன. இவைகளைப் பற்றி நீங்கள் விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் ஸ்ரீ கே. பி. ஜயஸ்வால் எழுதிய புத்தகத்தைப் படியுங்கள். குடியரசுகள் மறைந்த பிறகு இங்கு சந்திரகுப்த மௌரியன் ஓர் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தான். அவனுக்குப் பிறகு, பிந்துசாரன், அசோகன் முதலியோர் தோன்றி தங்கள் ஏகாதிபத்தியத்தை ஹிந்துஸ்தானம் முழுவதும் விஸ்தரித்தார்கள். அசோக ஸ்தூபிகளை இப்பொழுதும் நீங்கள் நாட்டின் பல பாகங்களிலும் காணலாம். அவனுடைய ஏகாதிபத்தியம் எவ்வளவு தூரம் விஸ்தரித்திருந்த தென்பதற்கு இவை அத்தாட்சியாகும். அவனுடைய சாஸனங்களை நாம் ஆராய்ச்சி செய்கிறபோது அந்தக் காலத்து நாகரிகம் எவ்வளவு உன்னத நிலைமையிலிருந்த தென்பது நன்கு புலனாகும். மௌரிய ஏகாதிபத்தியத்திற்குப் பிறகு குப்த ஏகாதிபத்தியம் தோன்றி, இந்தியா முழுவதிலும் பரவியிருந்தது. அந்தக் காலத்து நாகரிகத்தை எல்லாச் சரித்திரக்காரர்களும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். குப்த ஏகாதிபத்தியத்திற்குப் பிறகு பாலி வம்சத்தினர் ஆண்டு வந்திருக்கின்றனர். இவர்களும் பெரிய அரசர்களாயிருந்திருக்கின்றனர்.

இந்த ஏகாதிபத்தியங்களைப் போல் விஸ்தீரணமான ஏகாதிபத்தியம், இந்தியாவின் வேறெந்தப் பாகத்திலும் ஸ்தாபிக்கப் படவில்லை. மொகலாய ஏகாதிபத்தியத்தையும் இன்றைய பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தையும் விட இவை விஸ்தீரண முள்ளவையா யிருந்தன. ஓர் ஏகாதிபத்தியத்தின் உயர்வு அதன் நீளத்திலும் அகலத்திலும் இல்லை. மனிதனுடைய முன்னேற்றத்திற்கும் அநேக பொருள்களை பீஹார் மாகாணம் உதவியிருக்கிறது. புராதன காலத்து ரிஷிகளைப்பற்றி நீங்கள் புஸ்தகங்களிலே படித்திருக்கிறீர்கள். அவர்கள் தவஞ் செய்த இடங்களென்று உங்களுக்குச் சில இடங்கள் காட்டப்படுகின்றன. புத்தரும், மஹாவீரரும் இந்த மாகாணத்

தைச் சேர்ந்தவர்கள். சிருங்கர், கௌதமர், விஸ்வாமித்திரர், வசிஷ்டர் லோமர், துர்வாசர் முதலிய ரிஷிகள் இந்த மாகாணத்தில்தான் தவஞ் செய்தார்கள். இவர்கள் தவஞ் செய்த இடங்கள் இன்றும் யாத்திரை ஸ்தலங்களாகக் கொண்டாடப்படுகின்றன. பாணினியினுடைய வியாகரண சாஸ்திரம் பாட்னாவில் பரீட்சிக்கப்பட்டது. சாணக்கியன், உலகத்து அறிஞர்களில் ஒருவனாகக் கௌரவிக்கப்பட வேண்டியவன். அவனுடைய அர்த்த சாஸ்திரம், இக்காலத்துச் சிறந்த நூல்களோடு ஒப்பிடத்தக்கதாகும். கலீலியோ என்ற மேனாட்டு வான சாஸ்திரி பிறப்பதற்கு ஆயிர வருஷங்களுக்கு முன்னரே, இந்த மாகாணத்திலே பிறந்த ஆரிய பட்டன் என்பவன், உலகந்தான் சூரியனைச் சுற்றுகிறதே, தவிர சூரியன் உலகத்தினைச் சுற்றவில்லையென்ற உண்மையைக் கண்டு பிடித்தான். நாளந்தை, நூற்றுக்கணக்கான வருஷங்களாகப் பெரிய கல்வி ஸ்தாபனமாக இருந்திருக்கிறது. மூவாயிரம் பேருக்கு அதிகமான மாணாக்கர்களும் ஆசிரியர்களும் இங்கு ஒன்று சேர்ந்து வாழ்ந்திருக்கிறார்கள். நாளந்தை சர்வகலா சாலைக் கட்டிடங்களின் சில பாகங்கள் இப்பொழுது கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. நாளந்தையைச் சேர்ந்த பிட்சுக்கள், திபேத்துக்குச் சென்று புத்த மதத்தைப் பரப்பினார்கள்.

## எளிய வாழ்க்கை- உயரிய எண்ணம்

இன்று, உலகத்தின் பெரும் பாகம் யுத்தத்தில் இறங்கி யிருக்கிறது. மண் தரை செந்தரையாகிக் கொண்டு வருகிறது. இந்தச் சமயத்தில், அசோகனை நினைவுபடுத்திக் கொண்டு அவன் வழியைப் பின்பற்ற வேண்டுமென்று ஆவல் கொள்வது அசாத்தியமான நம்பிக்கையா? அசோகன், ஒரிஸாவை வெற்றி கொண்ட பிறகு, ரத்தஞ் சிந்துதல் பெரிய பாவமென்று கருதி, தனது ஏகாதிபத்தியத்தின் பார்வையையே மாற்றி விட்டான். தனது மகனையும் மகளையும், புதிய விதமான ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்குமாறு தூர தேசங்களுக்கு அனுப்பினான். அப்படியே நம்மிலும் சிலர் தோன்றி, ரத்தஞ் சிந்துதலை நிறுத்தி, அன்பும் சமாதானமும் நிறைந்த ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க முன்வரமாட்டார்களா? அப்படி எதிர்பார்ப்பது அசாத்தியமா? வாளாயுதத்தின் துணை கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட அந்த அசோகனுடைய ஏகாதிபத்தியம் இரண்டாயிர வருஷங்களுக்கு முன் மறைந்து போய் விட்டது. ஆனால் அதே அசோகன் அன்புத் தளையினால் கட்டப்பட்ட புதிய ஏகாதிபத்தியத்தை சிருஷ்டித்தானே அந்த ஏகாதிபத்தியம் இன்னும் ஜீவகளையோடு தானிருக்கிறது. இரண்டாயிர வருஷ சரித்திரத்தை ஒருபுறமாகத் தள்ளிவிட்டு இன்று பார்ப்போம். நமது தளகர்த்தர் அந்நிய நாடுகளிலிருந்து திரும்பி வந்ததும் இங்கிருந்துதான் அந்தப் பழைய அன்பு முறையைக் கையாண்டார். அதாவது, காந்தியடிகள் இங்கிருந்துதான் சத்தியாக்கிரகத்தின் முதல் பாடத்தை நமக்குக் கற்பித்தார். இந்த இரண்டாயிர வருஷ சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்த்தோமானால், இந்தப் பிரதேசத்தில் ஆதியிலிருந்து வசித்துக் கொண்டிருந்தவர்களாகட்டும், புதி

தாக வந்தவர்களாகட்டும் எல்லோருமே சேர்ந்து இந்தப் பிரதேசத்தின் அபிவிர்த்திக்குப் பாடு பட்டிருக்கிறார்கள். ஷேர்கான் என்பவன் மற்றப் போர் வீரர்களோடு தானும் ஒருவனுயிருந்து கையிலே மண் வெட்டி தாங்கி யுத்தகளத்தில் பள்ளங்கள் தோண்டிக்கொண்டிருந்தபோது மொகலாய சக்கிரவர்த்தியின் ஸ்தானிகனை வசவேற்றது எதைக் காட்டுகிறது? எளிய வாழ்க்கைக்கும் உயரிய எண்ணத்திற்கும் இஃதொரு உதாரணமாக இல்லையா? இவை இரண்டுந்தானே நமது பெருமைக்கும் புகழுக்கும் அஸ்திவாரமா யமைந்திருக்கின்றன.

## ஆதிவாசிகள்

இன்று எந்தப் பிரதேசத்தில் இந்த காங்கிரஸ் மகா சபை கூடியிருக்கிறதோ, அந்தப் பிரதேசம் விசேஷத் தன்மை நிறைந்ததா யிருக்கிறது. இந்தப் பிரதேசத்தின் அழகுக்கு இணையாவதொன்றுமில்லை. இதனுடைய சரித்திரமும் மகா அற்புதமானது. இந்தியாவின் பூர்வீகக் குடிகள் என்று கருதப்படுவோர் இங்கேதான் வசிக்கின்றார்கள். இவர்களுடைய நாகரிகம் மற்றவர்களுடைய நாகரிகத்திற்கு மாறுபட்டதா யிருக்கிறது. இங்கு பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பல அடையாளங்கள் இந்த நாகரிகத்தின் பூர்வீகத் தன்மையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. 'ஆதிவாசிகள்' என்று சொல்லப்பட்ட பூர்வீகக் குடிகள் ஆரியர்களினின்றும் வேறு பட்டவர்கள். இவர்களுடைய சந்ததியார் இந்தியாவின் தென் கிழக்கு மூலையிலும், அடுத்தாற்போலுள்ள தீவுகளிலும் பரவியிருக்கிறார்கள். இந்த இடங்களில் இவர்களுடைய நாகரிகம் இன்னும் காப்பாற்றப்பட்டு வருகிறது. இதனால் ஆரியர்களும், ஆதிவாசிகளும் ஒருவருக்கொருவர் கலந்து பழகாமலிருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. கொள்வினை, கொடுப்பினை முதலியன இருவருக்கும் இடையில் நிறைய நடைபெற்றிருக்கின்றன. ஆரியர்களும், இந்த ஆதிவாசிகளும் பரஸ்பரம் ஒருவரிடமிருந்து மற்றொருவர் அநேக விஷயங்களைக் கிரகித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாமிருந்தும் இந்த ஆதிவாசிகள் தனியாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். பீகார் மாகாண வாசிகளின் முகத் தோற்றம், மண்டையின் வடிவம், அவர்களுடைய பார்வை முதலியனவெல்லாம் இந்த ஆதிவாசிகளின் முத்திரையைப் பெற்றிருக்கின்றன என்பது அறிஞர்களின் கருத்து. இந்தப் பீகாரிகளும், ஆதிவாசிகளும் நெருங்கிய பழக்கங் கொண்டுவிட்டார்கள். ஹஸரிபாக் பிரதேசத்தில் பேசப்படும் பாஷையானது தெற்குப் பீகாரின் பாஷையாகும். அதாவது மாகதி யென்று பெயர். ராஞ்சி பிரதேசத்தில் பேசப்படும் பாஷைக்கு நாகப்புரியா என்று பெயர். இந்த நாகப்புரியா பாஷையானது மேற்குப் பீகாரின் போஜபுரி பாஷையின் ஒரு கிளையென்று பண்டிதர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். பீகாரில் மட்டும் ஆரியர்களுக்கும் ஆதிவாசிகளுக்கும் கலப்பு ஏற்பட்டிருக்கிறதென்று நீங்கள் கருத வேண்டாம். பர்மாவிலிருந்து இந்தோ சைனு வரையில் உள்ள நாகரிகத்தின் ஊடே நமது நாகரிகம் ஊடுருவிச் சென்றிருக்கிறது ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்கு முன்னர்

சம்பா (பகல்பூர்) பிரதேசத்திலிருந்து சென்று இந்தோ சைனாவில் குடியேறி அங்கும் சம்பா என்ற பெயருடன் ஒரு குடியேற்ற நாட்டை ஸ்தாபித்தார்கள். பீகாரின் சரித்திரத்தில் இதுவொரு முக்கியமான அம்சமாகும்.

கடவுள் இந்த மாகாணத்தைச் செல்வம் நிறைந்த மாகாணமாகச் சிருஷ்டித்திருக்கிறார். இந்த மாகாணத்தின் வட பாகம், இந்தியாவின் மற்றெந்த பாகத்தையும் விட செழிப்புள்ளதாயிருக்கிறது. இங்கு எந்த விதமான தானியத்தையும சாகுபடி செய்யலாம். மாகாணத்தின் தெற்குப் பிராந்தியத்தில் அநேக சுரங்கங்கள் இருக்கின்றன. இந்தியாவின் மொத்த நிலக்கரி உற்பத்தியில் மூன்றில் இரண்டு மடங்கு இந்த மாகாணத்திலிருந்துதான் உற்பத்தியாகிறது. மற்றும், இரும்பு, செம்பு, அலுமினியம் முதலியவைகளும் இந்த மாகாணத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன. நீங்கள் உட்கார்ந்திருக்கிற இடத்திலிருந்து, சற்று எட்டித் தெரியும் காடுகளின் அழகை அநுபவிக்கலாம். இந்தக் காடுகளிலிருந்து ஏராளமான பொருள்கள் கிடைக்கின்றன. அரக்கு இங்கு அதிகமாகக் கிடைக்கிறது.

### ஏழை மாகாணம்

நமது புராதன சரித்திரப் பெருமை, தற்போது கிடைக்கும் ஏராளமான மூலப் பொருள்கள் இவையெல்லாம் இருந்தும், இந்த மாகாணம் ஏழ்மையாயிருக்கிறது. நாம் கல்வியில் பிற்போக்குள்ளவர்களாயிருக்கிறோம். தற்போதைய நவீன வியாபார முறைகளில் மற்றவர்களோடு நம்மால் போட்டி போட முடியவில்லை. காந்தியடிகளை இந்த மாகாணம் குருட்டுத்தனமாகப் பின்பற்றுகிற தென்று சிலர் கூறுகின்றனர். இதுவும் உண்மைதான். ஏன் அப்படிப் பின் பற்றக் கூடாது? சமீபத்தில், அவர்தான் நம்மையும், இந்தியாவின் மற்றப் பாகத்தினரையும் கண் விழிக்கச் செய்தவர். அவர் கோலிய வழியில் நின்று வேலை செய்வதை நாம் பெருமையாகக் கொள்கிறோம். அப்படிச் செய்வதற்கு, நமக்குப் போதிய பலத்தை அளிக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

'இந்த மனிதன் என்ன: பழைய கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். பழைய சரித்திரம் நமக்குத் தேவையில்லை. பழமையைத் திரும்பிப் பார்ப்பதும் அநாவசியம். இந்தஉலகத்திலுள்ள அனைத்தையும் தலை கீழாகக் கவிழ்த்து விடக் கூடிய புரட்சியின் கதவை நாம் தட்டிக் கொண்டிருக்கிறோம். எந்தப் பக்கமாச் சுழல்கிறதென்று கூடச் சொல்ல முடியாதபடி அவ்வளவு வேகமாக இந்த உலகம் போய்க் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க இந்த மனிதர் பழங்கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்' என்று நீங்கள் கூறலாம். இவற்றைப்பற்றியெல்லாம் நம் தலைவர், ஆதார பூர்வத்துடன் கூறுவார். அவருடைய இந்த வேலையை அபகரித்துக் கொள்ள எனக்கு ஆவலுமில்லை; திறமையுமில்லை.

### பழமையிலிருந்து ஒரு பாடம்.

ஆயினும், பழமையிலிருந்து நாம்

ஒரு பாடங்கற்றுக் கொண்டு அதன் மூலமாக ஓர் உணர்ச்சி பெறலாம். அப்படிப்பட்ட ஓர் உதாரணத்தை உங்களுக்கு எடுத்துக் காட்டி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். முற்காலத்தில் தெற்கு பிஹாரில் அஜாத சத்ரு என்ற ஓர் அரசன் ஆண்டு கொண்டிருந்தான். அப்பொழுது, வடக்கு பிஹாரில் வஜ்ஜியர்களுடைய குடியரசு அரசாங்கம் செழித் தோங்கி யிருந்தது. அஜாதசத்துரு, இந்த வஜ்ஜியர்களின் பிரதேசத்தை வெற்றி கொண்டு, தன் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டு விட வேண்டு மென்று ஆசை கொண்டான். அப்பொழுது, அஜாத சத்துருவின் ராஜ்யத்திற்குத் தலை நகராயிருந்த ராஜ கிருஹத்திற்கு கௌதம புத்தர் விஜயஞ் செய்தார். அவரிடம், அஜாதசத்துரு, தமது மந்திரியை அனுப்பி, வஜ்ஜியர்களின் மீது, தான் படை யெடுப்பதைப்பற்றி அவருடைய அபிப்பிராயம் என்ன வென்பதை அறிய விரும்பினான். அப்பொழுது புத்தர், தமது சிஷ்யராகிய ஆனந்தரைப் பார்த்து ஏழு கேள்விகள் கேட்டார். அவைகளுக்குக் கிடைத்த பதில்களையே அஜாத சத்துருவுக்கும் தெரிவித்தார். ஆனந்தரைப் பார்த்து, புத்தர் கேட்டார்: —ஆனந்தா! வஜ்ஜியர்கள் அடிக்கடி தங்கள் சபையைக் கூட்டுகிறார்களா? இந்தச் சபைகளுக்கு எல்லா ஜனங்களும் வருகிறார்களா?' இதற்கு ஆனந்தர் 'ஆம்' என்று பதிலளித்தார். அப்பொழுது புத்தர் சொன்னார்:— 'வஜ்ஜியர்கள் அடிக்கடி சபை கூடுகிற வரை, அந்தச் சபைகளுக்கு எல்லாரும் வருகிறவரை, அவர்களுக்கு முன்னேற்றந்தானே தவிர அழிவில்லை.'

இதேமாதிரி, புத்தர்பிரான் இன்னும் ஆறு கேள்விகளைக் கேட்டு அவற்றிற்குத் திருப்திகரமான பதிலைப் பெற்று விட்டார். பின்னர், அஜாத சத்துருவின் மந்திரியைப் பார்த்து பின்வருமாறு கூறினார்:—வஜ்ஜியர்கள் ஒன்றாகக் கூடுகிறவரை, ஒன்றாக வேலை செய்கிறவரை, தங்களுடைய தேசியக் கடமைகளை ஒன்றாகச் செய்து கொண்டிருக்கிற வரை, யதேச் சாதிகாரமான உத்திரவுகளை அவர்கள் விடுக்காத வரை, தாங்கள் ஏற்படுத்திக் கொண்ட சட்டத்தை அநுசரித்து நடக்கிறவரை, அவர்களுடைய பெரியோர்களுக்கு மரியாதை செலுத்திக் கொண்டிருக்கிற வரை, அவர்களுடைய புத்தியைக் கேட்டுக் கொண்டிருக்கிறவரை, பெண்கள் விஷயத்தில் கடுமையாக நடந்து கொள்ளாத வரை, தேவாலயங்களுக்கு மரியாதை செலுத்திக் கொண்டிருக்கிற வரை, அந்தத் தேவலாயங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் திரவியங்களைப் பறிமுதல் செய்யாத வரை, அர்ஹத்துகளுக்கு (துறவிகளுக்கு) பாதுகாப்பு அளித்துக் கொண்டிருக்கிற வரை, வெளி நாட்டிலிருந்து அர்ஹத்துகள் வந்து குடியேறவும், தங்கள் நாட்டிலுள்ள அர்ஹத்துக்கள் சௌக்கியமாக இருக்கவும் செய்து கொண்டிருக்கிற வரை, அவர்கள்—அந்த வஜ்ஜியர்கள்— சௌக்கியமாக வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு நீங்கள் ஒரு விதமான தீங்கும் செய்யக் கூடாது.'

இதைக் கேட்டதும், அஜாத சத்துரு, வஜ்ஜியர்களை, தன் சேனை கொண்டு வெற்றி கொள்ள முடியாதென்று தீர்மானித்து விட்டான்.

தேசங்களின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாயிருக்கிற இந்த ஏழு நியாயங்களும் இன்று கூட எவ்வளவு உண்மையாயிருக்கின்றன! இவை 2500 வருஷங்களுக்கு முன்னர் உபதேசிக்கப்பட்டன வென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

### நெருக்கடிக்கு முன்னர்

ஜீவ நாடியுள்ள எந்தச் சமுதாயத்திலும் அபிப்பிராய வேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும். இவற்றைத் திறமையுடன் சமாளிப்பதுதான் பண்பட்ட சமுதாயத்தின் அறிகுறியாகும். காங்கிரஸைப் பொறுத்த மட்டில், நாம் ஒன்றாக இருந்து, ஒன்றாக வேலைசெய்து, ஒன்றாகவே நமது தேசீயக் கடமைகளைச் செய்து வருகிறோம் என்று சொல்ல முடியுமா? நாம் வகுத்துக்கொண்ட விதிகளை மீறி நாம் நடக்கவில்லை யென்று சொல்ல முடியுமா? நாம்மொத்தமாக, காங்கிரஸ் விதிகளுக் குட்பட்டு நடக்கிறோமென்று சொல்ல முடியுமா? நாம் மூத்தோர்களுக்கு மரியாதை கொடுத்து, அவர்களுடைய ஆலோசனையைக் கேட்கிறோ மென்று சொல்ல முடியுமா? இந்தக் கேள்விகளுக்கு உடன் பாட்டு முறையில் பதிலளிக்கிறதைப் பொறுத்திருக்கிறது நம்முடைய சக்தியும். வஜ்ஜியர்களுடைய சபைகளைப் பார்த்து, புத்தர் ஒரு சமயம் பிட்சுக்களிடம் கூறினார்: 'இந்தச் சபையைப் பாருங்கள்; தேவர்களுடைய சபை எப்படியிருக்குமென்பதை இதைப்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.' இப்பொழுது நம்மிடம் கட்டுப்பாடு இல்லையென்றும், பலாத்காரம் நிறைந்திருக்கிறதென்றும் குறை கூறிக் கொண்டிருக்கும் மகாத்மா காந்தி, அப்படிச் சொல்லாமல், புத்தர், தமது பிட்சுக்களைப் பார்த்துச் சொன்னது போல், தமது ஆசிரமத்துப் பெண்களிடம் இந்தக் காங்கிரஸைப் பற்றிக் கூறும் படியாக நாம் ஏன் நடந்து கொள்ள முடியாது?

இன்று, ஒரு பெரிய நெருக்கடிக்கு முன்னர் நாம் நின்று கொண்டிருக்கிறோம். அதனைச் சமாளிக்கத்தயாராயிருக்க வேண்டு மென்று நமக்குச் சொல்லப்படுகிறது. பிற்போக்காயுள்ள பிஹாரிகள், தைரியமும் பலமும் பெற்று, உங்களுக்கு வரவேற்பளிப்பதோடு, நீங்கள் நிறைவேற்றப் போகிற தீர்மானத்தைச் செயலில் கொணர வேண்டி, மேலே சொன்ன கதை, நமக்கு உணர்ச்சியை யூட்டாதா?

கடைசி முறையாக ஒரு வேண்டுகோள். நாம் இப்பொழுது சரியாக ஓர் அடியெடுத்து வைத்தால், நமது பிற்காலம் பிரகாசமாயிருக்கும்; தவறாக ஓர் அடி எடுத்து வைத்தால் நமது போக்கு தடைப்பட்டு விடும். இந்த மாதிரியான நிலைமை, ஒரு தேசத்திற்கோ, ஒரு சமுதாயத்திற்கோ எப்பொழுதோ ஒரு தடவைதான் ஏற்படுகிறது. காங்கிரஸ், தேசத்திற்குப் பொதுவான தொரு ஸ்தாபனம். இந்தியாவின் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும் மகத்தான வேலையை அது ஏற்றுக் கொண்டிருக்கிறது. இது விஷயத்தில் நம்மிலே ஒவ்வொருவரும் தங்கள் சொந்தப் பொறுப்பை உணர வேண்டும். நமது புறக்கணிப்பின் காரணமாகவோ, நமது சோம்பேறித் தனத்தினாலோ, இந்த

வேலைக்குத் தடை ஏற்படக்கூடாது. உணர்ச்சி வேகத்திலே தவறான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு, காரியத்தைக் கெடுத்துவிடவும் கூடாது. தேசத்திற்குச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுக்கும் வேலை, காங்கிரஸ் தலைவருடையது, அல்லது மகாத்மா காந்தியினுடையது, அல்லது மற்றத் தலைவர்களுடையது என்று கருதி நாம் சும்மா யிருக்கக் கூடாது. இந்த மகத்தான முயற்சியில், நம் ஒவ்வொருவருடைய பங்கு என்னவென்பதை நிர்ணயித்துக் கொண்டு அம்முறையிலேயே வேலை செய்ய வேண்டும். வேலையிலும் தியாகத்திலும் மட்டும் அல்ல பங்கு; வருங்கால வேலைத் திட்டத்தை நிர்ணயிப்பதிலும் நாம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். இது விஷயத்தில் நமது திறமைக்குத் தகுந்தபடி நமது பங்கைச் செலுத்த வேண்டும். ஆனால் இதுவிஷயததில் நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்ட பிறகு கடைசி வரையில் நாம் முனைந்து வேலை செய்யவேண்டும். நீங்கள் இங்கே என்ன முடிவுக்கு வருகிறீர்களோ, அதன்படி நாங்கள் நடக்கத் தவறமாட்டோம் என்று இந்த மாகாண வாசிகளின் சார்பாக உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இங்ஙனம் உறுதி கூறுவதுதான் உங்களுக்கு நாங்கள் அளிக்கும் வரவேற்பாகும். இந்தச் சபையின் பொறுப்பை யேற்றுக் கொண்டு இதன் நடவடிக்கைகளை நடத்தி வைக்குமாறு தலைவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

## தலைவர் மௌலானா அபுல் கலாம் அஸாத் பிரசங்கம்.

### எனது நன்றி

நண்பர்களே!

**1923**-ம் வருஷம் இந்தத் தேசிய சபைத் தலைவனாக என்னைத் தெரிந்தெடுத்தீர்கள். இப்பொழுது இரண்டாவது முறை, பதினேழு வருஷங்கள் கழித்து, அதே கௌரவத்தை மீண்டும் எனக்களித்திருக்கிறீர்கள். தேசியப் போராட்ட சரித்திரத்தில், பதினேழு வருஷ காலம் ஒரு நீண்ட காலமல்ல. ஆனால் இப்பொழுது காலமும் உலகமும் வெகு வேகமாக மாறிக்கொண்டு வருவதால், நமது பழைய வான் முறைகள் இப்பொழுது பொருந்தா. இந்தப் பதினேழு வருஷ காலத்தில் நாம் பல நிலைகளைக் கடந்திருக்கிறோம். வழியில் பல இடங்களில் இளைப்பாறி யிருக்கிறோமென்பது உண்மை. ஆனால் எங்கும் நின்றதே கிடையாது. வழியிலே சந்திக்கிற ஒவ்வொரு பிரச்னையையும் நாம் பரிசீலனை செய்தோம்; பரீட்சித்தோம். ஆனால் அவைகளைக் கண்டு மயங்கியதில்லை; மேல் நோக்கியே சென்றோம். பல ஏற்றங்களையும் இறக்கங்களையும் நாம் சந்தித்தோம். ஆனால் நமது லட்சியத்தினின்று பார்வையைத் திருப்பியதே கிடையாது. உலகத்தினர் நமது நோக்கங்களையும், உறுதியையும் கண்டு சந்தேகித்திருக்கலாம்; ஆனால் நமக்கு எவ்வித சந்தேகமும் ஏற்பட்டதே கிடையாது. நமது பாதை அநேக இடையூறுகள் நிறைந்தா

யிருந்தது; நாம் எடுத்து வைக்கிற ஒவ்வோர் அடியிலும் இடையூறுகள் பல எதிர் நின்றன. நாம் விரும்பிய படி நாம் வேகமாகச் செல்லாமலிருந்திருக்கலாம். ஆனால் நாம் முன்னோக்கிச் சென்றதினின்றும் பிறழ்ந்ததே கிடையாது. 1923-ம் வருஷத்திற்கும் 1940-ம் வருஷத்திற்கும் இடையிலேயுள்ள காலத்தை நாம் பார்க்கிறபோது, 1923-ம் வருஷம், எங்கோ தூரத்திலே தெரிகிற ஒரு சின்னம் போலிருக்கும். 1923-ம் வருஷத்திலேயே நாம் நமது லட்சியத்தை யடைய விரும்பினோம். ஆனால் அப்பொழுது நமது லட்சியம் வெகு தொலைவிலிருந்தது. மைல் கற்கள் கூட நமது கண்களுக்குத் தெரியாமல் மறைந்திருந்தன. இன்று தலை நிமிர்ந்து பாருங்கள். மைல் கற்கள் நன்கு தெரிகின்றன. அதுமட்டுமல்ல; லட்சியங்கூட வெகு தொலைவினதா யில்லை. ஆனால் இது மட்டும் நமக்கு நன்கு விளங்குகிறது. அதாவது லட்சியத்திற்கருகாமையில் செல்லச் செல்ல, நமது போராட்டமும் மும்முரமாகிறது, சம்பவங்கள் வெகு வேகமாக நடைபெறுவதன் காரணமாக, நாம் பழைய இடத்திலிருந்து அதிக தூரம் முன்னேறிச் சென்றிருக்கலாம்; நமது லட்சியத்திககுச் சமீபமாகவும் வந்திருக்கலாம். ஆயினும்நமக்குப் புதிய சங்கடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இன்று நமது பிரயாணம் ஒரு நெருக்கடியான நிலைமையை யடைந்திருக்கிறது. இப்பொழுது சரியானபடி காலடி எடுத்து வைத்தோமானால், நமது லட்சியத்தின் சமீபத்தை யடைந்து விடலாம். தவறாகக் காலடி எடுத்து வைத்தோமானால் புதிய தொந்திரவுகளிலே நாம் சிக்கிக்கொள்ளக்கூடும்.

இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில் என்னை நீங்கள் தலைவனாகத் தெரிந்தெடுத்திருக்கிறீர்கள். அதன் மூலமாக, உங்கள் சகோதரத் தொண்டன் ஒருவனிடம் உங்களுக்குள்ள நம்பிக்கையையும் நன்கு தெரியப்படுத்தி யிருக்கிறீர்கள். இஃதொரு பெரிய கௌரவந்தான்; ஆனால் பொறுப்புடையதுங்கூட. இந்தக் கௌரவத்தை எனக்கு நீங்கள் அளித்ததற்காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்தப் பொறுப்பை நிர்வகிப்பதற்கு உங்கள் உதவியையும் வேண்டுகிறேன். நீங்கள் என்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறீர்களோ அவ்வளவு எனக்கு ஆதரவையும் அளிப்பீர்களென்று நம்புகிறேன்.

## இன்றைய பிரச்னை

இப்பொழுது நம்முன் நிற்கிற பிரச்னையைப்பற்றி உடனே ஆராய்வோம். அதாவது, 3-9-1939-ல் யுத்தம் ஏற்பட்டதின் விளைவாக நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் நம்மை எவ்வளவு தூரத்திலே கொண்டு போய் விட்டிருக்கின்றன; நாம்இப்பொழுது எங்கேயிருக்கிறோம் என்பவைகளை நாம் கவனிக்க வேண்டும். காங்கிரஸ் சரித்திரத்திலேயே 1936-ம் வருஷம் நடைபெற்ற லட்சுமணபுரி காங்கிரஸ் ஒரு புதிய லட்சியத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. அப்பொழுது காங்கிரஸ் சர்வதேசநிலைமையைப்பற்றி நீண்டதொரு தீர்மானம் நிறைவேற்றி அதில் தன்னுடைய கருத்தைப் பொது ஜனங்களுக்குத்

தெளிவாக எடுத்துக் காட்டியது. அதற்குப் பிறகு ஒவ்வொரு காங்கிரசிலும் சர்வதேசப் பிரச்னையைப்பற்றி ஆராய்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றுவது அவசியமான ஓர் அம்சமாகிவிட்டது. ஆகையால் இந்த யுத்தத்திற்குப் பிறகு நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையானது மிகுந்த தீர்க்காலோசனையுடனே ஏற்பட்டதாகும். சர்வதேச நிலைமையைப்பற்றி நாம் அவ்வப்பொழுது நிறைவேற்றி வரும் இந்தத் தீர்மானங்களில் இரண்டு விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறோம். நமது தற்போதைய நிர்க்கதியான நிலைமையில் வெளியுலகத்திலே நடைபெறுகிற அரசியல் பிரச்னைகளிலிருந்து இந்தியர்களாகிய நாம் ஒதுங்கியிருக்க முடியாது என்பதை உணர்கிறோம். நாம் முன்னேறிச் சென்று கொண்டிருந்தாலும் நமது எதிர்காலத்தை நாம் வகுத்துக்கொள்ளுகிற விஷயத்திலும் நமது சுற்றுப்புறங்களுக்குள்ளேயே நாம் அடங்கி விடக்கூடாது. வெளியுலகத்திலே என்ன நடைபெறுகிறதென்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். உலகத்தில் ஏற்பட்ட பல மாறுதல்களின் விளைவாக அநேக தேசங்களும், அநேக சமுதாயங்களும் ஒன்றுக்கொன்று நெருங்கி வந்திருக்கின்றன. இதனால் உலகத்தின் ஒரு மூலையில் ஏற்படுகிற எண்ணமோ, செய்யப்படுகிற செயலோ மற்ற இடங்களிலும் உடனே பிரதிபலிக்கிறது. இதனால் இந்தியா தன்னைத் தனியாக வகுத்துக் கொண்டு எந்தப் பிரச்னையையும் ஆராய்ச்சி செய்ய முடியாது. வெளியுலகத்திலே நடைபெறுகிற சம்பவங்கள் இந்தியாவிலும் பிரதிபலிக்கத்தான் செய்யும். அது போலவே நம்முடைய முடிவுகளும் நமது நிலைமைகளும் வெளியுலகத்தைப் பாதிக்கத்தான் செய்யும். நாம் இதுகாறும் செய்து வந்த தீர்மானங்களுக்கு அடிப்படையாயிருப்பவை இந்த எண்ணமும் நம்பிக்கையுந்தான். இந்தத் தீர்மானங்களின் மூலமாக ஜனநாயகத்திற்கும், தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் விரோதமாகக் கிளம்பியுள்ள பாசிஸம், நாஜீயம் முதலாய பிற்போக்கான இயக்கங்களின் மீது நமக்கேற்பட்டிருக்கும் வெறுப்பைத் தெரிவித்திருக்கிறோம். இந்த இயக்கங்கள் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றன. இவை உலக முன்னேற்றத்திற்கும், சமாதானத்திற்கும் பேராபத்தாயுள்ளவையென்று இந்தியா கருதுகிறது. இந்தியாவின் அறிவும் இருதயமும், ஜனநாயகத்திற்கும் சுதந்திரத்திற்கும் ஆதாவு கொடுத்து இந்தப் பிற்போக்கான இயக்கங்களை எதிர்த்து நிற்கிற ஜனங்களுடன் கூடவே இருக்கின்றன.

## பழைய ஆபத்து

பாசிஸம், நாஜீயம் இவைகளின் மூலமாக ஏற்படுகிற ஆபத்துகளை நாம் யோசித்துக் கொண்டிருக்கிற இதே சந்தர்ப்பத்தில் இவற்றை விட நீண்டகால ஆபத்துடையதும், மற்ற தேசங்களின் சமாதானத்துக்கும், சுதந்திரத்திற்கும் அழிவு தரக் கூடியதுமான பழைய ஆபத்தைப் பற்றியும் யோசனை செய்ய வேண்டியிருக்கிறது. உண்மையில் இந்தப் பழைய ஆபத்துதான் புதிய ஆபத்துக்களைக் கொண்டு வந்திருக்கிறது. நான் எதைப் பற்றிக் குறிப்பிடுகின்றே

னென்பதைச் சொல்லத் தேவையில்லை. அதுதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். மேற்படி பாசிஸம், நாஜீயங்களைப் போல் இந்த ஏகாதிபத்தியத்தை நாம் எட்டி நின்று பார்க்கின்றோமில்லை. அது—அந்த ஏகாதிபத்தியம்—நமது வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது. நம்மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இந்தக் காரணத்தினாலேயே, ஐரோப்பாவிலேற்பட்டிருக்கிற சிக்கல்களின் விளைவாக, இந்தியாவும் ஒரு யுத்தத்தில் சிக்க விடப் படுமானால் அதில் அது—இந்தியா—தன்னைச் சம்பந்தப் படுத்திக் கொள்ளாது என்று நாம் தெரிவித்திருக்கிறோம். தன் இஷ்டப்படி தீர்மானங்களைச் செய்யும் நிலைமை அதற்கு ஏற்பட்டால்தான் இவைகளைப்பற்றி அது யோசனை செய்யும்.

நாஜீயம், பாசிஸம் இவைகளை இந்தியா சகித்துக் கொண்டிருக்க முடியாது. அதே சமயத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைக் கண்டு இந்தியா சலித்தும் போய் விட்டது. இந்தியா அதன் இயற்கையான சுதந்திரத்தினின்றும் பறிக்கப்பட்டிருக்குமானால் அதன் அர்த்தம் என்ன? தான் வாழ வேண்டும் என்ற எண்ணந்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் இருக்கிறது என்பதுதான் அதன் அர்த்தம். ஏகாதிபத்தியத்தின் வெற்றிக்கு இந்தியா எந்த விதத்திலும் துணை செய்யாது. இந்த இரண்டாவது அம்சத்தை மேற்படி தீர்மானங்களில் காங்கிரஸ் அடிக்கடி வலியுறுத்தி யிருக்கிறது. லட்சுமணபுரி காங்கிரசிலிருந்து 1939ம் வருஷம் ஆகஸ்டு மாதம் வரையில் இக்தக் தீர்மானங்கள் ஒவ்வொரு தடவையிலும் நிறைவேற்றப் பட்டு வந்திருக்கின்றன.” இவைகளுக்கு யுத்தத் தீர்மானங்கள் என்று பெயர்.

## 150 வருஷப் பழக்கம்

காங்கிரஸின் இந்தத் தீர்மானங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முன்னர் இருந்தன. 19 9ம் வருஷம் ஆகஸ்டுமாதம் மூன்றாவது வாரத்தில் யுத்த மேகங்கள் திடீரென்று கவிந்து கொண்டன. செப்டம்பர் மாதம் முதலில் யுத்தம் தொடங்கி விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் கொஞ்சம் நிதானித்துத் திரும்பிப்பார்க்க வேண்டும். சென்ற ஆகஸ்டு மாதத்தில் இருந்த நிலைமையென்ன? 1935ம் வருஷத்து இந்தியா அரசாங்கச்சட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் மீது பலவந்தமாகத் திணித்தது. பழைய தந்திர முறைப்படி இந்தியாவுக்கு ஓரளவு உரிமையை அளித்து விட்டதாக உலகுக்குப் பகிரங்கப்படுத்தி விட்டது. இந்தச்சட்டத்தை நிராகரிப்பதாக காங்கிரஸ் செய்த தீர்மானம் உலகத்திற்கு நன்கு தெரியும். ஆயினும் காங்கிரஸ் போராட்டம் வேண்டாமென்று கருதி ஓய்வு கொள்ள நினைத்தது. சில நிபந்தனைகளின் மீது மாகாண அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள அது தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்திற்குப் பிறகு காங்கிரஸ் மந்திரிச் சபைகள் அமைந்து எட்டு மாகாணங்களில் வெற்றிகரமாக வேலை செய்து வந்தன. இப்படியே இவை நடைபெற்று வருதல் தனக்குச் சாதகமன்று என கிரேட் பிரிட்டன் கருதியது. மற்றொரு விஷயத்தையும் இங்கு கவனிக்கவேண்டும். யுத்தத்தைப் பொறுத்தமட்டில் நாஜி ஜெர்மனியை இந்தியா கண்டித்திருக்கிறது. அதன்

அனுதாபமெல்லாம் ஜனநாயக தேசங்களுக்குத்தான். இது பிரிட்டனுக்குச் சாதகமான விஷயம். இந்த நிலைமையில் பிரிட்டனானது தன்னுடைய பழைய முறைகளைக் கை விட்டு விட்டு ஒரு புதிய நிலைமையில் தான் மூச்சு விட்டுக் கொண்டிருப்பதாக இந்தியாவை உணரும்படி செய்யுமென்று யாருமே எதிர்பார்த்திருப்பர். இந்த விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் எப்படி நடந்துகொண்டதென்பது நம்மெல்லோருக்கும் தெரியும். அதன் முறைகளில் மாற்றம் இருப்பதாகிற சூசகங்கள் ஒன்றுமே தென்படவில்லை. 150 வருஷப் பழக்கமுள்ள ஏகாதிபத்தியம் மாதிரியே அது நடந்து வருகிறது. இந்தியாவுக்கு, அதன் அபிப்பிராயத்தைச் சொல்ல சந்தர்ப்பம் கொடாமலே அது—கிரேட் பிரிட்டன் யுத்தத்தில் தலையிட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினால் வெறும் காட்சிக்காகத் திணிக்கப்பட்ட ஜனப் பிரதிநிதி சபைகள் கூட, தங்கள் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்த எவ்வித சந்தர்ப்பமும் அளிக்கப்படவில்லை.

ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து, தென்னாப்பிரிக்கா, ஐர்லாந்து, முதலிய எல்லா நாடுகளும் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டன. இது மட்டுமல்ல; ஐர்லாந்து மத்தியஸ்தமாயிருக்க வேண்டுமென்று தீர்மானித்த போது, இதைக் குறித்து இங்கிலாந்திலுள்ளவர் யாவரும் ஆச்சரியப்படவில்லை; இதைக் கண்டிக்கவுமில்லை. மற்றும், ஸ்ரீ டிவேலரா என்ன சொன்னாரென்றால், அல்ஸ்டர் விஷயம் சௌகரியமாக முடிவு செய்யப்பட்டாலன்றி, கிரேட் பிரிட்டனுக்கு எந்தவிதமான உதவியும் செய்ய முடியாதென்று கூறினார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியாவின் ஸ்தானம் என்ன? பிரிட்டனானது, தனது தாராள மனப்பான்மையுடன் இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டந்தஸ்தைக் கொடுக்குமென்று சொல்லப்படுகிறது. சமீபத்தில் இந்த அந்தஸ்து கொடுக்கப்படுமென்று சொல்லப்படுகிறதே தவிர எப்பொழுதென்று சொல்லப்படவில்லை. யுத்தம் ஆரம்பித்ததும்—இந்த யுத்தம் ஒரு மகத்தான யுத்தமாயிருக்குமென்று நான் நம்புகிறேன்—இந்தியா, திடீரென்று இந்த யுத்தத்தில் தள்ளப்பட்டது. தான் அப்படிப் பிரவேசிப்பதாக அதற்குத் தெரியக் கூட இல்லை. இதைக் கொண்டே காற்று எந்தப் பக்கம் அடிக்கிறதென்று நாம் தெரிந்து கொள்ளலாம். ஆனால் நாம் அவசரப்படத் தேவையில்லை. இன்னும் பல சந்தர்ப்பங்கள் நமக்கு வரப் போகின்றன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உண்மையான நிலைமையை நெருங்கி நின்று நாம் பார்க்க நேரிடும்.

## நாஜீயமும் பாசிஸமும்

1914ம் வருஷம் பால்கன் தீபகற்பத்தின் ஒரு மூலையில் யுத்தப் பொறி பற்றிக் கொண்டவுடன், இங்கிலாந்தும் பிரான்ஸும் சேர்ந்து கொண்டு, சிறிய தேசங்களின் உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று கத்தின. பின்னர், பிரசிடெண்ட் வில்ஸனுடைய பதினான்கு தத்துவங்கள்

களைத்தப்பட்டன. இவற்றின் கதி என்னவாயிற்றென்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான். அப்பொழுதைய நிலைமை வேறு விதமாயிருந்தது. சென்ற யுத்தத்தில் ஏற்பட்ட வெற்றியின் காரணமாக, பிரான்ஸும் பிரிட்டனும் சேர்ந்து ஒரு புதிய முறையைக் கையாள ஆரம்பித்தன. இதனால் விபரீதமான விளைவுகள் ஏற்பட்டன. இந்த விளைவுகள் வளர்ச்சியுமடைந்தன. இதன் பரிணாமம் என்ன? இத்தலியில் பாசிஸமும், ஜெர்மனியில் நாஜீயமும் தோன்றி, மிருக பலத்தை அடிப்படையாகக் கொண்ட சர்வாதிகார ஆட்சி முறையை ஸ்தாபித்தன. இதனால் உலகத்தின் சுதந்திரத்திற்கும் சமாதானத்திற்கும் ஆபத்து ஏற்பட்டது. இதனால், உலகத்தின் பல சிறப்பட்ட சக்திகளும் இரண்டு பிரிவாக தங்களை வகுத்துக் கொண்டன. ஒரு பிரிவு, ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் ஆதரித்தது மற்றொரு பிரிவு, பிற்போக்குச் சக்திகளின் பிரதிநிதியாயமைந்தது. வருங்கால யுத்தத்தின் படம் இந்த மாதிரியாக மெது மெதுவாக அமையலாயிற்று. ஸ்ரீ நெவில்லி சேம்பர்லேனைத் தலைமையாகக் கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு, பாசிஸ்ட் இத்தலியையும் நாஜி ஜெர்மனியையும்விட சோவியத் ருஷ்யா இருப்பதுதான் மிகவும் கசப்பாயிருந்தது. இந்த நிலைமையைச் சுமார் மூன்று வருஷ காலம் பிரிட்டிஷ் அரசாங்கம் கவனித்துக் கொண்டு வந்தது. இது மட்டுமல்ல. பாசிஸ, நாஜீய நோக்கங்கள் நிறைவேறுவதற்கு அநுகூலமான முறைகளையும் இது கையாண்டது. அபிசீனியா, ஸ்பெயின், ஆஸ்திரேலியா, ஜெக்கோஸ்லோவேகியா, அல்பேனியா முதலிய நாடுகள், சுதந்திர நாடுகளாக இல்லாமல் பூகோள படத்திலிருந்து மறைந்து போய் விட்டன. கிரேட் பிரிட்டன், ஒரு வழ வழுத்த கொள்கையை அநுசரித்து, இந்தச் சுதந்திர நாடுகளின் அழிவுக்குத் துணையும் செய்தது. இதற்கு என்ன விளைவு ஏற்பட வேண்டுமோ அந்த விளைவே ஏற்பட்டது. அதாவது நாஜி ஜெர்மனி வெகு வேகமாக முன்னேறிக்கொண்டு வந்தது. இதன் பின்னர்தான், கிரேட் பிரிட்டன் யுத்த ரங்கத்தில் பிரவேசிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்படிப் பிரவேசிக்காவிட்டால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் பெரிய ஆபத்து ஏற்படக் கூடுமென்ற நிலையில்தான் அது பிரவேசித்தது. சென்ற யுத்தத்தின் போது, சிறிய தேசங்களின் உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டன. இப்பொழுது சுதந்திரம், உலக சமாதானம், ஜனநாயகம் என்று முழக்கம் செய்யப்படுகின்றன. இந்த முழக்கத்தின் எதிரொலியுடன்தான், பிரிட்டனும், பிரான்ஸும் 1339ம் வருஷம் செப்டம்பர் மாதம் 3ந்தேதி யுத்த ரங்கத்தில் இறங்கின. பாசிஸம், நாஜீயம் முதலிய பிற்போக்கான சக்திகளினால் மிகவும் களைத்துப் போயிருந்த உலகத்தினர், இந்தப் புதிய முழக்கங்களுக்கு—அதாவது சுதந்திரம், உலக சமாதானம், ஜனநாயகம் முதலிய முழக்கங்களுக்குத் துரிதமாகச் செவி கொடுத்தனர்.

## காங்கிரஸ் கோரிக்கை

1939-ம் வருஷம் செப்டம்பர் 3-ந் தேதி யுத்தம் தொடங்கியது. 7-ந் தேதி காங்கிரஸ் காரியக் கமிட்டி

வார்தாவில் கூடி யுத்த நிலைமையைப் பற்றி ஆலோசித்தது. 1936-ம் வருஷத்திலிருந்து காங்கிரஸ் நிறைவேற்றி வந்திருக்கிற தீர்மானங்களை அநுசரித்து அதுவேறு விதமான முடிவுக்கு வந்திருக்குமானால் அதற்கு யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஆனால் இன்னும் நிலைமையைக் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று அது தீர்மானித்தது. வேகமாகச் செல்ல வேண்டுமென்ற எண்ணம் இயற்கையாக யாருக்கும் உண்டாகும். அதனை அது தகைந்து நின்றது. உணர்ச்சியின்றி, நடு நிலைமையுடன் அது நிலைமையைப் பரிசீலனை செய்து பார்த்தது. பின்னரே இப்பொழுது என்ன முடிவுக்கு வந்திருக்கிறதோ அந்த முடிவுக்கு வந்தது. இந்த முடிவின் பயனாக, இந்தியா, உலகத்தின் முன்னர் தலை நிமிர்ந்து பார்க்க முடியும். இதுதான் சரியான முடிவென்று யாருமே அங்கீகரிப்பர். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் யுத்த நோக்கங்கள் என்னவென்று இந்தியா கேட்டது. ஏனென்றால், அந்த யுத்த நோக்கங்களைப் பொறுத்தே இந்தியாவுக்கு நியாயம் வழங்குவதும், உலக சமாதானமும் இருக்கிறது. இந்த யுத்தத்திலே இந்தியா கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டால், அந்த யுத்தம் ஏன் நடைபெறுகிறதென்று தெரிந்துகொள்ள இந்தியாவுக்கு உரிமை யில்லையா? யுத்தத்தின் நோக்கந்தானென்ன? சென்ற யுத்தத்தின் விளைவைப்போல் இந்த யுத்தத்தின் விளைவும் இராமல் உண்மையிலே இந்த யுத்தம், உரிமை, ஜனநாயகம், சமாதானம் முதலியவைகளைக் காப்பாற்றுவதற்காகவும், உலகத்திலேயே ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்துவதற்காகவும் நடைபெறுமானால், இந்த நோக்கங்கள், இந்தியாவைப் பொறுத்த மட்டில் எவ்வாறு நிறைவேற்றப்படுமென்பதைத் தெரிந்துகொள்ள நமக்கு உரிமையுண்டு.

இந்தக் கோரிக்கையை உள்ளடக்கிய நீண்டதோர் அறிக்கையை காரியக் கமிட்டி தயாரித்து 14-9-39ல் வெளியிட்டது. இந்தியாவின் எதிர்கால சரித்திரத்தில் இந்த அறிக்கைக்கு முக்கியமானதொரு ஸ்தானம் உண்டு. உண்மையையும் நியாயத்தையும் அடிப்படையாகக் கொண்ட இந்த அறிக்கையை, பலாத்கார சக்தியைத் தவிர வேறெவ்விதமாகவும் யாரும் புறக்கணிக்க முடியாது. யுத்தத்தின் நோக்கமென்ன வென்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள எழுந்த இந்தக் கூக்குரல் இந்தியாவினுடைய கூக்குரல் மட்டுமல்ல; எந்த மானிட சமூகத்தின் நம்பிக்கைகள் அடிக்கடி புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த மானிட சமூகத்தின் கூக்குரலுமாகும். இருபத்ைதந்து வருஷங்களுக்கு முன்னர், உலகமானது, மகத்தானதொரு யுத்தக் குழியிலே தள்ளப் பட்டது. ஆனால் இதைவிட மகத்தானதொரு யுத்தத்திற்கு ஆயத்தம் போலவே இந்த யுத்தம் ஏற்பட்டது. அந்த யுத்தத்தின்போது, சிறிய தேசங்களின் உரிமை காப்பாற்றப்பட வேண்டும், பொதுவான முறையில் எல்லாரும் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், சுய நிர்ணய உரிமை, ஆயுதப் பரிகரணம், சர்வதேச சங்கம், சர்வதேச மத்தியஸ்தம் முதலிய உயர் கருத்துக்களடங்கிய

வாக்கியங்கள் முழக்கம் செய்யப் பட்டன. இவற்றின் முடிவு என்ன? ஒவ்வொரு முழக்கமும் பொய்யாகப் போய்விட்டது. பார்த்த ஒவ்வொரு பார்வையும் கனவாகப் போய்விட்டது. மீண்டும் தேசங்கள் யுத்தக் குழியிலே இறங்கி யிருக்கின்றன. என இந்தமாதிரி செய்யப்படுகிறது; இது நம் தலை விதியை எவ்வளவு தூரம் பாதிக்கிறதென்பன போன்ற கேள்விகளைக் கேட்கக்கூடிய அறிவைக்கூட நாம் இழந்துவிட வேண்டுமா!

## பிரிட்டிஷ் பதில்

காங்கிரஸின் இந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் சில அறிக்கைகள் வெளியிடப்பட்டன. இவற்றின் முதல் அறிக்கை 17-10-39-ந் தேதியுடைய ராஜப் பிரதிநிதியின் அறிக்கை. இந்தியா அரசாங்க இலக்கியதஸ்தவேஜுகளிலேகாணப்படும் சலிப்புத் தரத்தக்க விநோதமான நடைக்கு இந்த அறிக்கை ஒரு சிறந்த உதாரணம். இந்த அறிக்கையைப் பக்கம் பக்கமாகப் படித்த பின், திரை நிதானமாகத் தூக்கப்படுகிறது. ஒரு காட்சி தோன்றுகிறது. 'யுத்தத்தின் நோக்கங்களைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால், பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் பேச்சைப் படியுங்கள்' என்று இந்த அறிக்கை நமக்குக் கூறுகிறது. இந்தப் பேச்சிலோ, ஐரோப்பாவின் சமாதானத்தைப்பற்றியும் சர்வதேச சம்பந்தத்தைப்பற்றியுமே காணப்படுகின்றன. சுதந்திரம், ஜனநாயகம் முதலிய வார்த்தைகள்கூட ராஜப்பிரதிநிதியின் அறிக்கையில் காணப்படவில்லை. இந்தியாவைப் பொறுத்த மட்டில் 1919-ம் வருஷத்துச் சட்டத்திலும் 1935ம் வருஷத்துச் சட்டத்திலும் கூறப்பட்டுள்ளதையும் திருப்பித் திருப்பி இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான். மேற்படி சட்டங்களில் கூறப்பட்ட கொள்கைதான் அப்படியே இம்பொழுதும் இருந்து வருகிறது.

17-10-39ல் ராஜப் பிரதிநிதியின் அறிக்கை வெளியாயிற்று. அதைப் பற்றி ஆலோசிக்க காங்கிரஸ் காரியக் கமிட்டி வார்தாவில் 22-10-39ல் கூடியது. ராஜப் பிரதிநிதியின் பதில் எந்த விதத்திலும் திருப்தி கரமாயில்லை யென்ற முடிவுக்கு வந்தது. உடனே ஒரு தீர்மானத்திற்கு வந்தது. அதாவது, காரியக் கமிட்டியானது கிரேட் பிரிட்டனுக்கு எவ்விதத்திலும் உதவி செய்ய முடியாதென்றும், அப்படி உதவி செய்வது, எந்த ஏகாதி பத்தியத்தை ஒழிக்க வேண்டு வேண்டுமென்று காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறதோ அந்த ஏகாதிபத்தியத்திற்கே துணை செய்வதாகுமென்றும், ஆகையினால், இந்த உதவி மறுப்புக்கு முதற்படியாக காங்கிரஸ் மந்திரிகள் ராஜீநாமா செய்ய வேண்டுமென்றும் தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்தின்படி, காங்கிரஸ் மந்திரிச் சபைகள் எட்டு மாகாணங்களில் ராஜீநாமா செய்தன.

## நோக்கம் தெளிவாகிறது

இதற்குப் பிறகு காங்கிரஸ் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளில் இது முதல் நடவடிக்கை. இவற்றின் கடைசி நடவடிக்கையானது,

5-2-40ல் ராஜப்பிரதிநிதி, தமக்கும் மகாத்மா காந்திக்கும் நடை பெற்ற சம்பாஷணையைப் பற்றி வெளியிட்ட அறிக்கையும் இதற்கு மகாத்மா காந்தி 6-2-40ல் வெளியிட்ட அறிக்கையுமாகும். ராஜப் பிரதிநிதி வெளியிட்ட அறிக்கையின் சார மென்ன வென்பது நம்மெல்லோருக்கும் தெரியும். மிகக்குறைந்த காலத்தில் இந்தியா, பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டந்தஸ்தை யடைய வேண்டு மென்பதே பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்க மென்று சொல்லப்பட்டது. மற்றும், இந்தக் குடியேற்ற நாட்டந்தஸ்தை யடைவதற் குள்ள இடைக்காலம் மிகவும் குறைவாகவே யிருக்கு மென்று சொல்லப்பட்டது. ஆனால், இந்தியா தன்னுடைய விதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ளவும், தன் அரசியல் திட்டத்தைத் தானே வகுத்துக் கொள்ளவும் பிரிட்டிஷ் அரசாங்கம் சம்மதிக்கவில்லை. அதாவது என்ன அர்த்த மென்றால், இந்தியா சுய நிர்ணய உரிமையை அநுபவிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை யென்பது தான்.

## மனப்பான்மை

சென்ற நான்கு வருஷங்களாக ஜன நாயகம், சுதந்திரம் என்பனவற்றின் முழக்கங்கள் உலகத்தின் பல பாகங்களிலும் எதிரொலி கொடுத்துக் கொண்டிருந்தன. இதைப்பற்றி இங்கிலீஷ், பிரெஞ்சு ராஜ தந்திரிகள் கூறிய வாசகங்கள் நமது ஞாபகத்தில் இருக்கின்றன. ஆனால் இந்தப் பிரச்னையை இந்தியா எழுப்பியவுடன், இந்த வாசகங்களின் உண்மை நமக்கு வெளியாகிறது. இந்த யுத்தத்தின் நோக்கம் பல தேசங்களின் உரிமைகளைப் பாதுகாப்ப தென்றும், ஆனால் இந்த ஐரோப்பாவைப் பொறுத்த மட்டிலேயே இருக்குமென்றும் சொல்லப் படுகின்றன. ஆசியா ஆப்பிரிக்கா வாசிகள், இந்த மாதிரியான நம்பிக்கைகளெல்லாம் வைக்கக் கூடா தென்று சொல்லப் படுகின்றன. 24-2-40ல் ஸ்ரீ சேம்பர்லேன், பர்மிங்ஹாம் நகரில் பேசிய பேச்சில் இதைத் தெளிவாக எடுத்துச் சொல்லி விட்டிருக்கிறார். அவர், தமது சொல்லால், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் செயலை நிரூபித்து விட்டார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் யுத்த நோக்கங்களைப் பற்றி அவர் கூறுகிறபோது, ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகள் பாதுகாப்புடனும் சுதந்திரத்துடனும் வாழ்வதற்காகவே, தாங்கள் சண்டையிலிறங்கி யிருப்பதாக அவர் கூறினார்.

ஒரு பிரிட்டிஷ் ராஜ தந்திரி இந்த மாதிரி கூறி யிருக்கிறாரே யானாலும், உண்மையில் ஐரோப்பாவின் சென்ற இருநூறு வருஷ காலத்து மனப்பான்மையையே இது பிரதி பலிப்பதா யிருக்கிறது. தனி மனிதனுடைய சுதந்திரம், பொது ஜன சுதந்திரம் என்று சொல்லப்பட்டவை யெல்லாம் ஐரோப்பாவுக்குத்தான், அதுவும் கிறிஸ்தவ ஜனங்களுக்குத்தான், என்று அறிவுறுத்தும் படியாகவே 18, 19 வது நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் அரசியல் நிகழ்ச்சிகள் நடை பெற்றிருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் இருக்கும் நமக்கு உலகம் மிகவும் மாறுதலடைந்து விட்டதாகத் தெரிகிறது. சென்ற நூற்றாண்டின் எண்ணங்களும் செயல்களும், புராதன சரித்திர சம்பவங்கள் போல் நமக்குப் புலப்படுகின்றன.

ஆனால் ஐரோப்பாவில் இப்பொழுதும், மனிதனுடைய உரிமைகள் வற்புறுத்திச் சொல்லப்படுகின்றன. இவை இன்னும் மறையவில்லை. ஆனால் நாமும் அவற்றை அடையவில்லை.

இந்தியாவில் நமது அரசியல், தேசிய உரிமைகளைப் பற்றிய பிரச்னைகளினால், இந்த உண்மை நமக்கு இன்னும் அதிகமாகப் புலனாயிற்று. யுத்தம் தொடங்கியதும், யுத்தத்தின் நோக்கமென்ன, அஃது இந்தியாவை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்கிற பிரச்னையை நாம் எழுப்பிய போது, 1917-ம் வருஷத்திலும் 1919ம் வருஷத்திலும் பிரிட்டிஷார் அனுசரித்த கொள்கைகளை நாம் மறந்துவிடவில்லை. ஆனால் இந்த 1939ம் வருஷத்தில்—நூற்றாண்டுகளில் நடைபெற வேண்டிய சம்பவங்கள் சில தினங்களில் நடைபெற்று விடுகிற இந்தக் காலத்தில்—இந்தியாவை இங்கிலாந்து எப்படிப் பார்க்கிறதென்பதை நாம் தெரிந்துகொள்ள விரும்பினோம். அந்தப் பார்வைமாறியிருக்கிறதா? மாறவில்லையென்று நமக்குத் தெளிவாகப் பதில் கூறப்பட்டு விட்டது. இப்பொழுது கூட, ஏகாதிபத்தியத்தின் பார்வையில் எவ்வித மாறுதலுமில்லை இந்தியா கூடிய சீக்கிரத்தில் குடியேற்ற நாட்டந்தஸ்தை அடைய வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் ஆவல் கொண்டிருக்கிறதென்று நாம் நம்பவேண்டுமென்று கூறப்படுகிறோம். இதற்கு முன்னரும் இதே நோக்கம் தனக்கு இருப்பதாகப் பிரிட்டிஷ் அரசாங்கம் கூறியது. ஆனால் இப்பொழுது மிகவும் ஆவலுள்ளதாயிருக்கிறது போலும்!

## நிர்ணய உரிமை

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஆவல் இருக்கிறதா இல்லையா, இருந்தால் அந்த ஆவல் எவ்வளவு தூரத்திற்கிருக்கிறது என்பவை இப்பொழுது முக்கியப் பிரச்னைகளல்ல. தன்னுடைய விதியை நிர்ணயித்துக் கொள்ள இந்தியாவுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா வென்பதுதான் இப்பொழுது முக்கியப்பிரச்னை. இந்தப் பிரச்னைக்கு என்ன பதில் கிடைக்கிறதோ அதைப் பொறுத்துதான் மற்றப் பிரச்னைகளும் இருக்கின்றன. இந்தப் பிரச்னை ஒன்றுதான், இந்திய தேசிய வாழ்வுக்கு அஸ்திவாரம் போல் அமைந்திருக்கிறது.

யுத்தத்தைப் பொறுத்த மட்டில் நமது நிலைமை தெளிவாக இருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முகத்தை, சென்ற யுத்தத்தில் பார்த்தது போல் இந்த யுத்தத்திலும் பார்க்கிறோம். இந்த யுத்தத்திலே கலந்துகொண்டு அதன் வெற்றிக்கு வழி தேட நாம் தயாராயில்லை. நமது கட்சி, பளிங்கு போல் தெளிவாக இருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வெற்றி பெற்று பலத்துடனிருந்து பார்க்க நாம் விரும்ப வில்லை. அதன் மூலமாக நமது அடிமைத்தனத்தையும் நீடித்து வைத்துக் கொள்ள நாம் விரும்ப வில்லை. அப்படிச் செய்ய நாம் மறுக்கிறோம். இதற்கு நேர் மாறான திக்கில்தான் நாம் போக வேண்டிய பாதை இருக்கிறது.

## நமது இன்றைய நிலைமை

3-9-39க்குப் பிறகு நாம் எடுத்துக்

கொண்டிருக்கிற நடவடிக்கை, நம்மை எவ்வளவு தூரம் கொண்டு விட்டிருக்கிறது? இன்று நாம் எந்த நிலையில் இருக்கிறோம்? இந்த இந்த இரண்டு கேள்விகளுக்கும் என்ன பதில் நீங்கள் கூறுவீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. உங்கள மனத்தில் என்ன இருக்கிற தென்பதை நான் நன்கு அறிகிறேன். 1937ம் வருஷத்தில் நாம் தற்காலிகமாகவும் ஓரளவுக்கும் ஒத்துழைப்பு அளித்தோம். இந்த ஒத்துழைப்பை, யுத்தம் தொடங்கப் பட்டவுடனே வாபீஸ் வாங்கிக் கொண்டோம் இன்றைய நிலைமையில் நாம், இனி முன்னுக்குப் போவதா அல்லது பின்னுக்குப் போவதா என்பதைத்தான் தீர்மானிக்க வேண்டும். ஓர் அடி முன்னெடுத்து வைத்தோமானால் பிறகு நிற்பதே கிடையாது. நில் என்று சொல்வது பின்னுக்குப் போவதாகும். ஆனால் நாம் பின்னுக்குப் போக மறுக்கிறோம். ஆதலின் நாம் முன்னுக்குத்தான் போக முடியும். நாம் முன்னுக்குத்தான் போக வேண்டும், முன்னுக்கே போவோம் என்று நான் சொன்னால் அது உங்களுடைய அபிப்பிராயத்தையே சொல்வதாகும்.

இது சம்பந்தமாக ஒரு பிரச்னை நமது முன்னணியில் வந்து நிற்கிறது. தேசங்களுக்கிடையே நடைபெறுகிற போராட்டத்தில், எந்தத் தேசமும் தனது உடைமைகளை, கட்டாயத்தினாலன்றி வேறு விதமாக விட்டு விடாது என்பது சரித்திரம் கண்ட உண்மையாகும். தனி மனிதர்களுடைய நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில்தான் நியாயம் ஒழுக்கம் முதலியவற்றைப் பொருட் படுத்துவதேயில்லை. இந்த இருபதாவது நூற்றாண்டில் கூட, ஐரோப்பாவிலுள்ள பிற்போக்கான சக்திகள் தனி மனிதனுடைய உரிமைகளையும் பொதுஜன உரிமைகளையும் எப்படிச் சிதற அடிக்கின்றன வென்பதை நாம் நன்கு பார்க்கிறோம். உரிமைகளை நிர்ணயிக்கிற விஷயத்தில் நியாயம், அறிவு முதலியவைகளுக்குப் பதிலாக பலாத்காரந்தான் முக்கிய அம்சமாயிருக்கிறது. ஆனால் இதற்கு மாறுபட்ட நம்பிக்கை தரும்படியான மற்றொரு காட்சியும் நமக்குத் தென்படுகிறது. இதை நாம் புறக்கணிக்கக் கூடாது. உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள லட்சக் கணக்கான ஜனங்கள், ஒரு புதிய உணர்ச்சியைப் பெற்று வருகிறார்கள். இந்த உணர்ச்சி எங்கும் வேகமாகப் பரவிக் கொண்டு வருகிறது. இந்த உணர்ச்சி, பழைய சம்பிரதாயங்களைக் கண்டு சலித்துப் போய் விட்டது. தர்மம், நியாயம், அமைதி முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட புதியதொரு சமுதாயத்தை அமைக்க இந்த உணர்ச்சி ஆத்திரப்பட்டுக் கொண்டிருக்கிறது. சென்ற யுத்தத்தினின்று எழுந்த இந்த உணர்ச்சி, இப்பொழுது மானிட சமுதாயத்தின் இருதயத்தில் ஆழமாக வேரூன்றி விட்டது. உலகத் தலைவர்களுடைய பேச்சுக்களில் இந்த உணர்ச்சி காணப்படுகிறது. சரித்திரத்திலேயே இந்த மாதிரியான உணர்ச்சி வேகம் எப்பொழுதும் ஏற்பட்டதில்லை யென்றுதான் கூற வேண்டும்.

இந்த நிலைமையில் சரித்திரம் ஒரு புதிய அடியை எடுத்து வைக்கும்

என்று நாம் நம்புவது தவறு? உலகத்திலுள்ள இரண்டு பெரிய மஹாஜனங்கள், கால சம்பவங்களின் விளைவாக ஆள்வோர் என்றும் ஆளப்படுவோர் என்றும் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தர்மம், நியாயம், சமாதானம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு புதிய உறவை ஏற்படுத்திக் கொள்வது அசாத்தியமா? இது சாத்தியமானால், உலக யுத்தத்தினின்று பிறந்த துக்கங்களுக்குப் பதிலாக ஒரு புதிய நம்பிக்கை, நியாயம், தர்மம் முதலியன உதயமாகுமென்று நாம் ஏன் நம்பக் கூடாது? சரித்திரத்திலேயே இந்த மாதிரியான புதிய உதாரணத்தைத் தாங்கள் சிருஷ்டித்திருப்பதாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இன்று பெருமையோடு கூற முன் வருவார்களானால், இது மானிட சமுதாயத்திற்கே பெரிய வெற்றியாகும். இஃது அசாத்தியமான காரியமல்ல; ஆனால் கடினமான காரியமாயிருக்கலாம்.

இருளடைந்த இந்தக் காலச் சூழலில், மானிட சுபாவத்தின் உயர் தன்மைகளில் கொண்டிருக்கும் அபார நம்பிக்கை மீது மகாத்மா காந்தி வாழ்ந்து கொண்டிருக்கிறார். பரஸ்பர ஒப்பந்தத்திற்கு வர அவர் எல்லா வழிகளையும் தேடச் சித்தமாயிருக்கிறார். ஆனால், அசைக்க முடியாத தமது நிலைமையை மட்டும் அவர் விட்டுக் கொடுப்பதேயில்லை.

யுத்தம் ஏற்பட்ட பிறகு பிரிட்டிஷ் மந்திரிகள் பலர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பழைய சம்பிரதாயங்கள் மறைந்து போய் விட்டனவென்றும், இப்பொழுது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு நியாயம், சமாதானம் இவற்றை நிலை நாட்டுவதைத் தவிர வேறு நோக்கமில்லையென்றும் கூறி வருகிறார். இந்த மாதிரியான வாசகங்களை, இந்தியாவைப் போல் வேறெந்த நாடுதான் சந்தோஷமாக வரவேற்றிருக்க முடியும்? ஆனால் இந்த வாசகங்களுக்கு நேர் விரோதமாகவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் யுத்தத்திற்கு முன்னர் எந்த நிலையில் நின்றதோ அதே நிலையில்தான் இப்பொழுதும் நிற்கிறது. இந்த வாசகங்களின் உண்மைக்கு அத்தாட்சி என்னவென்றால் இந்தியாவின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதாகும். ஆனால் அப்படிப் பூர்த்தி செய்யப் படாததினால், இந்த வாசகங்களின் போலித் தன்மை நன்கு விளங்குகிறது.

## முக்கிய பிரச்சினை

தற்போதைய பிரச்னை என்னவென்பதைப் பற்றி உங்களுக்குச் சுருக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். இதுதான் முக்கியமான பிரச்னை. மற்றவையெல்லாம் இரண்டாம் பட்சப் பிரச்னைகள்தான். இந்தப் பிரச்னையைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று காங்கிரஸானது, சென்ற செப்டம்பர் மாதம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குத் தன் கோரிக்கையைத் தெரிவித்தது. இதற்கு, எந்த வகுப்பினரோ, பிரிவினரோ ஆட்சேபம் செய்ய முடியாது. இது விஷயத்தில் வகுப்புரிமைப் பிரச்னை கிளத்தப் படுமென்று நாம் எண்ணியதே கிடையாது. அரசியல் போராட்டத்தில் காங்கிரஸோடு வேகமாக அடி யெடுத்து வைக்க முடியாத கட்சிகள் இந்த நாட்டில் இருக்கின்றன வென்பதை நாம் அறி

வோம். இந்தியாவிலுள்ள பெரும்பான்மையோர் நேரான முறைகளை அனுஷ்டிப்பதையும் இந்தப் பிரிவினர் விரும்பவில்லை யென்பதையும் நாம் அறிவோம். இந்தியாவின் பிறப்புரிமையாகிற சுதந்திரத்தைப் பற்றி யாரும் மறுக்க முடியாது. அது சம்பந்தமாக நாம் கிளத்திய கோரிக்கைகளையும் யாரும் எதிர்க்க முடியாது. தங்கள் ஏகபோக உரிமைகளைப் பாதுகாப்பதில் முனைந்திருக்கும் பிரிவினர், காலச் சுழற்சியினால் ஒன்றுஞ் செய்ய முடியாதவர்களா யிருக்கிறார்கள். நாம் கொண்டிருக்கும் லட்சியத்தை அவர்கள் அங்கீகரித்துத்தான் ஆக வேண்டி யிருக்கிறது.

ஒரு நெருக்கடியான நிலைமைதான் நமக்கெல்லாம் பரிசோதனை காலம். ஆகையால் இன்றைய பிரச்னையானது நம்மைப் பரிசோதனைக்காளாக்கி யிருக்கிறது. இதனால் தற்கால அரசியலின் பல அம்சங்களும் நமக்குத் தோன்றுகின்றன. இதனால், வகுப்புரிமைப் பிரச்னைகளுக்கு அடிப்படையா யிருப்பது எதுவென்ற விஷயமும் வெளியாகி விட்டது. அரசியல் பிரச்னையோடு வகுப்புப் பிரச்னையையும் கலந்து குழப்ப இந்தியாவிலும், இங்கிலாந்திலும் முயற்சிகள் செய்யப் பட்டன. இந்தியாவின் அரசியல் பிரச்னை தீர்வதற்கு வகுப்புப் பிரச்னை ஒரு பெரிய முட்டுக் கட்டையாக இருக்கிறதென்று உலகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

சென்ற 150 வருஷங்களாக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமானது, பிரித்தாளும் முறையைக் கையாண்டிருக்கிறது. உட்பிரிவுகளை வலியுறுத்தி, தன் அதிகாரத்தை ஸ்திரம் செய்து கொண்டிருக்கிறது. இந்தியாவின் அரசியல் அடிமைத்தனத்தின் பரிணாமம் இது தான். இதைப்பற்றிக் குறை கூறி வெறுப்புக் கொள்வது தவறாகும். ஓர் அந்நிய ஆதிக்கம் ஒரு நாட்டில் ஒற்றுமையை ஆதரிக்கும் முயற்சியில் ஈடுபடவே படாது. ஏனென்றால் வேற்றுமைகள் இருந்தால் தான், அது தன் ஆதிக்கத்தை நிரந்தரமாக வகித்துக் கொண்டிருக்க முடியும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வாழ்வு நின்று விட்டதென்றும், இந்தியாவில் அது கொண்டிருந்த ஆதிக்கம் நின்று விட்டதென்றும் சொல்லப் பட்டபோது, பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இந்தப் பிரித்தாளும் முறையைக் கைவிட்டு விட்டார்களென்று நாம் எதிர்பார்ப்பது தவறாகுமா? ஆனால் இந்த மாதிரி எதிர்பார்ப்பது, நம்பிக்கை கொள்வது, தவறென்று தெரிகிறது. சென்ற ஐந்து மாத காலமாக நடைபெற்ற சம்பவங்கள் இந்த உண்மையை உணர்த்தி விட்டன. எத்தனையோ வாக்குறுதிகளுக்குப் பிறகுகூட ஏகாதிபத்தியம் இன்னும் தன்னை ஸ்திரமாக்கிக் கொண்டுதான் வருகிறது. இதற்கு நாம் முடிவு கட்ட வேண்டும்.

## வகுப்பு பிரச்னை

மற்ற நாடுகளைப்போல் இந்தியாவிலும் உள்நாட்டுப் பிரச்னைகள் பல இருக்கின்றன. இவற்றில் முக்கியமானது, வகுப்புப் பிரச்னைதான். இதைப் பிரிட்டிஷ் அரசாங்கம் மறுக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. நாம் முன்னேறிச் செல்ல வேண்டுமானால், இந்த வகுப்புப் பிரச்னையையும் கணக்கில் வைத்

துத்தான் பார்க்க வேண்டும். இதனைப் புறக்கணித்து விட்டு நாம் முன்னேறிச் செல்வது தவறாகும் ஆனால் இந்தப் பிரச்னையை, இந்திய தேசிய சுதந்திரத்திற்கு முட்டுக் கட்டையாக உபயோகிக்கக் கூடாது. இந்தப் பிரச்னையைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனக்குச் சாதகமாகவே உபயோகித்துக் கொண்டு வந்திருக்கிறது. பிரிட்டனானது, தனது ஏகாதிபத்திய முறைகளை இந்தியாவினின்று அகற்றிக் கொள்ள விரும்பினால், அதற்கு முதல் சூசகம், இந்த வகுப்புப் பிரச்னையை அது எப்படிக் கவனிக்கிறதென்பதைப் பொறுத்திருக்கிறது.

இந்தப் பிரச்னையைப் பற்றி காங்கிரஸின் ஆரம்ப காலத்திலிருந்து, அது, இந்தியாவை ஒற்றுமைப்பட்ட ஒரு ஜன சமுதாயமாகவே கருதி நடந்து வந்திருக்கிறது. அந்த ஜன சமுதாயத்தின் நன்மையை நாடியே அது எல்லாக் காரியங்களையும் செய்து வந்திருக்கிறது. இங்ஙனம் காங்கிரஸ் கூறிக் கொள்வதைப் பரிசோதித்துப் பார்க்கக் காங்கிரஸுக்கு உரிமையுண்டு. காங்கிரஸும், இந்த உரிமையை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. இந்தக் கோணத்திலிருந்து இந்தப் பிரச்னையை நான் பரிசீலனை செய்ய விரும்புகிறேன்.

வகுப்புப் பிரச்னைக்கு மூன்று விதமான அம்சங்களே இருக்க முடியும். அதாவது, அந்தப் பிரச்னை இருக்கிறதென்பதை அங்கீகரித்தல், அதன் முக்கியத்துவம், அதற்குரிய பரிகாரம் என்பவையே அந்த மூன்று அம்சங்களும்.

இந்தியாவில் வகுப்புப் பிரச்னையென்றொன்று இருக்கிறதென்பதை காங்கிரஸ் அங்கீகரித்துக் கொண்டிருக்கிறதென்பதை அதன் சரித்திரத்தைப் படிப்போர்க்கு நன்கு புலனாகும். இதன் முக்கியத்துவத்தை அது எப்பொழுதும் குறைத்துக் கூறியதே யில்லை. இந்தப் பிரச்னைக்குப் பரிகாரமாக அது யுக்தமான முறைகளையே கையாண்டு வந்திருக்கிறது. இதைத் தவிர, புதிய முறைகள் எதையேனும் யாராவது கூறுவார்களானால் அதனைக் கேட்கக் காங்கிரஸ் தயாராயிருக்கிறது.

நமது தேசியலட்சியத்தை அடைகிறவிஷயத்திலும் இந்த வகுப்பு பிரச்னை ஒரு நிபந்தனை யென்று கூறப்படுமானால் அதனையும் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நம்பிக்கை காங்கிரஸுக்குண்டென்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த வகுப்புப் பிரச்னைக்கு அடிப்படையாகவுள்ள இரண்டு விஷயங்களை காங்கிரஸ் எப்பொழுதும் அநுஷ்டித்துக் கொண்டு வந்திருக்கிறது.

1. இந்தியாவில் எந்த விதமான அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டாலும் அதில் சிறுபான்மையோருடைய உரிமைகளும் நன்மைகளும் பாதுகாக்கப் படுவதற்குரிய ஷரத்துக்கள் இருக்க வேண்டும்.

2. சிறுபான்மையோரே, தங்களுடைய நன்மைகளும் உரிமைகளும் பந்தோபஸ்து செய்யப் படுவதற்காக என்னென்ன தே

வையென்பதை அந்தச் சிறுபான்மையோரே ஒரு முடிவுக்கு வரவேண்டும். பெரும்பான்மை சமூகத்தினர் இதைப் பற்றித் தீர்மானிக்கக் கூடாது. இந்தப் பிரச்னையைப் பற்றிய முடிவு, சிறுபான்மையோருடைய சம்மதத்தைப் பொறுத்ததாயிருக்க வேண்டுமே தவிர, பெரும்பான்மையோருடைய ஓட்டுப் பலத்தினால் இருக்கக் கூடாது.

சிறுபான்மையோர் பிரச்னையென்பது, இந்தியாவுக்கென்றுள்ள விசேஷமான பிரச்னையன்று. உலகத்தின் மற்ற நாடுகளிலும் இந்தப் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. சிறுபான்மைப் பிரச்னையைப் பற்றி காங்கிரஸ் அனுஷ்டித்து வந்திருக்கிற ஒரு முறையைக் காட்டிலும் வேறு விதமான முறையை அனுஷ்டிக்க முடியுமாவென்று இந்த மேடையிலிருந்து கொண்டு உலகத்தைப்பார்த்துக் கேட்கிறேன். அப்படி வேறு முறைகளிருந்தால் அவை யென்ன? காங்கிரஸ் இந்த விஷயத்தில் ஏதேனும் தவறி விட்டிருக்கிறதா? அப்படித் தவறி விட்டால் அதற்குப் பரிகாரந் தேடிக் கொள்ள காங்கிரஸ் தயாராயிருக்கிறது. நான் பத்தொன்பது வருஷ காலமாக காங்கிரஸில் இருந்திருக்கிறேன். இந்தப் பத்தொன்பது வருஷ காலத்திற்குள், காங்கிரஸ் வகுப்புப் பிரச்னையைப்பற்றி மேற் கண்ட முறையைத் தவிர வேறு விதமான முறையை அது கையாளவில்லை. இந்த முறையைச் செயலளவிலும் கொணரும் விதமாகவே காங்கிரஸ் நடந்து கொண்டு வந்திருக்கிறது. சென்ற பதினைந்து வருஷ காலத்தில் இந்த முறை பலவிதமாய் பரிசோதனை செய்யப்பட்டு அந்தப் பரிசோதனையில் அது வெற்றி பெற்றிருக்கிறது.

### அரசியல் நிர்ணய சபை

அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாகக் காங்கிரஸ் தீர்மானித்திருக்கும் விஷயத்திலும் மேலே கூறப்பட்ட இரண்டு முறைகளையும் அது கையாண்டிருக்கிறது. சிறுபான்மையோருக்கு இந்த அரசியல் நிர்ணய சபையில் உரிமையுண்டு என்பதையும் காங்கிரஸ் அங்கீகரித்திருக்கிறது. சிறுபான்மையோர் தங்கள் ஓட்டு பலத்திலேயே நிற்க வேண்டுமென்பது காங்கிரஸின் எண்ணம். அரசியல் நிர்ணய சபையில் சிறுபான்மையோருடைய உரிமைகள், நன்மைகள் முதலியவைகளைப் பொறுத்த மட்டில், பெரும்பான்மையோருடைய வாக்கு பலத்தின் ஆதரவில் அவர்கள் இருக்கக் கூடாதென்பதும், சிறுபான்மையோருடைய சம்மதத்தின் பேரிலேயே இருக்க வேண்டுமென்பதும் காங்கிரஸின் கோரிக்கை. எந்தப் பிரச்னை பற்றியேனும், ஏகமனதான சம்மதம் ஏற்படாவிட்டால், பாரபட்சமற்ற ஒரு மத்தியஸ்த சபை ஏற்படுத்தி அதன் முடிவுக்கு அனைவரும் சம்மதப்பட வேண்டும். இந்தப் பாரபட்சமற்ற ஒரு மத்தியஸ்த சபைக்குச் சிறுபான்மையோரும் அங்கீகாரம் அளித்த பின்னரே, இந்தச் சபை அமைக்கப்படும். இப்படித்தான் காங்கிரஸ் நடந்து வந்திருக்கிறது. இதைவிட அநுபவ சாத்தியமான முறைகள் எதையேனும் யாரேனும்

கூறுவார்களானால், அதைக் கேட்கக் காங்கிரஸ் தயார்.

சிறுபான்மையோர் பிரச்னையைப் பற்றிக் காங்கிரஸானது, இந்த மாதிரி நடந்து வந்திருக்கையில், பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் ஏன் இந்தச் சிறுபான்மையோர் பிரச்னையைப் பற்றி அடிக்கடி வற்புறுத்த வேண்டும்? இந்தியாவின் சுதந்திரத்திற்கு இந்தப் பிரச்னைதான் முட்டுக் கட்டையாயிருக்கிறதென்று ஏன் உலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும்? அப்படி இந்தப் பிரச்னையொன்றே இந்தியாவின் சுதந்திரத்திற்கு முட்டுக் கட்டையாயிருக்குமானால், இதனைத் தீர்த்துக் கொள்ள இந்தியாவுக்கு ஏன் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கக்கூடாது?

நம்மிடையே பிளவுகள் சிருஷ்டிக்கப்பட்டு அவை வளர்க்கப்பட்டன. ஆனால் அந்தப் பிளவுகளுக்காகவே நாம் குறை கூறப்படுகிறோம். வகுப்புப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் கொடுக்க மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் தான் நாம் இருக்கிறோம். இந்த மாதிரியான சங்கிலிகள் தான் நம்மைப் பிணைத்திருக்கின்றன. ஆனால் எத்தகைய கஷ்டங்கள் நேரிட்டாலும் நாம் சரியான அடியெடுத்து வைக்கச் சிறிதும் தயங்க மாட்டோம். நம்முடைய பாதை பல சிக்கல்கள் நிறைந்தது. ஆனால் அவற்றைக் கடக்கத் தீர்மானித்து விட்டோம்.

## சிறுபான்மையோரா ?

இந்தியாவிலுள்ள சிறுபான்மையோர் பிரச்னையைப் பற்றி மேலே குறிப்பிட்டோம். ஆனால் முஸ்லீம்கள், பெரும்பான்மையோரிடம் பயப்பட வேண்டிய ஒரு சிறுபான்மையோரா? எண்ணிக்கையில் சிறு தொகையினரா யிருக்கிறவர்கள் பயப்பட வேண்டியதுதான். ஆனால் முஸ்லீம்கள் அப்படிப் பயப்பட வேண்டுமா? 'அல் ஹிலால்' என்ற பத்திரிகையில் இருபத்தெட்டு வருஷங்களுக்கு முன் நான் எழுதி யிருப்பதை எத்தனை பேர் அறிவரென்பது எனக்குத் தெரியாது. அன்பர்கள், நான் எழுதியதை ஞாபகப்படுத்திக் கொள்ளுமாறு கோருகிறேன். அரசியல் விஷயத்தில் முஸ்லீம்கள் ஒரு சிறுபான்மையோர் என்று சொல்லப் படுவதை நான் சிறிதும் அங்கீகரிக்க முடியாதென்று அப்பொழுது சொன்னதையே இப்பொழுதும் திருப்பிக் கூறுகிறேன். ஜனநாயக இந்தியாவில் முஸ்லீம்கள் பயப்பட வேண்டுமென்பது அநாவசியமாகும். இப்படிப் பயப்படுவதுதான், அநேக தவறான எண்ணங்களுக்கு இடம் உண்டாக்கி இருக்கிறது. தப்பான எண்ணத்தின் மீது தவறான வாதங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் முஸல்மான்களிடையே ஒரு மனக் கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. உலகத்தாரும் இந்தியாவைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் உண்மையான இந்தியாவைச் சரியானபடி பார்க்க முடியவில்லை.

எனக்குப் போதிய அவகாசம் கிடைத்திருக்குமானால், சென்ற அறுபது வருஷ காலமாக இந்தியாவைப் பற்றிய இந்தச் செயற்கைப் படம், உண்மையற்ற படம் யாரால் எப்படி

வரையப்பட்டதென்பதை நான் விஸ்தரித்துக் கூறுவேன். காங்கிரஸானது தேசிய இயக்கத்தை ஆரம்பித்தபிறகு, அதிகார வருக்கத்தினர் அநுஷ்டித்து வந்த பிரித்தாளும் முறையின் விளைவே இந்தமாதிரியான படம் வரைந்து காட்டப் பட்டிருப்பது. இந்தியாவில் தோன்றியுள்ள தேசிய விழிப்புக்கு விரோதமாக முஸல்மான்களைத் தயார்ப்படுத்த வேண்டுமென்பதற்காகவே இந்தமாதிரி செய்யப்படுகிறது. இந்த விஷயத்தில் இரண்டு விதமான முறைகள் கையாளப்பட்டன. முதலாவது, இந்தியாவில் ஹிந்துக்களென்றும், முஸ்லீம்களென்றும் இரண்டு பிரிவினர் வசித்து வருகின்றனர் என்றும், இதனால் எந்த கோரிக்கையும் ஒரே தேசத்தினரால் கிளத்தப்பட்டதாகக் கொள்ளக் கூடாதென்றும் சொல்லப்படுகின்றன. இரண்டாவது, எண்ணிக்கையில், ஹிந்துக்களைவிட முஸ்லீம்கள் குறைவாயிருக்கிறபடியால், இந்தியாவில் ஜனநாயக ஆட்சி முறை ஏற்படின் பெரும்பான்மையோரா யுள்ள ஹிந்துக்களின் ஆதிக்கத்துக்குட்பட்டே முஸ்லீம்கள் இருக்க நேரிடுமென்றும் சொல்லப்படுகின்றன. இதனைப்பற்றி நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. இதைப்பற்றி நீங்கள் விளக்கமாகத் தெரிந்துகொள்ள விரும்பினால், இந்தியாவில் ராஜப்பிரதிநிதியா யிருந்த லார்ட் டப்ரினுடைய ஆட்சி முறையையும், வட மேற்கு எல்லைப்புற மாகாண கவர்னரா யிருந்த ஸர் ஆக்லண்ட் கால்வினுடைய ஆட்சி முறையையும் கவனிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம் பிரிவினை விதைகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினால் இந்திய மண்ணில் விதைக்கப்பட்டன. இது விருட்சமாகி எங்கும் பரந்திருக்கிறது. ஐம்பது வருஷங்களுக்குப் பிறகுகூட இதன் வேர்கள் அப்படியே இருக்கின்றன.

## ஹிந்து—முஸ்லீம்

அரசியல் சம்பிரதாயத்தில் சிறுபான்மையோர் என்றால் எண்ணிக்கையில் குறைந்தவர்களென்றும், அவர்களுக்கு விசேஷப் பாதுகாப்புத் தேவையென்றும் அர்த்தமல்ல. தன் பலத்திலேயே நிற்கக்கூடிய சக்தியில்லாமல், தன்னைச் சுற்றி யிருக்கும் பெரும்பான்மையோருடைய தயவை நாடி வாழவேண்டிய ஒரு சிறிய சமூகத்தினருக்கே சிறுபான்மையோர் என்று சொல்லப்படுவது வழக்கம். இதனால் எண்ணிக்கையைக் கொண்டு மட்டும் இந்தச் சிறுபான்மையோர் பிரச்னை உண்டாகவில்லை. ஒரு தேசத்தில் இருபது லட்சம் பேரைக் கொண்ட ஒரு ஜன சமூகமும், பத்து லட்சம் பேரைக் கொண்ட ஒரு ஜன சமூகமும் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். பின்னைய சமூகம் இந்திய சமூகத்தை விட எண்ணிக்கையில் குறைவா யிருக்கிற ஒரு காரணத்தினால் மட்டும், அது தன்னைச் சிறுபான்மைச்சமூகம் என்றும், தான் பலவீனமா யிருப்பதாயும் சொல்லிக் கொள்ள முடியாது.

இந்தத் திருஷ்டி கொண்டு, இந்திய முஸ்லீம் பிரச்னையைப் பற்றிக் கவனிப்போம். இந்தியா முழுவதும் பரவி, தலை நிமிர்ந்து நிற்கிற ஒரு சமூகத்தாரை—முஸ்லீம்களைப் பார்த்து, இவர்கள் நிர்க்கதியாயிருக்கிறார்களென்று யாராவது சொன்னால்

அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறவர்களாவார்கள்.

இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் எட்டு அல்லது ஒன்பது கோடிக்கு மேலிருக்கிறார்கள். மற்ற வகுப்பினரைப் பிரித்து வைக்கக் கூடிய சமுதாய, ஜாதிய வேற்றுமைகளினால் இவர்கள் பாதிக்கப்படவில்லை. சகோதரத்துவம் சமத்துவம் நிறைந்த இஸ்லாமிய மதமானது, இவர்களைக் கட்டுப்பட்ட ஒரு சமூகமாகச் செய்திருக்கிறது. இந்தியாவின் மொத்த ஜனத் தொகையில் இவர்கள் நான்கில் ஒரு பங்கினரே யிருக்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால் வெறும் எண்ணிக்கையைக் கொண்டு மட்டும் இந்தப் பிரச்னையைப் பார்க்கக் கூடாது. இவர்களுக்குப் பின்னால் எத்தகைய சக்தி இருக்கிறதென்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இத்தகைய பெருந் தொகையினராகவுடைய முஸல்மான்கள், ஜனநாயக இந்தியாவில் பயப்பட வேண்டியதற்கு ஏதேனும் ஆதாரமிருக்கிறதா?

முஸ்லீம்கள் இந்தியாவின் பல பாகங்களிலும் பரவியிருக்கிறார்கள். இந்தியாவின் மொத்த பதினொரு மாகாணங்களில் நான்கு மாகாணங்களில்முஸ்லீம்கள் பெரும்பான்மையோராக இருக்கிறார்கள். மற்ற மதத்தினர் சிறுபான்மையோராக இருக்கிறார்கள். பிரிட்டிஷ் பலுசிஸ்தானத்தையும் சேர்த்துப் பார்த்தால், முஸ்லீம்களைப் பெரும்பான்மையோராகக் கொண்ட ஐந்து மாகாணங்கள் இருக்கின்றன. இப்படியெல்லாம் இருக்க, முஸ்லீம்கள் ஏன் பயப்பட வேண்டுமென்பது தெரியவேயில்லை.

இந்தியாவின் வருங்கால அரசியல் விவகாரங்கள் எவ்வாறிருந்த போதிலும், பொதுவாகப் பார்க்கிற போது, அஃதோர் அகில இந்திய சமஷ்டித் திட்டமாகவே இருக்குமென்பது மட்டும் நிச்சயம். இந்தச் சமஷ்டியில் சேர்ந்த ஒவ்வொரு பிரிவும், தனது உள் நாட்டு விவகாரங்களைத்தானே கவனித்துக் கொள்ளும் உரிமை பெற்றிருக்கும். மத்திய அரசாங்கம் அந்நிய நாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு, சுங்க இலாகா முதலியவைகளையே நிருவாகம் செய்யும். இந்த நிலைமையில், ஒரு ஜனநாயக ஸ்தாபனத்தின் நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டிருக்கிற யாருமே, இந்தப் பெரும்பான்மை, சிறுபான்மைப் பிரச்னைகளில் ஈடுபட முடியாதல்லவா? இந்தியாவின் வருங்காலப் படத்தில் இத்தகைய தவறான சித்திரங்கள் வரையப்படாதென்றே நான் கருதுகிறேன். வகுப்புச் பிரச்னை சம்பந்தமான இந்த அம்சங்கள் ஏன் ஏற்படுகின்றனவென்றால், ஓர் ஐரிஷ் ராஜ தந்திரி கூறிய மாதிரி, ஆற்றங்கரையிலே நின்று கொண்டு நாம் நீச்சலடிக்க விரும்புகிறோம்; ஆனால் தண்ணீரில் இறங்க மட்டும் அஞ்சுகிறோம். இதற்கு ஒரே ஒரு பரிகாரந்தான் உண்டு. அதுதான் தைரியமாகத் தண்ணீரில் இறங்குவது. அப்படி இறங்கினால்தான் நமது அச்சமெல்லாம் நீங்கிப் போகும்.

## முப்பது வருஷத்திற்கு முன்னர்

வகுப்புப் பிரச்னையை, இந்திய முஸல்மான் என்ற முறையில் நான் முப்பது வருஷத்திற்கு முன்னடியே ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேன். அப்பொழுது முஸ்லீம்களில் பெரும்

பான்மையோர், அரசியல் போராட்டத்திலிருந்து விலகி யிருந்தார்கள். 1888ம் வருஷத்திற்கு முன்னர், எந்த விதமான மனப்பான்மை கொண்டிருந்தார்களோ, அதாவது ஒதுங்கி வாழ்கின்ற மனப்பான்மையையே பின்னரும் கொண்டிருந்தார்கள். மனச்சோர்வு தாக்கக்க இந்த நிலைமை காரணமாக, நான் இதைப் பற்றி ஆலோசனை செய்யாமலில்லை. இந்தியா, தன்னுடைய எல்லாப் பொறுப்புகளுடனும் முன்னேறிச் செல்வதாகவே நான் கண்டேன். நாம் ஒரே படகில் ஏறிக்கொண்டு செல்கின்ற பிரயாணிகள். ஜலத்தின் வேகத்தினால் படகும் வேகமாகச் செல்வதை நாம் தடுக்க முடியாது. ஆதலால் வகுப்புப் பிரச்னை சம்பந்தமாக ஒரு நிர்ணயமான முடிவுக்கு வருதல் இன்றியமையாததாயிற்று. ஆனால் எப்படி முடிவுக்கு வருவது? பிரச்னையை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பதனால் ஒரு முடிவுக்கு வர முடியுமா? முடியாது. அடிப்படையிலேயே நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணும் விஷயத்தில், ஒரு கேள்விக்கு நாம் அளிக்கிற பதிலைப் பொறுத்தே இருக்கிறது. அதாவது முஸல்மான்களாகிய நாம், சுதந்திர இந்தியாவை அவநம்பிக்கையோடும் சந்தேகத்தோடும் பார்க்கிறோமா அல்லது நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் பார்க்கிறோமா? இதற்கு நாம் என்ன பதில் சொல்கிறோமோ அதைப்பற்றியே இந்தப் பிரச்னையின் முடிவு இருக்கிறதென்று நாம் கருதுகிறோம். வருங்கால இந்தியாவை நாம் சந்தேகத்துடனும் அவநம்பிக்கையுடனும் பார்ப்போமானால், நாம் அநுசரிக்க வேண்டிய வழி வேறே. எந்த விதமான உறுதிமொழிகளும், சட்டரீதியாகக் கொடுக்கப்படும் எந்த விதமான பாதுகாப்புகளும் நமது அச்சத்தை நீக்கமாட்டா. இதனால் அந்நிய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கிறோம். இந்த அந்நிய ஆதிக்கமோ இங்கே பீடம் போட்டு உட்கார்ந்துகொண்டு விட்டது. அதற்கு இப்பொழுது போவதாக உத்தேசமில்லை. நாம் இன்னும் அச்சப்பட்டுக் கொண்டிருப்போமானால்; இந்த அந்நிய ஆதிக்கம் நீடித்து இருந்து கொண்டிருப்பதை நாம் ஆதரிக்கவே வேண்டும். அப்படியின்றி, அச்சத்தையும் சந்தேகத்தையும் நீக்கிவிட்டு, எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்ப்போமானால், நாம் செல்லவேண்டிய மார்க்கம் மிகத் தெளிவாகவே இருக்கிறது. எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டபோதிலும் நாம் இதனின்று விலகிவிட முடியாது. அப்பொழுது, இந்தியா, தனது தேசிய லட்சியத்தையும் அடைய முடியும்.

இவ்விதமான முடிவுக்குத்தான் நான் வந்தேன். வேறு விதமான முடிவு எனக்கு வெறுப்பையே தந்தது. அதைப்பற்றி நான் நினைக்கக் கூட முடியவில்லை. இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுகிற எந்த முஸ்லீமும் வேறு விதமாக அபிப்பிராயப் பட முடியாது.

நான் 'அல்ஹிலால்' என்ற பத்திரிகையை 1912ம் வருஷத்தில் ஆரம்பித்தேன். மேலே கூறப்பட்ட என் அபிப்பிராயத்தை, இந்திய முஸ்லீம்களின் முன்னர் தெரிவித்திருக்கி

றேன். என்னுடைய இந்தக் கூக்குரல் வீணாகப் போய் விடவில்லை. 1912ம் வருஷத்திற்கும் 1928ம் வருஷத்திற்குமிடையிலுள்ள காலத்தில் இந்திய முஸ்லீம்களிடையே ஒரு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. நான், நான்கு வருஷக் காப்பில் இருந்து விட்டு, 1920ம் வருஷம் வெளியே வந்தேன். அப்பொழுது முஸல்மான்களுடைய அபிப்பிராயம் வேறு விதமாக மாறியிருந்தது. இதற்குப் பிறகு, இந்த இருபது வருஷ காலத்தில் பல விஷயங்கள் நடைபெற்றிருக்கின்றன. புதிய சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. புதிய எண்ணங்கள் உதயமாயிருக்கின்றன. ஆனால் ஒரு விஷயம் மாறாமல் இருக்கிறது. அதாவது, முஸ்லீம்கள், பின்னுக்குச் செல்ல விரும்பவில்லையென்பதுதான் அது. ஆனால், அவர்களுக்குத் தங்கள் எதிர்காலத்தைப்பற்றி அதிகமான சந்தேகங்கள் இருக்கின்றன. இதன் காரணங்களைப் பற்றி நான் ஆராய்ச்சி செய்யப்போவதில்லை. ஆனால் இதன் விளைவுகளை அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன். இந்த வகுப்புப் பிரச்னையைப் பற்றி 1912ம் வருஷத்தில் நான் என்ன அபிப்பிராயங் கொண்டிருந்தேனோ அதே அபிப்பிராயத்தையே இப்பொழுதும் கொண்டிருக்கிறேன் என்பதை என் சகோதர முஸ்லீம்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த 1912ம் வருஷத்திற்குப் பிறகு நடைபெற்ற எல்லாச் சம்பவங்களைப் பற்றியும் நான் ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறேன். என் கண்கள் அவற்றைக் கவனித்துக் கொண்டிருக்கின்றன. என் மனமும் அவற்றின் மீது கருத்துச் செலுத்தியிருக்கிறது. இந்தச் சம்பவங்கள் என் கண் முன்னால் தோன்றி மறையவில்லை. இவற்றில் நானும் ஒருவனாகக் கலந்து கொண்டிருக்கிறேன். இதனால் ஒவ்வொரு நிலைமையையும் நான் கவலையோடு ஆராய்ச்சி செய்திருக்கிறேன். ஆகையால் நான் பார்த்தவற்றைப் பொய்யென்று சொல்ல முடியாது; எனது அபிப்பிராயங்களோடு நான் போராட முடியாது; என் மனச்சாட்சியை நான் தள்ளிவைக்க முடியாது. இந்தியாவிலுள்ள ஒன்பது கோடி முஸ்லீம்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று நான் 1912ம் வருஷத்தில் கூறினேனோ அதையே மீண்டும் இப்பொழுது திருப்பிக் கூறுகிறேன்.

## இஸ்லாமிய உலகம்

1912ம் வருஷம் நான் கூறியவற்றைச் செவி கொடுத்துக் கேட்ட எனது சகோதர முஸ்லீம்கள் சிலர் இன்று என்னோடு கருத்து வேற்றுமைப் பட்டிருக்கிறார்கள். அவர்களிடம் குற்றங்காண நான் விரும்பவில்லை. ஆனால் அவர்களுடைய உண்மைக்கும் பொறுப்புக்கும் விண்ணப்பம் செய்து கொள்கிறேன். ஜனங்களுடைய, தேசங்களினுடைய தலைவிதியை நாம் நிர்ணயிக்கிறோம். ஆதலால், அவ்வப்பொழுது எழும் உணர்ச்சிகளால் நாம் உந்தப்பட்டு விட்டோமானால், சரியான முடிவுக்கு நம்மால் வரமுடியாது. பிரத்தியட்ச அனுபவங்களைக் கொண்டுதான் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். இன்று வானத்தில் இருள் படர்ந்திருக்கிறது; எதிரே தோன்றுவது இருட்டுமயமாயிருக்கிறது என்பதெல்லாம் உண்மை. பிரத்தியட்சமாகிற வெளிச்சத்திற்கு

முஸ்லீம்கள் வரவேண்டும். வகுப்புப் பிரச்னையை அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து பார்ப்பார்களானால் வேறு விதமான அநுபவ முடிவுக்கு அவர்கள் வரமுடியாது.

நான் ஒரு முஸல்மான்; அதைக் குறித்து நான் பெருமை கொளகிறேன். இஸ்லாத்தின் 1 00 வருஷத்துப் பாரம்பரைதான் என் சொத்து. இதில் அணுவளவு இழக்கவும் நான் தயாராயில்லை. இஸ்லாத்தின் போதனைகள், சரித்திரம், அதன் கலை, நாகரிகம் முதலியவையே எனது பொக்கிஷம்; எனது ஆஸ்தி. அதைக் காப்பாற்றுவது எனது கடமை.

முஸல்மான் என்ற ஹோதாவில் இஸ்லாமிய மதத்திலும் இஸ்லாமியக் கலையிலும் எனக்கு ஒரு விசேஷ சிரத்தையுண்டு. இவற்றில் யாரேனும் தலையிட்டால் நான் அதைச் சிறிது கூடச் சகிக்கமாட்டேன். ஆனால் எனது வாழ்க்கையின் அநுபவங்கள், நிலைமைகள் முதலியன, இன்னும் சில விஷயங்களையும் நான் கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றன. நான் ஓர் இந்தியன் என்பதிலே பெருமை கொள்கிறேன். இந்திய தேசிய சமுதாயம் என்ற பொதுத் தொகுப்பில் நான் பிரிக்க முடியாத ஒரு பாகம். இந்த மகத்தான கட்டிடத்திற்கு—இந்திய தேசிய சமுதாயம் என்ற கட்டிடத்திற்கு—நான் அவசியம் தேவை. நான் இல்லாவிட்டால் இந்தியாவின் இந்தக் கட்டிடம் பூர்த்தி பெறாது. இந்தியாவென்னும் கட்டிடம் சமைவதற்கு நான் ஓர் அவசியமான பொருளாயிருக்கிறேன். இந்த உரிமையை நான் விட்டுக் கொடுக்கத் தயாராயில்லை.

அநேக மானிட ஜாதிகள், நாகரிகங்கள், மதங்கள் முதலியன இந்தியாவில் வந்து அடைக்கலம் புகுந்திருக்கின்றன. இங்கே வந்து இளைப்பாறியும் இருக்கின்றன. சரித்திர காலத்திற்கு முற்பட்டுக்கூட, இவை ஒன்றன் பின்னொன்றாக இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்திருக்கின்றன. விசாலமான, செழுமையான இந்த பாரத தேசம் எல்லாருக்கும் நல்வரவு கூறி தன்னிடத்தில் சேர்த்துக் கொண்டது. இங்ஙனம் வந்தவர்களில் கடைசியானவர், இஸ்லாமியர்கள். இவர்கள் இங்கே வந்து நிரந்தரமாகத் தங்கினார்கள். இதனால் இரண்டு கலாசாரங்கள் சந்திப்பதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. கங்கையும் யமுனையும் போல இவை சிறிது காலம் தனித்தனியாக ஓடி கடைசியில் இயற்கையின் அசைக்க முடியாத சட்டத்திற் கிணங்க, ஒரு சங்கமத்தில் சேர்ந்தன. இந்தச் சங்கமம்—இந்தச் சந்திப்பு—சரித்திரத்திலேயே முக்கியமானதொரு சந்திப்பு. இதன் பிறகு, ஒரு நவபாரதம் உதயமாகத் தொடங்கியது. முஸ்லீம்களாகிய நாம் நம்மோடு ஏராளமான பொருள்களைக் கொண்டு வந்தோம். இந்தியாவினிடத்திலும் அதன் பரம்பரைச் சொத்துக்கள் ஏராளமாக இருந்தன. நம்முடைய செல்வத்தை அதற்கு அளித்தோம். அது, தன்னுடைய பொக்கிஷத்தையும் நமக்குத் திறந்து விட்டது. இந்தியாவுக்கு அவசியம் தேவையான ஜனநாயகம், மனித சமத்துவம் முதலியவற்றை நாம் அதற்குக் கொடுத்தோம்.

இதற்குப் பிறகு பதினொரு நூற்றாண்டுகள் கழிந்தன. இந்திய மண்

ணிலே, ஹிந்து மதத்திற்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை இஸ்லாத்திற்கும் உண்டு. அநேக ஆயிர வருஷங்களாக இங்குள்ள ஜனங்கள் ஹிந்துமதத்தை அநுஷ்டித்து வருகிறார்களென்றால், ஆயிரம் வருஷமாக இஸ்லாமும் அவர்களுடைய மதமாக இருக்கிறது. ஒரு ஹிந்து, எப்படி தான் பெருமையோடு இந்தியன் என்று சொல்லிக் கொண்டு ஹிந்து மதத்தைப் பின்பற்ற முடியுமோ அப்படியே, ஒரு முஸ்லிமும், தான் இந்தியன் என்று பெருமையோடு சொல்லிக் கொண்டு இஸ்லாத்தைப் பின்பற்ற முடியும். இதனையே **நான்** கொஞ்சம் விரிவுபடுத்த முடியும். இந்தியக் கிறிஸ்தவனும், தான் இந்தியனென்று சொல்லிக் கொண்டு கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்ற முடியும்.

### கூட்டு நாகரிகம்

1100 வருஷகாலமாக நமது சரித்திரம் ஒன்றுபட்டு இயங்கிக் கொண்டு வந்திருக்கிறது. இதனால் இந்தியா அநேக வித பலன்களை அடைந்திருக்கிறது. நமது பாஷைகள், காவியம், இலக்கியம், நாகரிகம், கலை, உடை, பழக்க வழக்கங்கள் நமது அன்றாட வாழ்க்கையில் காணப்படுகிற அநேக நிகழ்ச்சிகள் முதலிய யாவும், நமது ஒன்றுபட்ட முயற்சியின் முத்திரையைப் பெற்றிருக்கின்றன. நமது வாழ்க்கையின் எந்த ஓர் அம்சமும், இந்த முத்திரை பெறாமல் ஒதுங்கியிருக்கவில்லை. நமது பாஷைகள் வேறுதான்; ஆனால் நாமிருவரும் பொதுவானதொரு பாஷையில் பேசப்பழகிக் கொண்டு விட்டோம். நமது பழக்க வழக்கங்கள் வேறு வேறாக இருந்த போதிலும் ஒன்றுக்கொன்று ஈடுபடுத்திக் கொண்டு போய் விட்டன. நம்முடைய பழைய மாதிரியான உடைகள், இப்பொழுது யாரும் அணிவதில்லை. அவற்றைப் பழைய படங்களில் தான் பார்க்கலாம். கூட்டு முயற்சியினால் சம்பாதிக்கப்பட்ட இந்தச் சொத்தைத் துறந்து விட்டு, நமது கூட்டு வாழ்க்கை ஆரம்பிக்கப்படாமலிருந்ததற்கு முன்னர் எந்த விதமான வாழ்க்கையை நடத்தி வந்தோமோ அந்த வாழ்க்கைக்கு திரும்பிச் செல்ல நாம் விரும்பவில்லை. ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் ஹிந்துக்கள் எந்த மாதிரியான வாழ்க்கையை நடத்தி வந்தார்களோ அதே மாதிரியான வாழ்க்கை இனி நடத்த வேண்டுமென்று எந்த ஹிந்துவாவது நினைப்பானாகில் அது வீண் கனவுதான். அப்படியே, ஆயிர வருஷங்களுக்கு முன்னால் ஈரானிலிருந்தும், மத்திய ஆசியாவிலிருந்தும் தாங்கள் கொண்டு வந்த நாகரிகத்தையும் கலை ஞானத்தையும் மீண்டும் அப்படியே புதுப்பிக்க வேண்டுமென்று முஸ்லீம்கள் நினைப்பார்களானால் அதுவும் கனவுதான். இந்தக் கனவிலிருந்து அவர்கள் விழிப்புப் பெறுவது நல்லது. மத விஷயங்களில் புனருத்தாரணம் ஏற்பட வேண்டியது அவசியந்தான். ஆனால் சமுதாய விஷயங்களில் புனருத்தாரணம் என்று சொல்வது, முன்னேற்றத்தை மறுப்பதாகும்,

ஆயிர வருஷ காலமாக நாம் நடத்தி வருகிற இந்தக் கூட்டு வாழ்க்கை, நம்மை ஒரு தேசிய சமுதாயமாக்கி விட்டது. இதனைச் செயற்கையால் மட்டும் ஆக்கியிருக்க முடியாது. இயற்கையானது, நூற்றாண்டுகள் கணக்கில் தனது ரகசிய முறைகளைக் கையாண்டு, இந்த மாதிரியாக உருவகப்படுத்துகிறது. இயற்கையின் நியதியால் ஏற்

பட்ட இந்தச் சேர்க்கை, இப்பொழுது முடிந்து அதற்கு முத்திரையும் இடப்பட்டுவிட்டது. நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும், நாம் ஒற்றுமைப்பட்ட, பிரிக்க முடியாத ஓர் இந்திய சமுதாயமாகிவிட்டோம். இந்த ஒற்றுமையை, எந்தச் செயற்கை முறைகளும் பிரிக்க முடியாது. சரித்திர உண்மைகளையும், தார்க்கிக உண்மைகளையும் நாம் ஏற்றுக்கொண்டு, நமது எதிர்கால வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்கொள்வோமாக.

## முடிவுரை

உங்கள் காலத்தை இனியும் நான் அதிகமாக எடுத்துக்கொள்ளப் போவதில்லை. என் பிரசங்கம் இதனுடன் முடியவேண்டும். அப்படி முடிப்பதற்கு முன்னர், ஒரு விஷயத்தை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன். நமது வெற்றி மூன்று விஷயத்தைப் பொறுத்திருக்கிறது. அதாவது, ஒற்றுமை, கட்டுப்பாடு, மகாத்மா காந்தியின் தலைமையில் பூரண நம்பிக்கை ஆகிய இவையே இந்த மூன்று விஷயங்கள். நமது இயக்கத்தின் புகழ் நிறைந்த பழைய வரலாற்றுக்கு அவருடைய தலைமைதான் காரணம். அப்படியே வருங்காலத்தில் வெற்றி பெறுவதற்கு அவருடைய தலைமையில்தான் முடியும்.

பரிசோதனை காலம் நம்மை நெருங்கிக்கொண்டு வருகிறது. ஏற்கனவே நாம் உலகத்தின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கிறோம். நாம் அந்த கவனத்திற்குரியவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவோமாக.

---

## நிறைவேறிய தீர்மானம்

ஐரோப்பிய யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட நெருக்கடியான நிலைமையையும், அது சம்பந்தமாக அனுசரிக்கப்பட்டு வரும் பிரிட்டிஷ் கொள்கையையும் இந்தக் காங்கிரஸ் ஆராய்ந்து பார்த்தது. இதுபற்றி அ. இ. கா. கமிட்டியும் காரியக் கமிட்டியும் நிறைவேற்றி யிருக்கிற தீர்மானங்களையும், எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கையையும் இந்தக் காங்கிரஸ் அங்கீகரிக்கிறது. இந்திய மகா ஜனங்களின் சம்மதமின்றி இந்தியாவை, யுத்தத்தில் கலந்திருக்கிற ஒரு நாடாகக் கருதி பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் அறிக்கையும், இந்த யுத்தத்தில் இந்தியாவின் பொருள்கள் உபயோகப்படுத்தப்படுவதும் தங்களுக்கிழைக்கப்பட்ட ஓர் அவமானமென்று இந்தக் காங்கிரஸ் கருதுகிறது. தன் மதிப்புள்ள சுதந்திர ஆவல் நிறைந்த எந்த ஜனங்களும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தியாவைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாகச் சமீபத்தில் வெளியான வாசகங்களைப் பார்க்கிறபோது கிரேட் பிரிட்டனானது, ஏகாதிபத்திய நோக்கங்களுக்காகவும், தனது ஏகாதிபத்தியத்தைத் தனியாக வலுப்பெறச் செய்து கொள்ளவும் இந்த யுத்தத்தை நடத்தி வருகிறது என்று தெரிகிறது. இங்ஙனம் வலுப்படுத்திக்கொள்வதற்கு, இந்திய மகா ஜனங்களையும் ஆசிய ஆப்பிரிக்க தேசங்களையும் சுரண்டுவதே அடிப்படையாக இருக்கிறது. இந்த நிலைமையில் காங்கிரஸானது எந்த விதத்திலும் நேர் முகமாகவோ மறைமுகமாகவோ இந்த யுத்தத்தில் பங்கெடுத்துக்கொள்ள முடியாது. அப்படிச் செய்வது இந்தச் சுரண்டுதலை நீடிக்கச் செய்வதோடு இதனை ஊர்ஜிதப்படுத்துவதுமாகும். ஆகையால் பிரிட்டனின் சார்பாக இந்தியத் துருப்புகளை யுத்தத்திற்கு அனுப்புவதையும், யுத்தத்திற்காக இந்தியாவிலிருந்து மனிதர்களும் சாமான்களும் அனுப்பப்படுவதையும் இந்தக் காங்கிரஸ் ஆட்சேபிக்கிறது. இந்தியாவில், சேனைக்கு ஆள் திரட்டுவதையும், பணம் திரட்டுவதையும், இந்தியா தன் மனப்பூர்வமாகச் செய்த உதவிகளென்று கருதக்கூடாது. காங்கிரஸ் பிரதிநிதிகளும் காங்கிரஸின் செல்வாக்குக் குட்பட்ட மற்றவர்களும் யுத்தத்திற்குத் தேவையான ஆள், பணம், பொருள முதலியவற்றை உதவ முடியாது.

பூரண சுதந்திரத்திற்குக் குறைவாக எதனையும் இந்தியா மகா ஜனங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை காங்கிரஸ் அறிவிக்கிறது. ஏகாதிபத்திய வட்டத்திற்குள் இந்தியாவின் சுதந்திரம் இருக்க முடியாது. ஏகாதிபத்திய அமைப்பிற்குள் குடியேற்ற நாட்டு அந்தஸ்தோ அல்லது வேறு எந்த அந்தஸ்தோ இந்தியாவிற்குப் பொருந்தாது. ஒரு

பெரிய தேசத்தின் கௌரவத்திற்கும் இது பொருத்தமாக இல்லை. அப்படிப்பட்ட அந்தஸ்து இந்தியாவை பிரிட்டிஷ் அரசியலுடனும், பொருளாதார அமைப்புடனும் பல வழிகளிலும பந்தப்டுத்தி விடுவதா யிருக்கும். வயது வந்த எல்லோருக்கும் ஓட்டுரிமை உண்டு என்ற ஏற்பாட்டின்பேரில் கூட்டப்படுகிற அரசியல் நிர்ணய சபை மூலமாகத் தங்கள் அரசியல் திட்டத்தை வகுத்துக்கொள்ளவும், மற்ற நாடுகளுடன், எந்த விதமான சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்ணயிக்கவும் இந்திய மகா ஜனங்களுக்குத்தான் உரிமையுண்டு.

எப்பொழுதும் போல் காங்கிரஸானது வகுப்பு ஒற்றுமை ஏற்படுத்தக் கூடிய எல்லா முயற்சிகளையும் கையாளும். ஆனால் அரசியல் நிர்ணயசபை மூலமாக அல்லது வேறு விதமாக இதற்கு நிரந்தரமான பரிகாரம் உண்டாக முடியாது. அந்த அரசியல் நிர்ணய சபையை பெரும்பான்மைச் சமூகத்துப் பிரதிநிதிகளும் சிறுபான்மைச் சமூகத்துப் பிரதிநிதிகளும் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் மூலமாகவோ, அப்படி ஒப்பந்தம் ஏற்படா விட்டால் மத்தியஸ்தம் வைத்து அது செய்கிற முடிவின் படியோ அங்கீகரிக்கப்பட்ட எல்லாச் சிறுபான்மைச் சமூகத்தினருடைய உரிமைகளும் பாதுகாக்கப்படும். இதைத் தவிர வேறுவிதமான முடிவு ஏற்படமுடியாது. இந்தியாவின் அரசியல் அமைப்பானது சுதந்திரம், ஜனநாயகம், தேசிய ஒற்றுமை இவற்றை அடிப்படையாகக் கொண்டதா யிருக்க வேண்டும். இந்தியாவைப் பாகு படுத்தவோ, அதனுடைய தேசியத் தன்மையைப் பிளவு படுத்திக் காட்டவோ செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் இந்தக் காங்கிரஸ் ஆட்சேபிக்கிறது. எந்த அரசியல் அமைப்பில் ஒரு பிரிவுக்கோ, அல்லது தனிமனிதனுக்கோ வளர்ச்சி யடைவதற்குரிய எல்லா உரிமைகளும் சந்தர்ப்பங்களும் அளிக்கப் படுகின்றனவோ, எந்த அரசியல் அமைப்பில் அநீதியான சமூகப் பாகுபாடுகள் ஒழிந்து நியாயமான சமுதாயம் ஏற்படுகிறதோ அப்படிப்பட்ட அரசியல் அமைப்பையே காங்கிரஸ் குறிக் கோளாகக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் சுதந்திரத்திற்குக் குறுக்காக சுதேச மன்னர்களும் அந்நிய ஏகபோக உரிமைகளும் வந்து நிற்பதை காங்கிரஸ் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தியாவின் அரசியல் ஆதிக்கம்—சுதேச சமஸ்தானங்களிலாகட்டும், மாகாணங்களிலாகட்டும்—இந்திய மாகா ஜனங்களைப்பொறுத்தே யிருக்கவேண்டும். ஜனங்களுடைய ஜீவாதாரமான உரிமைகளுக்குக் கீழ்ப் பட்டவைகள்தான் மற்ற உரிமைகள். சுதேச சமஸ்தானங்களின் சார்பாக எழுப்பப்படுகிற ஆட்சேபனை யானது பிரிட்டிஷ் சிருஷ்டியாகும், அந்நிய ஆதிக்கத்தினின்று இந்தியா சுதந்திரம் பெறுவது என்று அறிக்கை வெளியிடப்பட்டாலன்றி இந்த ஆட்சேபத்திற்குப் பரிகாரம் ஏற்பட முடியாது. அந்நிய உரிமைகள்—இந்திய மகா ஜனங்களின் உரிமைகளுக்கு அவை முரணாக இல்லாத வரையில்—பாதுகாக்கப் பெறும்.

யுத்தத்திலிருந்து இந்தியா ஒதுங்கி யிருக்கவும், அந்நிய ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுதலை செய்ய காங்கிரஸ் கொண்டிருக்கும் உறுதியைக் காண்பிக்கவும் எந்தெந்த மாகாணங்களில் காங்கிரஸ் பெரும்பான்மைக் கட்சியாக இருந்ததோ அந்த மாகாணங்களில் நிறுவப்பட்ட மந்திரிச் சபைகளை காங்கிரஸ் வாபீஸ் வாங்கிக் கொண்டு விட்டது.

இந்த ஆரம்ப நடவடிக்கைகளுக்கு அடுத்தாற் போல் சட்ட மறுப்பு ஆரம்பிக்க வேண்டியதுதான். காங்கிரஸ் ஸ்தாபனங்கள் இந்தச் சட்டமறுப்பு ஆரம்பிப்பதற்குத் தகுதியுடையவையென்று நிர்ணயிக்கப் பட்டவுடனேயோ, அல்லது நெருக்கடி ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டாலோ காங்கிரஸ் தயக்கமின்றி சட்ட மறுப்பை ஆரம்பிக்கும். காங்கிரஸ்காரர்கள், கட்டுப்பாட்டை ஒழுங்காக அனுஷ்டித்து வருவதாகவும், சுதந்திர தினப் பிரதிக்ஞையில் வகுக்கப்பட்ட நிர்மாண திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருவதாகவும் திருப்தி ஏற்பட்டால்தான், தாம் சட்டமறுப்பை ஆரம்பிக்கிற பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியுமென்று காந்தியடிகள் கூறியிருப்பதை காங்கிரஸ்காரர்களின் கவனத்திற்குக் கொண்டு வர இந்தக் காங்கிரஸ் விரும்புகிறது.

ஜாதி மத வித்தியாசமின்றி எல்லாப் பிரிவினருக்கும், எல்லா வகுப்பினருக்கும் தொண்டு செய்ய வேண்டுமென்பதும், பிரதிநிதியா யிருக்க வேண்டுமென்பதும் காங்கிரஸின் நோக்கம். இந்தியாவின் சுதந்திரப் போராட்டமானது இந்தியா அனைத்தும் சுதந்திரம் பெறுவதற்குத்தான். ஆகையால் எல்லா வகுப்பினரும், எல்லாப் பிரிவினரும் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் நம்புகிறது. தேசத்தார் அனைவரிடத்திலும் தியாக உணர்ச்சியை உண்டுபண்ணுவதே சட்டமறுப்பியக்கமாகும்.

இந்தத் தீர்மானத்தைத என்னென்ன விதமாக நடைமுறையில் கொணர வேண்டுமோ அந்தவிதமாகக் கொண்டு வருவதற்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கும், அவசியம் ஏற்படுமானால் காரியக் கமிட்டிக்கும் இந்தக் காங்கிரஸ் அதிகாரம் அளிக்கிறது.

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

# : அக்கா :

—எம். வி. வெங்கடராமன்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

## ஒன்பதாம் அத்தியாயம்

கார்த்திகை மாதம் முடிவுறும் சமயம். கொஞ்சம் கொஞ்சம் பனி பெய்ய ஆரம்பித்துவிட்டது. சுரேந்திரனுடைய மேலறையின் ஜன்னல் மூலம் உள்ளே போகும் சூரியனின் பிரகாசம் பார்ப்பதற்கு இனிமையாகத் தென்படுகிறது. ஜன்னலருகிலேயே பல பெரிய கணக்குப் புஸ்தகங்களையும் காகிதக் கட்டுகளையும் வைத்துக்கொண்டு மேஜையின் ஒரு புறத்தில் அவன் உட்கார்ந்திருந்தான். நிலுவை, கடன், வசூல், வரவு செலவு, கேஸ் விஷயம் எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன். சும்மா உட்கார்ந்திருந்தால் பொழுது போகவேண்டாமா? ஆனால் அதையும் செய்யக்கூடாதென்று தடுத்தாள் சாந்தி; அதனால் உடம்புக்குக் கோளாறு அதிகமாகிவிட்டால்—என்று அவளுடைய கவலை. ஆனால் எழுத்துக்களைப் பார்ப்பதால் மார்வலி ஒன்றும் அதிகமாகிவிடாது என்று அவளுக்கு ரொம்ப புத்தி சொன்னதன் பேரில், அவள் ஒப்புக்கொண்டு, வேண்டிய சமயத்தில் அவனுக்கு ஒத்தாசை செய்துகொண்டிருந்தாள்

இப்போது அவளுடைய ராஜ்யம் தான். அவள் சொல்லும் எந்த வார்த்தையையும் அவன் தட்டுவதில்லை. நாலைந்து வேஷாக் பேர்வழிகள் கூடிக்கொண்டு சாந்திக்கு சில நாளாகக் கொஞ்சம் துன்பமளித்துக் கொண்டிருந்தார்கள். மனைவியின் கட்டளைப்படி சுரேந்திரன் வெளியில் கிளம்புவதேயில்லை. டாக்டரின் யோசனையைச் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்று அவள் எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வைத்திருந்தாள்.

கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் அவள் சிவப்பு நூலால் கடுதாசிக் கட்டுகளைக் கட்டிக்கொண்டிருந்தாள். சுரேந்திரன் ஏதோ காகிதம் பார்த்துக்கொண்டிருந்தவன் நிமிர்ந்து கூப்பிட்டான், 'சாந்தி!'

அவள் எங்கோ போயிருந்தாள்; கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து 'ஏன், கூப்பிட்டீர்களா?' என்று கேட்டாள்.

‘ஆம், கொஞ்சம் ஆபீஸுக்கு போகவேணும்.’

‘வேண்டாம்; வேண்டியதைச் சொல்லுங்கள்; நான் கொண்டுவந்து தருகிறேன்.’

‘ஒன்றும் வேண்டியதில்லை; கொஞ்சம் மதுரா பாபுவோடு பேச வேணும்.’

‘அவரை இங்கே கூப்பிட்டனுப்புகிறேன். நீங்கள் போகவேண்டாம். ஆனால் இப்போது அவர் ஏதுக்கு?’

‘அடுத்த மாசத்திலிருந்து அவர் வேலைக்கு வேண்டாம் என்று சொல்ல வேணும்.’

சாந்திக்கு ஆச்சரியமாக இருந்தது; கொஞ்சம் சந்தோஷமாகவும் இருந்தது. ‘ஆனால் அவர் என்ன குற்றம் செய்துவிட்டார்?’ என்று கேட்டாள்.

‘குற்றமா! ரொம்ப அதிகப் பிரசங்கித்தனம் செய்கிறார்.’

பிறகு ஒரு கோர்ட் சர்டிபிகேட்டையும், பல கடுதாசிகளையும் காட்டி அவன் சொன்னான், ‘இங்கே பார், கோலா கிராமத்து விதவை ஒருத்தியுடைய வீடு வாசல் எல்லாம் ஏலம் போட்டு வாங்கியிருக்கிறார். என் கிட்டே ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை’

‘ஐயோ பாவம்! விதவையின் வீடு வாசலை ஏலம் போடலாமா? ஆனால் ஏன் அதை விற்கவேணும்?

‘பத்து வருஷத்து வரி பாக்கியாம். அதுக்கு அசலும் வட்டியும் சேர்த்து ஆயிரத்து ஐந்நூறுரூபாய்க்கு பிராது!’

ரூபாய் என்றதும் சாந்தி கொஞ்சம் சாந்தமடைந்தாள்; புன் சிரிப்பு செய்து கேட்டாள், அதிலே மானேஜர் மேலே என்ன குற்றம்? அவர் இத்தனை ரூபாயை விட்டு விடுவதா?

சுரேந்திரன் ஏதோ யோசனையில் ஆழ்ந்து பதிலளிக்கவில்லை. சாந்தி மறுபடியும் கேட்டாள், ‘இத்தனை ரூபாயை விட்டு விடுவதா!’

‘விடவேண்டாம்; ஒரு விதவையை வீட்டை விட்டு துரத்தலாமா? என்ன நினைப்பு உனக்கு!’

அந்தப் பேச்சில் மறைந்திருந்த ஜ்வாலை அவளைப் பொசுக்கியது. அவள் வருத்தமாகச் சொன்னாள் :- இல்லை வீட்டைவிட்டு துரத்த சொல்லவில்லை. உங்களுடைய ரூபாய் எல்லாம் நீங்கள் தானம் செய்தால் அதை நான் ஏன் தடுக்கவேணும்?

சுரேந்திரன் சிரித்துக் கொண்டே சொன்னான், ‘சாந்தி, நான் அதுக்காகச் சொல்ல வரவில்லை. என் ரூபாய் உன்னது இல்லையா? ஆனால், நான் போய் விட்டால்—’

‘சீ! என்ன பேச்சு பேசுகிறீர்கள்!’

‘எனக்கு இஷ்டமான வேலையை நீ செய்வாயல்லவா?’

சாந்தியின் கண்களில் ஜலம் நிறைந்தது, அவளுடைய புருஷனின் உடம்பு சரியாக இல்லாததால்.

‘ஏன் இப்படி எல்லாம் பேசுகிறீர்கள்?’ என்று கேட்டாள் அவள். ‘எனக்கு பிடிக்கிறது, பேசுகிறேன். சாந்தி, நீ என்னுடைய ஆசைகளை, ஆவல்களைத் தெரிந்துவைத்துக்கொள்கிறாயா?’

சாந்தி தன் கண்கள் மேல் முந்தானை வைத்துக் கொண்டு தலையாட்டினாள்.

கொஞ்ச நேரம் கழித்து மறுபடியும் சுரேந்திரன் சொன்னான், 'இது தான் என் அக்காவின் பெயர்!'

முந்தானையை எடுத்து, அவனைப் பார்த்தாள் சாந்தி. ஒரு கடிதத்தைக் காட்டி சுரேந்திரன், 'இதோ பார், என்னுடைய அக்கா பேர்! என்றான்.

'எது?'

'இதோ பார்; 'மாதவி தேவி!—அவளுடைய வீட்டைத்தான் ஏலம் போட்டிருக்கிறார்கள்.'

ஒரு விநாடியில் சாந்திக்கு எல்லாம் தெரிந்து விட்டது.

'அதனால் நானு எல்லாம் திருப்பிக் கொடுக்கணும் என்கிறீர்கள்?'

'ஆம், அதனால்தான், கட்டாயம் எல்லாம் திருப்பி தந்துவிடுவேன்; எல்லாம்! எல்லாம்!'

மாதவியின் பெயரைக் கேட்டதும் சாந்திக்கு கொஞ்சம் துக்கம் உண்டாகிவிட்டது. அவளுக்கு 'அக்கா' மீது பொறாமை உண்டாகிவிட்டது போல் தோன்றுகிறது.

'அவள் உங்களுடைய 'அக்கா' இல்லாமல் வேறு யாராவது இருக்கலாம். 'மாதவி' என்று எத்தனையோ பேர் இருப்பார்கள்! பெயருக்காக—'

'அக்காவின் பெயருக்கு நான் மரியாதை காட்ட வேண்டாமா?'

'நன்றாகச் செய்யுங்கள்! ஆனால் அவளுக்கு ஒன்றும் தெரியாது.'

'அவளுக்குத் தெரியா விட்டால் போகட்டும், ஆனால் நான் அதை அகௌரவப்படுத்த முடியுமா?'

'எத்தனையோ பேருக்கு 'மாதவி' என்று பெயர் இருக்கிறது'.

'துர்க்கையின் பெயரை எழுதி அதன்மேலே நீ காலை வைப்பாயா?'

'சீச்சீ! தெய்வத்தின் பெயர் எழுதி—'

சுரேந்திரன் சிரித்து விட்டான். சரி, தெய்வத்தின் பெயர் வேண்டாம். ஆனால் அஞ்சாயிரம் ரூபாய் தருகிறேன்; ஒரு வேலை செய்வாயா?'

'என்னது?' என்றாள் அவள் சந்தோஷமாக

சுவற்றில் சுரேந்திரனுடைய படம் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. அதைக் காட்டி அவன் சொன்னான், 'இந்தப் படத்தை—'

'என்ன?'

நாலு பிராமணர்களிடம் கொடுத்து தூக்கிக்கொண்டு போய் ஆற்றங்கரையில் எரிக்கச் சொல்ல உன்னால்—'

அருகிலேயே எங்காவது இடி விழுந்துவிட்டால் முதலில் ஒரு விநாடி வரை ரத்தம் உலர்ந்து விடுவது போலவும், பாம்பால் தீண்டபபட்ட நோயாளியின் முகம் கறுப்பதைப் போலவும் ஆகிவிட்டது சாந்தியின் நிலைமையும். பிறகு அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வு வந்தது; முகத்திலும் கண்களிலும் ரத்தம் பாய்ந்தது. பிறகு பரிதாபமாகப் புருஷனின் முகத்தைப் பார்த்துக் கொண்டே அவள் கீழே இறங்கி விட்டாள். புரோகிதரைக் கூப்பிட்டு வேண்டிய

பரிகாரம் செய்தாள்; அப்புறம் அக்கா யாராக இருந்தாலும் சரி, அவளைப்பற்றி அவரிடம் ஒன்றும் சொல்லுவதில்லை என்ற தீர்மானத்துக்கு வந்தாள். பிறகு ரொம்ப நேரம் வரை அறையிலேயே கிடந்து அழுது கொண்டிருந்தாள். இவ்வளவு கடுமையான பேச்சை அவள் தன் ஆயுளில் கேட்டதே இல்லை.

சுரேந்திரன் கொஞ்ச நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தான்; பிறகு எழுந்து வெளியே போனான். ஆபீஸில் மதுரா பாபுவைச் சந்தித்தான். எடுத்தவுடன் கேட்டான், 'கோலா கிராமத்தில் யாருடைய சொத்தை ஏலம் போட்டீர்?'

'செத்துப்போன ராமதனு ஸன்யாவின் விதவை மருமகளுடைய சொத்தை—'

'ஏன்?'

'பத்து வருஷத்து கிஸ்திபாக்கி—'

'வருக்கை கொண்டு வாருங்கள் பார்க்கலாம்.'

மதுராபாபு முகமே வெலவெலத்துப் போய் விட்டார். சமாளித்துக் கொண்டு, வருக்கு புஸ்தகம் எல்லாம்' பப்னாவிலிருந்து இன்னும்—வரவில்லையே! என்றார். சரி அப்படியானால் வருக்குக் கொண்டு வர ஆளை அனுப்பும். விதவை இருக்க கொஞ்சம் கூட இடம் விடவில்லையா?'

'இல்லை என்று தெரிகிறது.'

'அப்படியானால் அவள் எங்கே இருப்பாள்?'

மதுராபாபு தைரியத்தைத் திரட்டிக் கொண்டு சொன்னார், 'இத்தனை நாள் இருந்த இடத்திலேயே—'

'இத்தனை நாள் எங்கே இருந்தாள்.'

'கல்கத்தாவில், அப்பா வீட்டில்.'

'அப்பா பெயர் தெரியுமா?'

'தெரியும்; விரஜலால் லாஹிடீ.'

'விதவையின் பெயர்?'

'மாதவி தேவி.'

தலை குனிந்து கொண்டு அங்கேயே உட்கார்ந்து விட்டான் சுரேந்திரன்.

மதுராபாபு திடுக்கிட்டு, 'ஏன்? ஏன்?' என்றார்.

அந்தக் கேள்விக்கு சுரேந்திரன் பதில் ஒன்றும் அளிக்கவில்லை. ஒரு வேலையாளைக் கூப்பிட்டுக் கூறினான்; ஒரு நல்ல குதிரைக்கு சேணம் கட்டி கொண்டு வரச் சொல்லு—நான் இப்போதே கோலா கிராமத்துக்குப் போக வேணும். இங்கிருந்து கோலா கிராமம் எவ்வளவு தூரம் தெரியுமா?'

'பத்து க்ரோசம் இருக்கும்.'

'இப்போது ஒன்பது மணி ஆகிறது. ஒரு மணிக்கெல்லாம் அங்கே போய்ச் சேர்ந்து விடலாமா?'

குதிரை வந்ததும் அதன் மேல் ஏறிக் கொண்டு, 'எந்தப் பக்கம்?' என்று கேட்டான்.

'வடக்குப் பக்கம். கொஞ்ச தூரம் போய் மேற்குப் பக்கம் திரும்ப வேணும்.'

சவுக்கடி பட்டுப்பாய்ந்தது குதிரை.

அதைக் கேட்ட சாந்தி சுவாமி அறையில் தன் தலையை மோதி உடைத்துக்கொண்டாள்.

'சுவாமி! இதுதான் உன் திருவுள்ளமா? அவளை நான் மறுபடியும் அடைய முடியுமா?'

அப்புறம் இரண்டு சேவகர்கள் குதிரை மீதேறி கோலா கிராமத்தின் பக்கம் பறந்தார்கள். ஜன்னல் வழியாக அவர்களைப் பார்த்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சாந்தி.

'துர்க்கை அம்மா! ஒரு ஜோடி எருமை உனக்குப் பலி இடுகிறேன்— என்ன வேணுமோ, செய்கிறேன். அவளை மாத்திரம் திருப்பித் தந்து விடு. என்னுடைய நெஞ்சை பிளந்து உனக்கு ரத்தம் கொடுக்கிறேன் தாயே! உன் தாகம் தணியும் வரை கொடுக்கிறேன்-அவளை மாத்திரம்—!'

ஃ ஃ ஃ

கோலா கிராமம் போய்ச் சேர இன்னும் இரண்டு க்ரோச தூரம் தான் பாக்கி. குதிரையின் வாயில் நுரை தள்ளி கடிவாளம் எல்லாம் நனைந்துவிட்டது. வயல் வரப்புகளை உடைத்துக்கொண்டு, வாய்க்கால்களை எல்லாம் தாண்டிகொண்டு, உயிரையே கால்களில் வைத்துக்கொண்டு பறந்து கொண்டிருந்தது குதிரை!

குதிரை மீது உட்கார்ந்திருந்த சுரேந்திரனுக்குத் தலை சுற்றலாரம்பித்தது; மயக்கம் வரும்போலிருந்தது; உள்நாடியே வெடித்து வெளி வந்துவிடும் போலிருந்தது. பிறகு இருமலோடு வந்து விழுந்தது— இரண்டு துளி ரத்தம்! அழுக்கு படிந்த சட்டையில் ஒட்டிக் கொண்டது அது. கையால் முகத்தைத் துடைத்துக்கொண்டான் அவன்.

ஒரு மணி ஆவதற்குள்ளேயே அவன் கோலா கிராமத்திற்குப் போய் விட்டான். பாட்டையிலிருந்த ஒரு கடைக்காரனிடம் கேட்டான்:—'இதுதானா கோலா கிராமம்?' என்று.

'ஆம்.'

'ராமதனு ஸன்யாலின் வீடு எது'?

'இந்தப் புறம்'

மறுபடியும் குதிரை பாய்ந்து, அந்த வீட்டருகில் சென்றது. வாசலிலேயே ஒரு சேவகன் உட்கார்ந்திருந்தான். யஜமானனைக் கண்டதும் அவன் கும்பிட்டான்.

'வீட்டிலே யார் இருக்கிறார்கள்?'

'ஒருத்தருமில்லை.'

'ஒருத்தருமில்லையா? எங்கே போய்விட்டார்கள்?'

'காலையிலே படகிலே ஏறிப்போனார்கள்.'

'எங்கே? எந்த வழியாக?'

'இதற்கருகே—'

ஆற்றங்கரையோடு பாதை இருக்கிறதா? குதிரை போக முடியுமா?'

'நிச்சயமாகத் தெரியாது. போகலாம்.'

மறுபடியும் பாய்ந்தது குதிரை. இரண்டு க்ரோசம் சென்றதும் வழி நின்று விட்டது; இனி குதிரை போக முடியாது. குதிரையை விட்டு விட்டுக் கால் நடையாகப் புறப்பட்டான் சுரேந்திரன். போகும்போது சட்டைமேல் பல துளிரத்தம் விழுந்திருப்பதை அவன் கண்டான். அப்

போதும் அவனுடைய உதடுகளிலிருந்து ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. ஆற்றில் இறங்கி ஒருபிடி ஜலம் அள்ளிக் குடித்தான். மறுபடியும் நடக்க ஆரம்பித்தான். காலில் செருப்பு கூட இல்லை. உடம்பு முழுவதும் ஒரே புழுதி; நடுநடுவில் ரத்த காயம். மார்பில் யாரோ இரத்தம் தெளித்து விட்டது போல்!

பகல் மங்கலாரம்பித்தது. கால்கள் தடுமாற ஆரம்பித்தன. இந்த முறை படுத்தால் ஒரேயடியாகப் படுத்து விட வேண்டியது போல் ஆகிவிட்டான். ஆகையாலேயே மரணப் படுக்கையில் இந்த வாழ்வின் கடைசியான மகா சாந்தியைப் பெறுவதற்காக அவன் வேகமாக நடக்கிறான் போலும். இந்த உடம்பில் இருக்கும் சக்தி எல்லாம் செலவழித்துக் கடைசியில் படுக்கையிலேயே படுத்து விடுவான்; அப்புறம் எழவே மாட்டான்.

ஆற்றின் திருப்பத்துக்கு அருகில் அதோ-ஒரு படகு அல்லவா? ஏதோ புல் மண்டின புதரை விலக்கி அது வழி செய்துகொண்டு வருகிறது. சுரேந்திரன் கூப்பிட்டான், 'அக்கா' என்று.

ஆனால் உலர்ந்த தொண்டையிலிருந்து வார்த்தைகள் வெளி வரவில்லை. இரண்டு துளி ரத்தம் மாத்திரம் கீழே சிந்தியது.

'அக்கா!'—மறுபடியும் இரண்டு துளி ரத்தம்!

புதர் படகின் போக்கைத் தடுத்துக் கொண்டிருக்கிறது. சுரேந்திரன் அருகில் போய்விட்டான்.

'அக்கா!' என்று மறுபடியும் கூப்பிட்டான்.

நாள் முழுவதும் பட்டினி கிடந்ததாலும், மனக் கஷ்டத்தாலும் மாதவி உயிர் இல்லாதவள் போல், தூங்கியிருந்த சந்தோஷ குமாரன் அருகிலேயே கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். திடீரென்று யாரோ அவளைக் கூப்பிடும் குரல் கேட்டது; பழைய பழக்கமான குரல்! எழுந்து உட்கார்ந்தாள் மாதவி. உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தாள்.—உடம்பு முழுவதும் ஒரே புழுதியில்—அடே! அவர் 'ஸார்' போல் இருக்கிறதே!

'அடே! சீக்கிரம் படகை கரை கிட்டே கொண்டு போகச் சொல்லடா.''

அப்போது சுரேந்திரன் மெதுவாகக் கீழே விழுந்து கொண்டிருந்தான். எல்லோரும் சேர்ந்து அவனைத் தூக்கி எப்படியோ படகில் கிடத்தினார்கள். முகத்திலும் கண்கள் மீதும் ஜலம் தெளித்தார்கள். ஒரு மாலுமி அவனுடைய அடையாளம் தெரிந்து கொண்டு, 'இவர் லாலதா கிராமத்து ஜமீன்தார்' என்றான்.

கழுத்தில் இருந்த பொன்மாலையை தாயத்துடன் கழற்றி அவன் கையில் கொடுத்து மாதவி, 'இன்றைக்கு ராத்திரிக்குள் லாலதா கிராமத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்க முடியுமா? அப்படிச் சேர்த்தால் ஒவ்வொருத்தனுக்கும் ஒரு மாலை தருகிறேன்' என்று சொன்னாள்.

பொன் மாலையைக் கண்டதும் மூன்று பேர் கயிற்றுடன் ஆற்றில் குதித்தார்கள்.

பொழுது சாய்ந்தபின் சுரேந்திர

னுக்கு உணர்வு வந்தது. கண்களைத் திறந்து மாதவியின் முகத்தையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவளுக்கு 'முசுக்கு இல்லை. நெற்றியில் கொஞ்சத்தைத் தான் முந்தானை மறைத்திருந்தது. சுரேந்திரனுடைய தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள்.

கொஞ்ச நேரம் கழித்து அவன் கேட்டான், 'நீ அக்கா தானே?' என்று.

முதலில் அவள் ரொம்ப ஜாக்கிரதையாக அவனுடைய உதடுகள்மீது பட்டிருந்த ரத்தத் துளிகளைத் துடைத்தாள்; அப்புறம் தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

'நீ அக்காதானே?'

'நான் மாதவி,'

கண்களை மூடிக்கொண்டு மிருதுவான குரலில் அவன், 'ஆம்-ஆம்,' என்றான்.

அந்த மடியிலேயே உலகத்து இன்பம் எல்லாம் நிறைந்திருக்கிறது போலும். இத்தனை நாள் கழித்து அந்த இன்பத்தை தேடிப் பிடித்ததால் அவனுடைய அதரங்களிலே புன் சிரிப்பு படர்ந்தது.— 'அக்கா! ரொம்ப கஷ்டமாக இருக்கிறது'.

சல, சலவென்று படகு ஓடிக்கொண்டிருக்கிறது. சுரேந்திரனுடைய முகத்தின்மீது நிலவு பட்டுக்கொண்டிருக்கிறது. வேலைக்காரி ஒரு ஒடிந்த விசிறியால் மெதுவாக விசிறிக்கொண்டிருக்கிறாள்.

மறுபடியும் சுரேந்திரன் கேட்டான், 'எங்கே போய்க்கொண்டிருந்தாய்?'

தழுதழுத்த குரலில் மாதவி, 'பிரமீளாவின் மாமனார் அகத்துக்கு,' என்றாள்.

'சீ! அக்கா! இப்படி யாராவது சம்மந்தி வீட்டுக்குப்போவார்களோ?'

## பத்தாவது அத்தியாயம்,

தன்னுடைய மாளிகையின் படுக்கை யறையில், அக்காவின் மடிமீது தலை வைத்துக்கொண்டு மரணப் படுக்கையில் கிடக்கிறான் சுரேந்திரன். அவனுடைய இரண்டு கால்களையும் தன் மடியில் வைத்து கண்ணீரால் கழுவிக் கொண்டிருக்கிறாள் சாந்தி. பப்னாவிலிருந்த டாக்டர்கள் வைத்தியர்கள் எல்லோரும் சேர்ந்து முயற்சித்தும் ரத்தப் பெருக்கைத் தடுக்க முடியவில்லை. ஐந்து வருஷத்துக்கு முன்பட்ட அந்தக் காயம், இப்போது ரத்தம் கக்கிக்கொண்டிருக்கிறது.

மாதவியின் ஹிருதயத்தினுள்ளே என்ன நடக்கிறதென்று சொல்ல முடியாது. நமக்கும் நிச்சயமாகத் தெரியாது. ஐந்து வருஷத்திற்கு முந்தி நடந்த சமாசாரங்கள் அவனுக்கு ஞாபகம் வருகிறது போலிருக்கிறது. அவள் அவனை வீட்டை விட்டுக் கிளப்பி விட்டாள்; ஆனால் திரும்ப கொண்டு வரவில்லை; இப்போது சுரேந்திரனே திரும்பி வந்திருக்கிறான்.

மாலை ஆன்பின் பிரகாசமான விளக்கின் வெளிச்சத்தில் சுரேந்திரன் மாதவியின் முகத்தைப் பார்த்தான். கால்களின் அருகில் உட்கார்ந்திருந்த சாந்தி கேட்டு விடப் போகிறாளே என்று மாதவியின் முகத்தை தன்

# அகில இந்தியாவுக்கும் கல்விக்காகச் செலவழிக்கப்படும் தொகை எவ்வளவு?

| வருஷம் | | ரூபாய் |
|---|---|---|
| 1928–29 | — | 27,07,32,258 |
| 1929–30 | — | 27,42,82,018 |
| 1930–31 | — | 28,31,61,446 |
| 1931–32 | — | 27,18,56,622 |
| 1932–33 | — | 25,78,[illegible]5,8[illegible]8 |
| 1933–34 | — | 26,17,65,186 |
| 1934–35 | — | 26,52,11,420 |
| 1935–36 | — | 27,32,39,689 |

கைகளால் முகத்தருகில் இழுத்து மெதுவாகப் பேசினான்.

'அக்கா! அன்றைக்கு என்னை வீட்டை விட்டு துரத்தினாயே ஞாபகம் இருக்கிறதா? நான் அதனால்தான் பழிக்குப் பழி வாங்கி விட்டேன்; உன்னையும் துரத்தி விட்டேன். பழி தீர்ந்து விட்டதல்லவா?'

ஒரு விநாடிக்குள் மாதவி பேச்சு மூச்சு இல்லாமல், குனிந்த தன் தலையை அவன் தோள் மீது போட்டு விட்டாள்.

அப்புறம் அவளுக்கு உணர்வு வந்த போது வீட்டில் ஒரே அழுகை மயமாக இருந்தது.

ஞானக்களஞ்சியம்
ஜோதி

# வேதாந்த ரகசியங்கள்

—ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள்

**பற்றின்மை:—**

கத்தியுறையும் கடவுள் வாசகமும்

*கத்தியின் உறையோடு கத்திக்கு யாதொரு சம்பந்தமுமில்லையானாலும் கத்தியின் உறைக்குள்ளே அது இருக்கின்றதெனக் கூறுவது சகஜமல்லவா? அதுபோல பரமாத்மாவிற்கு தேகத்துடன் ஒரு விதத்திலும் சம்பந்தமில்லை என்று வந்தாலும், தேகஸ்தன் (தேகத்திற்குள்ளே இருப்பவன்) என்று சொல்லுகின்றார்கள். எங்ஙனம் கத்திக்கும் உறைக்கும் யாதொரு பற்றுதலுமில்லையோ அங்ஙனமே ஆத்துமாவிற்கும் தேகத்திற்கும் யாதோர் சம்பந்தமுமில்லையென அறிதல் வேண்டும்.*

**புண்ணிய பாவம்.**

பருவத்திற் பழுத்தல்

*புற்கள், செடிகள், மரங்கள் இவை கால நியமத்தையனுசரித்துப் பூத்தும் பழுத்தும் வருவது வழக்கம். அதுபோல் ஒவ்வொருவருஞ் செய்கின்ற புண்ணிய பாவங்கள் அதகற்கேற்பக் கால நியமத்தால் முறையே பக்குவமுற்று அவ்வக் கர்ம பலன்களை ஊட்டுவிக்கும்.*

**நன்மைவிரும்பின் தீமை நீக்கு:—**

புயற்காற்றும் பெரிய விருக்ஷங்களும்

*சிறிய காற்றானது மரங்களிலுள்ள பழுத்த இலைகளை உதிர்க்கும். பெருங்காற்று விருக்ஷங்களின் பெரிய கொம்புகளை முறிக்கும். புயற்காற்றோவெனின் (அதாவது சண்டமாருதமோ வெனின்) மேற்படி விருக்ஷங்களை வேரோடு பிடுங்கி எறிந்துவிடும். அதுபோல் சிறிய பாவமானது மனதிற்குள் பரஸ்பர கலகமூட்டித் திரவிய (பண) நஷ்ட முதலியவற்றை யுண்டாக்கும். பெரிய பாவம் சத்துருக்களைக்கொண்டு வியாதிகளாலும் சரீர அவயவங்கட்குக் குறை*

வை யுண்டு பண்ணும். மஹா பாவம் பிராணனைப் போக்கியே தீரும். ஆகலால், ஆயுள், ஆரோக்கியம், செல்வம் இவற்றை விரும்புகின்ற யாவரும், எல்லாவிதமான பாவச் செயல்களின்றும் நீங்கி யிருக்க வேண்டிய தவசியகமாம்.

## ஆசை அதிக தாபம்:-

விடாய் தீராத உவர்க்கடல் நீர்.

தாகத்தால் வருந்துகின்ற ஒருவனுக்கு எவ்வளவு உவர்க்கடல்கள் கிடைத்தாலும் அவையொன்றும், அவனது தாகத்தினைத் தீர்ப்பதற்கு உரியனவாகா. சிறிதேனும் சுத்தஜலம் கிடைக்குமாயின் அதனையுட்கொண்டு அவன் விடாய் தீர்ந்து மகிழ்ச்சி பெறுவான்.

அது போல் பேராசையுள்ள ஒருவனுக்கு இப் பூலோக முழுதும் கிடைத்தாலும் திருப்தியுண்டாவதில்லை. ஆனால் அவனுடைய ஆத்துமாவைப் பற்றிய அறிவு சிறிதேனும் அவனுக்குக் கிடைக்குமேல், அவன் மகா சந்தோஷத்தை அடைவான்.

## வாசனை வெளி வருதல்:-

செம்பின் களிம்பும் ரசாயன சாஸ்திரியும்

ஒருவன் செம்பிலுள்ள களிம்பை நீக்குவதற்காக அதனைப் புளியினால் தேய்க்கலானான். சிறிது நேரஞ் சென்ற பொழுது மீண்டும் களிம்பு காணப்பட்டது. இவ்விதமாய் அநேக முறை முயன்றும் களிம்பைப் போக்குவதற்கு அவனால் முடியவில்லை. ஆனால் ஒரு ரசாயன சாஸ்திரியோவென்றால் வெகு எளிதாய் சாஸ்திரப்படி புடம்போட்டுச் செம்பிலுள்ள களிம்பை முற்றிலும் நீக்கி விடுவான். பின்னர் அதில் களிம்பு உண்டாவதேயில்லை. அது போல ஒரு மனிதனுடைய மனதினுள் ஒடுங்கி மறைந்திருக்கின்ற மலின வாசனையானது தாமிரத்திலுள்ள களிம்பைப் போலாம். அதனை நீக்குவதற்கு ஜடை மரவுரிகளைக் கொண்டாவது சாத்தியமாவதில்லை. "கேவலம் வெளி வேஷங்களைத் தரிப்பதால் மலின வாசனையைச் சொற்ப நேரம் அடக்கி வைக்கலாமென்றாலும், அது மறுகணத்தில் வெளியே வந்து விடும். ஆனால், முறைப்படி நிர்விகல்ப சமாதிப் பழக்கத்தினைக்கொண்டு ஒரு ஞான யோகியானவன் அம்மலின வாசனையைக் களைய விரும்புவையேல் யோகம் பயில்வாய்.

## அறிவாளியாதல் பேருதவி:—

தண்ணீரில் விழுந்தவனும் தப்பித்துக் கொள்ள உபாயமும்

கிணற்றில் கிடந்து தண்ணீரைப் பருகி அமிழ்ந்திறந்து போகுந் தருணத்திலுள்ள ஓர் மனிதன் தன்னுடன் கூடக் கிடந்து சாகப்போகின்றவனை யிருக்கின்ற வேறொருவனைப் பிடித்துக் கரையேற்றுவதென்பது பிரயாசமாகுமல்லவா? ஆனால் கிணற்றின் மேற்பாகமாகிய கரையிலிருப்பவனுக்கோவென்றால், கீழே கிடப்பவனைத் தூக்கி மேலே ஏற்றி விடுவது வெகு சுலபமாகும். அது போல் அஞ்ஞானியாகிய ஒருவன் தன்னைப் போலுள்ள வேறொரு அஞ்ஞானியை ஞானியாக்குவது பிரயாசமாகும். அன்னியர்களை ஞானிகளாக்க வேண்டி சிரமப்படுகின்ற ஒருவன் முதலில் தன்னைத்தானே ஞானியாக்

இக் கொள்ளுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

குணம் அறிவின் நிழல் :—

கழுதைத்தோலும் காராவின் பாலும்

நாயினுடையவும் கழுதையினுடையவும் தோல்களால் அமைக்கப்பட்ட பாத்திரங்களில் கறந்து வைத்திருக்கின்ற காராம் பசுவின் பாலானது, பரிசுத்தகர்மங்களுக் கென்றல்ல ;எவ்விதத்தாலும் அங்கீகரிக்கத் தக்க யோக்கியதையுள்ளதல்ல. அது போல் ஒருவனுக்கு எவ்வளவுதான் விசேஷஞான முண்டாயிருந்தாலும் அவனது இருதயமானது அசூயையாதி துர்க்குணங்களால் நிறையப் பட்டிருக்குமானால் அத்துர்க்குணங்களை ஆதாரமாகக் கொண்டுள்ள அவனது ஞானம் யாதொன்றுக்கும் உபயோகமுள்ளதல்லவென்று அறிதல் வேண்டும்.

அகம்பாவம் :—

ஒரு சிங்காரமான மனிதனும்
மஹானது தடிக்கம்பும்.

முன் ஒரு காலத்தில் சிருங்கார குணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு ரஸிகன் (அதாவது சிற்றின்பப் பிரியன்) ஓர் மார்க்கத்தில் சென்று கொண்டிருக்கும் பொழுது எளிய வேஷந்தாங்கிய மஹானும் வயது சென்றவருமாகிய ஒரு சாதுவினுடைய சரீர அவயவம், அச்சிருங்கார புருஷனுடைய தேகத்தில் உராய்ந்தது. அக்கணமே அவன் அச்சாதுவினைப் பிடித்துக் கீழே தள்ளிக் குத்தி மிதித்து அடிக்கத் தொடங்கினான். சிறிது நேரஞ் சென்ற பின்னர் சிருங்கார புருஷனை நோக்கிச் சாது சொல்லுற்றார்:— 'ஐயோ பாவம்! இவ்வளவு அழகான மனிதனுடைய கைகால்களுக்கு நான் எவ்வளவு வருத்தத்தை யுண்டுபண்ணி விட்டேன்! இது என்னுடைய மதியின்மையின் காரணமாகவன்றோ நிகழ்ந்ததாகும்? இதோ எனது கையில் ஒரு நல்ல தடி இருக்கின்றது! இன்றுவரை அது தன்னுடைய பிரயோஜனத்தை யனுபவிக்க முடியாமல் வீணே இருந்து ஏங்கி வாட்டமுற்றுக் கிடக்கின்றது! எவ்வளவு அடித்தாலும் ஒடியாததும்—அடிபடுகின்றவர்களுக்கு நல்ல வருத்தத்தை யளிக்கக் கூடியதுமாகிய இத்தடியினால் எனக்கு ஒரு உபகாரமும் உண்டானதில்லை! இத்தடி வெகு நாளாய் விரும்பி வருகின்ற பேராசையை ஒரே சமயத்தில் நிறைவேற்றி வைக்கக் கூடிய தங்களைப் போன்ற யோக்கிய புருஷர்களை இந்த நிமிஷ பரியந்தம் பார்க்கும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆதலின், இத்தடியை அங்கீகரித்து நன்றாக இதன் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும் பக்ஷத்தில் அதனால் தங்களுடைய கரசரணாதிய வயவங்களுக்குச் சிரமமின்றி யிருப்பதற்கும் இத்தடியின் பிரயோஜனத்தை அது அடைந்து கொள்வதற்கும் ஏதுவாகும்.

இதைக் கேட்டவுடன் ரஸிகன் பலவாறு மனங் குழம்பியவனானான். 'ஒரு தடிக்கம்பானாலும் அதனால பிரயோஜன முண்டென்று இம்மஹாத்துமா சொல்லுகின்றார். ஆனால் எவ்வளவோ பெருமையுள்ளதாகிய இம்மானிட ஜென்மத்தினால் ஏதேனும் ஓர் பிரயோஜன முண்டாயிருக்க

வேண்டுமல்லவா? அது இவரைப் போலுள்ள மகா சாந்த குணமுள்ளவர்களை உபத்திரவஞ் செய்வதாகயிராது எனக்கூறி அம்மஹானுடைய பாதமலர்களில் வீழ்ந்து வணங்கியும், தனது குற்றங்களை மன்னிக்கும்படி வேண்டியும் அன்று முதல் சிற்றின்பத்திலிருந்த நோக்கத்தை நீக்கி ஓர் சாதுவினுடைய நடைகளைக் கைப்பற்றியும் கடைத்தேறலானான்.

ஆதலால் ஒவ்வொருவரும் துரபிமானத்தாலாவது வேறு காரணத்தாலாவது செருக்கடைந்து மானிடவாழ்வை வீணுக்கிக் கெடாது இச்சென்மம் மேன்மை யடைவதற்காகப் பிரயத்தினஞ் செய்தல் வேண்டும்.

நற்குண மின்மை: —

சங்கும் சாந்த குணமின்றிய மனிதனும்.

சங்கு மாமிசத்துடனிருக்கும் பொழுது அதை ஒருவரும் பூஜிக்கின்ற வழக்கமில்லை. மாமிசம் நீங்கிய பின்னரோ அது பூஜிக்தற்குரியதாகும். அதுபோல துர்மோகங்களால் நிறையப்பட்ட இருதயத்தோடு கூடிய ஒரு மனிதன் கொண்டாடத் தக்கவனல்ல. அம்மாதிரியான குற்றங்களினின்றும் நீங்கியவன் எவனே அவனே பூஜை செய்யத் தக்கவன்.

அகத்தூய்மை ஆபத்தை நீக்கும் :—

அக்கினியும் அந்தரங்க பக்தனும்.

அக்கினியினுடைய சமீபத்தில் வசிக்கின்ற ஒருவனுக்கு இருட்டையும் குளிரையும் கண்டு பயப்பட வேண்டியதாவசியகமில்லை, அதுபோல குருநாதனது தொண்டு புரிந்து கொண்டே யிருக்கின்றவனுக்குப் பாவத்தைக் கண்டும், அஞ்ஞானத்தைக் கண்டும் பயப்பட வேண்டிய நியாயமில்லை.

இருவகை அன்பு :—

உலர்ந்த புல்லும்

உயர்ந்த ஞானனுபவமும்.

உலர்ந்த புல்லில் நெருப்புப் பற்றுவதும் அது மறுகணத்தில் அணைந்து விடுவதும் சாதாரணமாய் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பச்சை மரங்களிலோ வென்றால் அந்தத் தீபானது பிடிப்பதற்கு மிகப் பிரயாசமாயிருக்கும். அது அணைவதற்கும் அவ்விதமேயாம் அதுபோல, மந்தமதிகட்கு கடவுள் விஷயத்தைப்பற்றி ஒருவன் பேசுவதைக் கேட்குங்கால் உடனே பக்தி யுண்டாகியும்—உடனே மறைந்தும் போகும். விவேகிகளோவெனில், வெகு ஆழமுள்ளனவாகிய தத்துவ சாஸ்திரக் கடலில் மூழ்கி மிகப் பிரயாசத்துடன் அதனின்றும் ஈசுவர சாக்ஷாத்காரமாகின்ற ஞானனுபவத்தைச் சேகரித்துக் கொள்ளுகின்றனர்கள். இது அவர்களிடத்தினின்று ஓர் காலத்தும் பிரிந்து போவதில்லை.

ஞான தீபம்: —

விளக்குத் திரியும்

விளக்கமின்றிய ஞானமும்.

தண்ணீர் பட்டு நனைந்திருக்கின்ற திரியில் தீபம் நன்றாக எரிகின்றதில்லை. விளக்கு எரியாததால் அதிலிருக்கின்ற எண்ணெயும் குறைவதில்லை. அதுபோல் பாவத்தோடுள்ள மனத்தினில் ஞானம் பிரகாசிப்பதில்லை. ஞானமில்லாதவனுக்கு கருமங்களும் (எண்ணெ

யைப்போல்) நாசமடைவதில்லை. ஆதலால் ஞானமாகிய தீபம் எப்பொழுதும் பிரகாசிப்பதற்குப் பாவமாகிய நீரை அண்ட வொட்டாது தடுத்தல் வேண்டும்.

**மனத் திருத்தம் :—**

**நிலத் திருத்தமும் மனத் திருத்தமும்.**

ஒரு விவசாயி பூமியின் கண்ணே முதன் முதலில் பயிற்சி செய்ய ஆரம்பிக்கும் பொழுது அந்நிலத்தில் முன்பு உண்டா யிருந்த காட்டு விருக்ஷங்களை வேரோடு களைந்தெறிதலும், பிறகு உழுது புழுதியாக்கி அதில் வேறு விதை முதலியவைகள் இல்லாத வண்ணம் பக்குவப் படுத்தலும் ஆகிய இவற்றைச் செய்ய வேண்டியதாம். அப்பால் அவன் விரும்பிய வித்துக்களை விதைப்பதானல் அவைகளின் வளர்ச்சிக்கும் விவசாயி அநுகூல மடைவதற்கும் அதுபோல ஒருவன் ஈசுவர பக்தனுவதற்காகப் புறப்படுவதற்கு முன் அவன் தன்னுடைய மனத்தில் முன்பு உண்டா யிருந்த குருட்டு நம்பிக்கைகளாகிய காட்டு விருக்ஷங்களை அடிவேரோடு பறித்துக் களைய வேண்டும். வேர்களாவது இதர விதைகளாவது பூமியிற் கிடந்தால் அவை மீண்டும் உற்பத்தியாகிக் காடு போல அடர்ந்து விடக் காரணமாம். அவ்வாறே மூட விசுவாசங்களாகிய வேர்களை பிரமாதமல்லவெனக் கருதி மனத்தினின்றும் விலக்காமலிருப்போமாயின் பக்தியாகிய நல்வித்துகள் முளைத்துச் செழிக்கு முன் அவை பெருங்காடாகி விடுவதற்கு நிமித்தமாகும். ஆதலால், சித்தத்தை நன்றாகச் சோதனை செய்த பின்னரே பரிசுத்தங்களாகிய "எண்ணங்களை" (விதைகளை) நட்டு வளர்த்தல் வேண்டும். அவ்விதஞ் செய்தால் மாத்திரமே அவை கடவுளினது பிரத்தியக்ஷமான தானியத்தைத் தடையின்றி யளிப்பதாயிருக்கும்.

---

உலகத்தில் சந்தோஷமாயுள்ள ஒருவனை எங்கே பார்க்கலாம்? பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலே.

—ஓர் அறிஞர்.

# -: ரஜபுத்திர ரமணி :-

—"தனிராம் பிரேம்ஜீ"

ஹிந்தியிலிருந்து வெ. பத்மநாபன் மொழிபெயர்த்தது

சென்ற மாதத் தொடர்ச்சி

## 5

மறு நாள், மீரா தன்னுடைய ராஜ்ஜியத்திலிருந்து வெகு தூரத்திலுள்ள மற்றொரு ராஜ்ஜியத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். இந்த ராஜ்ஜியத்தின் இளவரசன் விஜய சிம்மனுக்கும் மீராவுக்கும் விவாகம் செய்விக்க வேண்டுமென்று ஏற்கனவே நிச்சயமாகி யிருந்தது. மோகன சிம்மனுக்கும் மதன சிம்மனுக்கும் யுத்தம் மூண்ட செய்தி விஜய சிம்மனுக்கு எட்டியதும் அவன் தன்னுடைய சிறிய சேனையுடன் மோகன சிம்மனுக்கு உதவி செய்ய ஓடோடியும் வந்தான். ஆனால் அவன் வருவதற்குள் மோகன சிம்மன் போரில் தோற்றுவிட்டிருந்தான். விஜய சிம்மனுடைய சேனை ஸத்தாருடைய சேனையைக் காட்டிலும் சிறியதாகையால் அவன் தன் சைனியத்தை திருப்பியனுப்பிவிட்டு, ஓர் மொகலானைப்போல் வேஷம் பூண்டு அஜயக் கோட்டையினுள் பிரவேசித்தான். விஜய சிம்மன் மீரா எக்கதிக்காளானாளோ என்ற விசாரத்துடன் அஜயக்கோட்டையில் அவளைத் தேடிக் கொண்டிருந்தவன் தற்செயலாக ஸத்தார் இருக்குமிடத்தில் மீரா இருப்பதைக் கண்டு அவளுடைய ஆபத்தைக் களைந்தான்.

மீரா, விஜய சிம்மனுடைய பெயரைக் கேட்டிருந்தாள். ஆனால் அவனை நேரில் பார்த்ததில்லை. அவள் தனக்களிக்கப்பட்டிருந்த விடுதியின் எதிரிலிருந்த பசும் புற்றரையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ யோசித்துக் கொண்டிருந்தாள். விஜய சிம்மன் அப்பொழுது தானணிந்து கொண்டிருந்த மொகலாயன் வேடத்துடனேயே அவ்விடம் வந்தான்.

மீரா, ராஜகுமாரனை அந்த வேடத்தில் கண்டதும் திடுக்கிட்டு ஒரு புறமாக ஒதுங்கி நின்றாள். அந்த இடத்திலும் ஒரு மொகலாயன் தென்பட்டானே என்று அவள் விசனித்தாள்.

'ஒரு மொகலாயனுக்கு இந்த இடத்தில் என்ன வேலை?' என்று மீரா கேட்டாள்.

'இது என்னுடைய வீடு.'

'உங்களுடைய வீடா?'

'ஆம்'

'தாங்கள் யார்?'

'என்னை உனக்கு அடையாளம் தெரியவில்லையா?'

'ஒரு மொகலாயனை நான் எப்படி அறிந்துகொள்ள முடியும்?'

'நேற்று நான்தான் உன்னைக் காப்பாற்றினேன்.'

'தாங்களா?'

'ஆம்; நான்தான்.'

'அப்படியானால் நான் மறுபடியும் ஒரு மொகலாயனிடம் அகப்பட்டுக் கொண்டுவிட்டேன் போலும்.'

'இல்லை; இல்லை.'

'அப்படியானால் யாரிடம் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன்?'

'யாரிடமும் அகப்பட்டுக்கொள்ளவில்லை.'

'அப்படியானால் நான் இங்கிருந்து செல்ல விரும்புகிறேன்.'

'எங்கே போகப் போகிறாய்?'

எங்கே என்று நான் நிச்சயமாக எப்படிச் சொல்வது? எங்கு வேண்டுமானாலும் போகலாம்.'

'ஏன்?'

இராஜ புத்திரப் பெண்மணிகள் மொகலாயரின் வீடுகளில் தங்கமாட்டார்கள்.'

'இது ஒரு இராஜபுத்திரன் வீடாக இருந்துவிட்டாலோ'.

'நீங்கள் சொல்வதின் பொருள் எனக்கு விளங்கவில்லையே.'

'இதனுடைய அர்த்தம் இதுதான்' என்று சொல்லிக் கொண்டே விஜய சிம்மன் தன்னுடைய மொகலாய உடைகளைக் களைந்து தூர தூக்கி எறிந்தான்.

'தாங்களும் ஒரு க்ஷத்திரியன் தானே' என்று மீரா ஆர்வத்துடன் கூச்சலிட்டாள்.

'ஆம், மீரா' என்றான் விஜய சிம்மன்.

'என்னுடைய பெயரைக் கூட தாங்களறிவீர்களா?'

'நான் தான் நேற்று உன்னைக் காப்பாற்றினேன்'

'ஐயோ, தாங்களேன் என்னைக் காப்பாற்றினீர்கள்? என்னையும் அங்கேயே சாகவிட்டிருக்கக்கூடாதா?'

'ஆனால் நீ இறப்பதற்கு அதிகாரம் கிடையாது மீரா'

'ஏன்?'

'அப்படியானால் உன்னை அதிகாரம் செய்ய வேறொருவருக்கும் யோக்கியதை கிடையாதா?'

'ஏன் இல்லாமல்? ஒரு மனிதருக்கு அந்த அதிகாரம் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது.'

'அந்த அதிகாரத்தை உபயோகிக்க சக்தியிருப்பதினால்தான் நான் அவ்விதம் கூறினேன்'.

மீரா திடுக்குற்று 'நீர்தான்........' என்று சொல்லித் தயங்கினாள்.

'ஆம் மீரா; நான்தான் விஜய சிம்மன்'.

மீரா சிறிது வெட்கத்துடன் ஒரு பக்கமாகச் சொல்லலானாள்.

'எங்கே, போகிறாய்?' என்று விஜய சிம்மன் கேட்டான்.

'எங்காவது ஒளிந்து கொள்வதற்குத்தான்.'

'இப்பொழுது வேண்டாம் மீரா. இப்பொழுது நீ எங்கு சென்று ஒளிந்துகொள்வாய்?'

'ஏதாவது ஒரு இடத்தைத்தான் தேடி ஒளிந்துகொள்வேன்'.

'நீ ஒளித்துக் கொள்ள வேண்டியதில்லை மீரா. நீ மிகவும் நொந்து போயிருக்கிறாய். எவ்வளவோ ஆபத்துகளிலிருந்து தப்பித்து வந்திருக்கிறாய். மனத்தில் அமைதியுண்டாகச் சிறிது நேரம் படகில் சென்று வரலாம்' என்றான்.

மீரா ஒன்றும் பேசாமல் அவனைப் பின் தொடர்ந்தாள். இருவரும் ஒரு சிறு படகில் உட்கார்ந்து கொண்டு நதியில் சென்று கொண்டிருந்தனர். விஜய சிம்மன் தானே படகைச் செலுத்திக் கொண்டிருந்தான். மீரா அவன் எதிரில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

மாலை நேரம். அந்தி செங்கதிரோன் உலகனைத்தையும் தன் பொன்னிறக் கிரணங்களால் சோபையுறும்படிச் செய்து கொண்டே மேற்றிசையில் ஆழ்ந்து கொண்டிருந்தான். குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. வெகு நேரமட்டில் இருவரும் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தனர். இளவரசனே முதலில் பேச ஆரம்பித்தான்.

'மீரா, இந்தத் துரதிருஷ்டம் வராதிருந்தால் இச்சமயம் நமக்கு விவாகம் நடந்து விட்டிருக்கும்.'

'இந்தத் தோல்வி என் மனதில் பெரியதோர் காயத்தை உண்டாக்கி விட்டது' என்று சொல்லும் பொழுதே மீராவின் கண்களிலிருந்து கண்ணீர் பல பல வென்று உதிர்ந்தது. அவள் அழுதுகொண்டே 'இளவரசே, இது பகவானுக்கு இச்சையில்லை போலும்' என்றாள்.

'அழவேண்டாம் மீரா. நமக்கும் நல்லகாலம் வராமற் போகாது'.

'உண்மையாகவே நமக்கும் நல்ல காலம் பிறக்குமா?'

'ஏன் பிறக்காது.'

'எனக்குச் சந்தேகம் தான்.'

'ஒரு வேளை நாம் இருவரும் ஒன்று சேர்ந்தால்'—

'அதிலும்தான் நான் சம்சயப் படுகிறேன்.'

'சம்சயமா? என்ன நீ என்னை மணந்து கொள்ளச் சம்மதிக்க மாட்டாயா?'

'இப்பொழுது இல்லை இளவரசே.'

'அப்படியானால் எப்பொழுது?'

'ஒரு வேளை சில மாதங்களிலேயோ அல்லது சில வருஷங்களுக்குள்ளாகவோ அல்லது நான் ஜீவித்திருக்கும் வரையில் நடவாமற் போனாலும் போகலாம்.'

'ஏன்? நான் உனக்கு ஏதாவது தப்பிதம் செய்து விட்டேனா அல்லது

உன்னால் தான் என்னை நேசிக்க முடிய வில்லையா? ' என்று விஜய சிம்மன் பதைப் பதைப்புடன் மீராவை வினவினான்.

' அதற்காக இல்லை இளவரசே. நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டவள். நீங்கள் என்னைப் பெரிய விபத்திலிருந்து தப்புவித்தீர். உங்களைப் போன்ற குணவான் கிடைப்பது அரிது. நான் இன்று உம்மை நேசிக்கிறேன். நான் வெகு நாட்களாகவே உம்மை நேசித்து வருகிறேன் '.

' ஆனால் நீ எதற்காக விசாரப்படுகிறாய் ? '

' நான் என் விவாகத்தின் பேச்சை எப்படி எடுப்பது ? '

' ஏன் ? '

' என்னுடைய சபதம். தந்தை இறக்கும் சமயத்தில் நான் என்னுடைய தம்பியின் ரத்தத்திற்குப் பதில் செய்கிறேன் என்று பிரதிக்ஞையை செய்திருக்கிறேன். ஸத்ருருடைய ஹ்ருதயத்தில் என் கைகளால் கத்தியைச்சொருகாத வரையில் எனக்கு விவாகம் சுகம் சந்தோஷம் இவைகளால் என்ன பிரயோஜனம் ! என்னுடைய மனம் சதா சர்வ காலமும் ' பழி வாங்கு ! பழிவாங்கு ' என்று என்னை வற்புறுத்திக் கொண்டே யிருக்கிறது. நான் எங்கு பார்த்தாலும் என் தம்பியின் துடி துடிக்கும் தேகமே என் கண்களுக்குத் தோன்றுகிறது. என்னுடைய இரத்தம் கொதிக்கிறது. இதைக் காட்டிலும் என் தந்தை கொலையுண்ட காட்சியை நினைக்கும் போது என் ஹ்ருதயத்தை யாரோ வாள் கொண்டறுப்பது போன்ற உணர்ச்சி உண்டாகிறது. இதனால் தான் முதலில் என்னுடைய சபதத்தை நிறைவேற்றவேண்டும். பிறகு தான் என்னுடைய விவாகம்.'

' மீரா! உன்னுடைய சபதத்தை என்னிடம் ஒப்புவி. நான் அந்த சபதத்தை நிறைவேற்றும் வரையில் விவாகத்தைப் பற்றிய பேச்சையே எடுப்பதில்லை. '

' உம்மால் இந்த பிரதிக்ஞையைக் காப்பாற்ற முடியாது. இந்தக்காரியத்தைச் செய்ய முன் வருபவர் பெரிய தோர் சைனியத்தை எதிர்க்க வேண்டும். என்னுடைய சபதத்திற்காக உங்களையும் உங்களுடைய பிரஜைகளையும் நாசமாக்க நான் விரும்பவில்லை. இதை நிறை வேற்ற என் ஆயுள் முழுவதையும் நான் கழிக்கத்தயார் '.

' நான் அவ்விதம் உன்னை விட்டு விட முடியாது. நீ இருக்குமிடத்தில் நான் இருந்துதானாக வேண்டும். உன்னைக் காப்பாற்றும் பொறுப்பு என்னைச் சார்ந்தது. '

' ஆனால் நான் ஒரு பிரதிக்ஞையில் கட்டுண்டு இருக்கிறேன், எல்லாவற்றையும் இழந்து விட்டிருக்கிறேன். நீ வீணாக என்னோடு சேர்ந்து கஷ்டப் பட வேண்டாம். '

' நீ தனியாக இருந்து கொண்டு என்ன செய்வாய் ? '

' நான் க்ஷத்திரிய குலத்துதித்தவள். இது ஒன்றே எனக்கு இப்போது போதுமானது. க்ஷத்திரியப் பெண்களின் கடமை தாங்கள் செய்த சபதத்தை நிறை வேற்றுதல் தான். '

' நானும் ஒரு க்ஷத்திரியன் தான்!

மீரா, ஓர் ராஜபுத்திரியை தனியே யுத்தத்திற்கனுப்ப முடியாது.'

'எனக்காகத் தாங்கள் போராடுவீர்களா?'

'ஆம் மீரா, யுத்தம் தான் தொடங்குவேன். நல்ல முடிவு ஏற்பட்டாலும் கெட்ட முடிவு உண்டானாலும் பரவாயில்லை.'

'தனியாகவா யுத்த களத்திற்குப் போகிறீர்?'

'ஆம்.'

'அவ்விதம் செய்யக் கூடாது.'

'ஏன்?'

'மீராவும் தங்களோடு வருவாள்.'

'அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். மீரா, இது ராஜபுத்திரனுடைய தர்மமல்ல. ராஜபுத்திரர்களுடைய கையில் கத்தி யிருக்கும் வரையில் அவர்கள் க்ஷத்திரியப் பெண்மணிகளை யுத்தத்திற் கனுப்புவது மிகவும் தவறு.'

'நல்லது இளவரசே, பகவான் உங்களுக்கு வெற்றி அளிக்கட்டும்' என்று சொல்லிக் கொண்டே மீரா தன் மடியிலிருந்து ஒரு கத்தியை வெளியி லெடுத்து தன் கை விரலில் ஒரு காயம் செய்து ரத்தம் தோய்ந்த கத்தியை விஜய சிம்மனின் கரத்திலளித்தாள். படகு ராஜ மஹாலின் சமீபத்தில் வந்தது. இருவரும் படகை விட்டுக் கீழே இறங்கிச் சென்றனர்.

அஜயக் கோட்டையினுடைய எல்லையில் விஜய சிம்மனுடைய சேனைகள் வந்திறங்கின. மோகன சிம்மனுடைய சேனையில் எஞ்சி நின்ற சிலரும் விஜய சிம்மனுடைய சேனையுடன் கலந்து கொண்டனர். யுத்தகளமே பார்த்தறியாத பலரும் அவன் சேனையிலிருந்தனர். இவர்க ளெல்லோரும் மோகன சிம்மனுடைய கொலைக்குப் பழிவாங்கவே வந்திருந்தனர்.

கொஞ்ச நாட்களுக் குள்ளாகவே விஜய சிம்மன் எல்லைப் புறத்திலுள்ள சில கிராமங்களைக் கைப்பற்றிக் கொண்டான். விஜய சிம்மனுடைய சிறு சைனியம் இரண்டு பெரிய சேனைகளை எதிர்க்க முன் வந்திருக்கிறதே என்று ஸத்தாரும் அவனுடைய சகாக்களும் ஆச்சர்யப் பட்டுக் கொண்டிருந்தனர். அதனால் அவர்கள் விஜய சிம்மனுடைய சேனைகளை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அதுவுமல்லாமல் விஜய சிம்மன் அவர்கள் எதிர்பாரா வகையில் அவர்களை எதிர்த்தான். ஸத்தாருடைய சேனைகளும் அவனிடம் மிகுந்த அதிருப்தி கொண்டிருந்தன.

ஒரு நாள் விஜய சிம்மன் தன்னுடைய சேனையைப் பார்வை யிட்டுக் கொண்டு வரும் போது ஓர் இளைஞன் அவன் மனத்தைக் கவர்ந்தான். உடனே அவன் அருகிலிருந்த சேனாதிபதியிடம் 'இவன் யார்?' என்று கேட்டான்.

'இவன் அஜயக் கோட்டையின் ஒரு குடி' என்று சேனாதிபதி கூறினான்.

'எப்பொழுது சேனையில் சேர்ந்தான்?'

'மூன்று நாட்களுக்கு முன்பு தான்.'

'இவனுடைய வயது என்ன ?'

'பதினேழு.'

'இவ்வளவு சிறிய பாலகனை ஏன் சைனியத்தில் சேர்த்தீர் ?'

சேனாதிபதி பதில் சொல்வதற்குள் ளாகவே அவ்விளைஞன் 'ஒரு க்ஷத்திரியனுக்கு வயதுக் கணக்கு எதற்கு ?' என்று கேட்டான்.

விஜய சிம்மன் இந்தப் பதிலைக் கேட்டு ஸ்தம்பித்து விட்டான். அந்த யுவனிடம் சென்று 'உன்னுடைய பெயர் என்னப்பா ?' என்று கேட்டான்.

'ஹரி சிம்மன்.'

'தாய் தந்தையர் இருக்கிறார்களா?'

'இல்லை மகாராஜாவே. தகப்பனார், கடந்த யுத்தத்தில் இறந்து விட்டார். தாயார் முதலிலேயே இறந்து விட்டாள்.'

'நீ எதற்காக யுத்தத்திற்கு வந்தாய் ?'

'நம்முடைய தேசத்தைக் காப்பாற்றுவதற்காகவும் ராஜ குமாரனுடைய கொலைக்குப் பழி வாங்குவதற்காகவும் தான்.

:உனக்கு உயிரின் மேல் ஆசை இல்லையா ?'

'ஒரு ராஜபுத்திரனுக்கு உயிரின் மேல் ஆசை எதற்கு ?'

விஜய சிம்மன் மறுபடியும் சேனாதிபதியிடம் 'நேற்று ஹரி சிம்மன் யுத்தத்தில் கலந்து கொண்டானா ?' என்று கேட்டான்.

'ஆம் மகாராஜாவே.'

'எப்படி யுத்தம் செய்தான் ?,

மிகவும் வீரத்தனமாக நடந்து கொண்டான்.'

'சரி; ஹரி சிம்மனை' நம்மிடம் வேலை செய்ய அனுப்புங்கள்.'

ஹரிசிம்மன் இளவரசனிடம் வேலை செய்யத் தொடங்கினான். சில நாட்கள் கழிந்து விட்டன. ஒரு நாள் ஹரிசிம்மனும் விஜய சிம்மனும் தனியாக இருந்தனர். விஜய சிம்மன், ஹரி சிம்மனிடம் 'நீ இதற்கு முன் என்னைப் பார்த்திருக்கிறாயா ?' என்று கேட்டான்.

'நான் இதற்கு முன் தங்களைப் பார்த்ததில்லை மகாராஜ்.'

'நானாவது உன்னை இதற்கு முன் பார்த்திருக்கிறேனா ?'

'தெரியாது மகாராஜ்.'

'எனக்கென்னவோ உன்னை எங்கேயோ பார்த்திருக்கிறாப் போல் தோன்றுகிறது.'

'நீங்கள் யாரை மிகவும் விரும்புகிறீர்களோ அவரைப்போல நானிருந்தாலும் இருக்கலாம்.'

'ஆம், ஹரிசிம்மா, எனக்கும் ஆச்சர்யமாக இருக்கிறது. ஆனால் அந்த நபர் வெகு தூரத்திலிருக்கிறார்' என்று சொல்லிக் கொண்டே விஜய சிம்மன் ஒரு பெருமூச்செறிந்தான்.

'அவர் தங்களுடைய சகோதரனோ ?'

'இல்லை'.

'ஏதாவது சிநேகிதனாக இருக்கலாம்.'

'இல்லை ஹரிசிம்மா, நீ குழந்தை அந்த விஷயங்களை எப்படி அறிந்து கொள்ள முடியும்?'

'ஒரு வேளை உங்களுக்கு அவரிடம் மிருந்த அன்பு ஏற்பட்டிருக்கலாம்.'

'அன்பா! அதுவே எனக்கு எல்லாவற்றையும் விட மேலானது. அதற்காகவே யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது.'

'அவர் மிகவும் பாக்கியசாலி.'

'ஏன்?'

இதற்கு ஹரிசிம்மன் பதில் சொல்வதற்குள் யுத்த பேரிகை முழங்கத் தொடங்கியது. ஒரு சேனாதிபதி வந்து 'ஸத்தார் தன்னுடைய பெரிய சேனையுடன் வந்து கொண்டிருக்கிறான்' என்று கூறினான்.

'வந்தாலும் பரவாயில்லை. எல்லோரையும் முன்னேறிப் போகச் சொல். இன்றே முடிவான யுத்தமாக இருக்கட்டும். இன்று ஸத்தாரைக் கொன்றே தீரவேண்டும். அல்லது நாங்கள் உயிரை விட வேண்டும்.'

'அரசே, தாங்கள் பெரிய வீரர். நானும் தங்களைப் போன்ற பெரிய வீரனாக இருந்தால்........' என்றான் ஹரிசிம்மன்.

'இதில் வீரத்தனம் என்ன இருக்கிறது?'

ஹரி சிம்மன் மேற் கொண்டு ஒன்றும் பேசாமல் விஜய சிம்மனுக்கு யுத்த உடைகளை அணிவிக்கத் தொடங்கினான். பிறகு ஹரி சிம்மன் தானும் யுத்த உடைகளை அணிந்து கொள்ளலானான். விஜய சிம்மன் இதைக் கண்டு 'என்ன இது?' என்றான்.

'யுத்தத்திற்காகத்தான்.'

'நீ இங்கேயே இரு.'

'இது என்னுடைய இடம் அல்ல. நான் உங்களோடு தான் வருவேன்.'

'ஹரி சிம்மா, நீ வர வேண்டாம் எனக்கு உன்னுடைய முகத்தைப் பார்த்தால் பழைய உணர்ச்சிகள் ததும்புகின்றன.'

'மகாராஜாவே! இந்த ஒரு வரனை மாத்திரம் கொடுங்கள். நான் இன்று வந்து தானாக வேண்டும்.'

'சரி புறப்படு.'

இரண்டு பக்கத்துச்சைனியங்களும் மிகவும் கோரமாக சண்டை யிடத் தொடங்கின. விஜய சிம்மனும் சேனையின் நடுவில் போர் புரிந்து கொண்டிருந்தான். அவன் தற் செயலாக திரும்பி நோக்கிய பொழுது ஹரி சிம்மனும் ஸத்தாரும் கை கலந்திருப்பதைக் கண்டான். விஜய சிம்மன் ஒரே ஓட்டமாகத் தன் குதிரையை அங்கே நடத்திச் சென்றான். இதற்குள் மதன சிம்மன் வந்து விஜய சிம்மனை எதிர்க்கத் தொடங்கினான். முடிவில் மதன சிம்மனை விஜய சிம்மன் கீழே தள்ளினான். ஆனால் தானும் ஒரு பெரிய காயத்திற்காளானதால் அவனால் சமாளிக்க முடியவில்லை. அவனுடைய வயிற்றிலிருந்து குடல் வெளியே வந்து கொண்டிருந்தது.

ஹரி சிம்மனும் ஸத்தாரும் இன்னும் போராடிக் கொண்டிருப்பதை அவன் கண்டான். விஜய சிம்மன் ஒரு கையால் தன் வயிற்றை அமுக்கிக் கொண்டே ஹரி சிம்மனுக்கு உதவி செய்ய ஓடினான். ஆனால் ஸத்தாரும் ஹரி சிம்மனும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு கீழே விழுந்தனர்.

விஜய சிம்மன் அவர்களை நெருங்கிய பொழுது ஸத்தார் இறந்து விட்டிருப்பதைக் கண்டான். ஹரி சிம்மனுடைய மார்பிலிருந்து இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது.

ஹரி சிம்மன் கண் திறந்து நோக்கிய பொழுது விஜய சிம்மன் தன்னருகிலிருப்பதை உணர்ந்து 'இளவரசே' என்று சொல்லிக் கொண்டே தன் தலைப்பாகையை தூர எடுத்தெறிந்தான். தலைப்பாகையினுள் அடைந்து கிடந்த மயிர் ஒரேயடியாக வெளி வந்தது.

'மீரா' என்று விஜய சிம்மன் ஆச்சர்யத்துடன் கூவினான்.

'ஆம் இளவரசரே' நான்தான் தங்களுடைய மீரா.'

விஜய சிம்மனுடைய கண்களில் கண்ணீர் பெருகியது.

'ஏன் வருத்தப்படுகிறீர்? இளவரசே, இன்றுதான் என் ஜன்மம் சாபல்யமாயிற்று. நான் என்னுடைய சபதத்தை நிறைவேற்றி விட்டேன்' என்று சொல்லி விட்டு மீரா தன்னுடைய கைகளை நீட்டினாள். விஜய சிம்மன் அவற்றைப் பிடித்துக் கொண்டான்.

'மதன சிம்மன் என்ன ஆனான்'? என்று மீரா கேட்டாள்.

'நான் அவனைக் கொன்று விட்டேன்' என்றான் இளவரசன்.

'தாங்களும் கடமையைச் செய்து விட்டீர்.'

'ஆம்-மீரா, நான்...........'

விஜய சிம்மன் பூராவும் கூறுவதற்குள் அவனுடைய குடல் வெளிக் கிளம்பி வரலாயிற்று. அவனுக்கு களைப்பு மேலிட்டது. மீரா அவனுடைய குடல் வெளிவருவதைக் கண்டு 'தாங்களும் காயமுற்றிருக்கிறீர்களா?' என்று கேட்டாள்.

'இதையா காயம் என்கிறாய்? நான் ஓர் க்ஷத்திரியனாகவே இறக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டே அவனும் மீராவின் அருகில் விழுந்தான். இருவரும் ஒரு முறை ஒருவரையொருவர் நோக்கினர். இருவரும் கடைசி முறையாக சுவாஸம் விடும் பொழுது அவர்களுடைய வாயிலிருந்து ஒரே சப்தம் வெளிப்பட்டது.

'ஆ, ரஜபுத்திரனே' என்று மீரா கத்தினாள்.

'ரஜபுத்திர ரமணி' என்றான் விஜய சிம்மன்.

---

# சுதந்திரத்தின் தேவைகள் யாவை?

## ஸன்-யாட்-ஸென்னின் பிரசங்கங்கள்

——வெ. சா.

### பிரசங்கம் 7.

#### ஜனாதிக்கம் என்றால் என்ன?

**க**னவான்களே! இன்று ஜனாதிக்கம் என்பதைப்பற்றிப் பேசப் போகிறேன். ஜனாதிக்கம் என்றால் என்ன? இதனைத் தெரிந்துகொள்வதற்கு முன்னர், ஜனம் என்றால் என்ன வென்பதைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் பல மனிதர்கள் ஒன்று சேர்ந்திருக்கும் நிலைமைக்கே ஜனம் என்று பெயர். அப்படியே ஆதிக்கம் என்ற சொல்லுக்கு ஒரு நாட்டின் எல்லைக்குள் செலுத்தப்படும் அரசியல் அதிகாரத்திற்குப் பெயர். இந்த அரசியல் அதிகாரம் எந்த நாட்டுக்கு அதிகமா யிருக்கிறதோ அதற்கு வல்லரசு என்று அந்நிய நாட்டார் பெயரிட்டு அழைக்கின்றனர். ஒரு யந்திரத்திற்கு எவ்வளவு சக்தி யிருக்கிறதென்று நாம் கூறுகிறபோது 'இத்தனை குதிரை பலம் இருக்கிற'தென்றுதான் கணக்கிட்டுக் கூறுவோம். அந்நிய பாஷையில் இதனையே 'இத்தனை குதிரை வேகமுடையது' என்று கூறுகிறார்கள். அதாவது பலமும் சக்தியும் ஒரே அர்த்தத்தில் உபயோகிக்கப்படுகிறதென்று சொல்லலாம். உத்திரவுகளை நிறைவேற்றவும், பொதுஜன வாழ்க்கையை ஒழுங்கு படுத்தவும் உள்ள அதிகாரத்திற்கே 'அரசியல் ஆதிக்கம்' என்று பெயர். ஜனங்களும் இந்த அரசியல் ஆதிக்கமும் ஒன்று படுமானால் ஜனங்களுக்கு அரசியல் ஆதிக்கம் ஏற்பட்டு விட்டதென்று நாம் கூறுகிறோம். இந்த அரசியல் ஆதிக்கத்தைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்னர், அரசாங்கம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அரசாங்கத்தைப் பற்றிய பிரச்னை மகா கடினமான பிரச்னையென்றும் அதனை எல்லா ஜனங்களும் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியாதென்றும் பலர் கருதுகின்றனர். சீனாவின் ராணுவத் தலைவர்கள் 'நாமெல்லோரும் போர் வீரர்கள்; நமக்கு அரசியலைப் பற்றி ஒன்றும் தெரியாது' என்று சொல்லிக்கொள்வதிலேதான் பெருமை கொள்கிறார்கள். அரசியல் விஷயமானது மிகவும் தெளிவான விஷயமென்றும் அதனை எல்லாரும் கிரகித்துக்கொள்ளலாமென்றும் அவர்களுக்குத் தெரியவில்லை. அரசாங்க நிருவாகம் எங்களுக்குப் புரியவில்லையென்று சொன்னால் அதுதான் முட்டாள்தனமானது. அரசாங்க நிருவாகம் துரிதமாகவும் ஒழுங்காகவும்

நடைபெறுவதற்கு முக்கிய காரணமா யிருப்பவன் போர் வீரனேயாதலால், அவன் அரசாங்க நிருவாகத்தைப் பற்றி அவசியம் தெரிந்துகொண்டிருக்கவேண்டும். சுருக்கமாகக் கூறப்போனால், அரசாங்கம் என்பது ஜனங்களுக்கான விஷயம்; ஜனங்களுடைய விஷயம். ஜனங்களுடைய விஷயங்களைப்பற்றிக் கவனிக்கிற நிருவாகம். இந்த நிருவாகத்தை ஜனங்கள் கைப்பற்றிக்கொண்டு நடத்துகிறபோதுதான் ஜனநாயகம் என்று நாம் சொல்கிறோம்.

இந்த ஜனநாயகத்தின் வேலைகளென்ன வென்பதைச் சிறிது கவனிப்போம். பூர்வகால சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்த்தோமானால் மானிட சமுதாயம் நிலைத்து வாழ்வதற்காக, மனித உழைப்பு உபயோகப் பட்டிருக்கிற தென்பது நன்கு தெரியும். மானிட சமூகத்திற்கு, பாதுகாப்பும் உயிர்வாழ்க்கைக் குரிய பொருள்களும் தேவையா யிருக்கின்றன. மனிதன் எப்படி, தற்காப்பையும், ஆகாரத்திற்குரிய பொருள்களையும் தேடுகிறானோ அப்படியே மற்ற ஜீவப்பிராணிகளும் தங்களுடைய பாதுகாப்பையும் ஆகார வகைகளையும் தேடிச் செல்கின்றன. இதனால் மனிதனுக்கும் மற்ற ஜெந்துக்களும் அடிக்கடி சச்சரவும் போட்டியும் ஏற்படுகின்றன. இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற மனிதன் தன் பல மனைத்தையும் உபயோகிக்கிறான். இதனால் மனிதன், ஆதிகாலத்தி லிருந்தே போராட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பது தெரியப் படும்.

ஜன நாயகத்தின் வித்துக்கள் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னர், கிரீஸிலும் ரோமாபுரியிலும் முளைத்தன வென்பது உண்மை யானாலும், சென்ற நூற்றைம்பது வருஷ காலமாகத்தான் இந்தத் தத்துவம் உலகத்தில் நன்றாக வேரூன்றி யிருக்கிற தென்று சொல்ல வேண்டும். இந்த நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னர், உலகத்தில் சுயேச்சாதிகாரம் நிலவி யிருந்தது. அதற்கு முன்னர் ஒரு தனிப்பட்ட சமூகத்தினருடைய ஆட்சி; அதற்கு முன்னர் மனிதன் காட்டு மிராண்டியாகத் திரிந்து, மிருகங்களோடு போராடிக் கொண்டிருந்தான். அக்காலத்தில், மனிதனுக்கும் மிருகத்திற்கும் அடிக்கடி சண்டைகள் நடந்து வந்ததாகத் தெரிகிறது.

மனிதன் ஆரம்பத்தில் எங்கிருந்து பிறந்தான்? சில சில இடங்களி லிருந்தே மனிதன் ஆதியில் தோன்றி யிருக்க வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். ஆனால் பூமி சாஸ்திரிகள், மனிதன் தோன்றின காலத்தி லிருந்தே அவன் பூமி முழுவதும் பரவியிருக்க வேண்டுமென்றும், பூமியை இப்பொழுது எங்குத் தோண்டிப் பார்த்தாலும் மனிதனுடைய சின்னங்கள் அகப்படுகின்றன வென்றும் கூறுகிறார்கள். மனிதனுக்கும், காட்டு மிருகங்களுக்கும் தொடங்கின போராட்டம் இன்னும் நின்ற பாடில்லை. மலேயா முதலிய தென்கோடிப் பிரதேசங்களின் காட்டுப் பாங்கா யுள்ள இடங்களுக்கு, நாம் இப்பொழுது சென்று பார்த்தாலும் கூட இந்தப் போராட்டம் இன்னும் நடை பெற்றுக் கொண்டிருக்கிறதாகவே தெரியும். உயர்ந்த மலைகளின் நடுவிலும், வறண்ட பாலைவனங்களின்

மத்தியிலும் இப்பொழுது நாம் பிரவேசித்துப் பார்ப்போமானால், பூர்வ காலத்தில் மனிதர்களும் மிருகங்களும் எந்தச் சுற்றுப் புறத்தின் மத்தியில் வசித்துக் கொண்டிருந்தவர்கள் என்பதை நாம் ஒருவாறு கற்பனை செய்து கொள்ளலாம்.

புராதன காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டுமானால் அதற்குத் துணை செய்வது சரித்திரம் ஒன்றுதான். ஆனால் நாகரிக வளர்ச்சியைப் பற்றிய சரித்திரமோ, எழுத்துக்கள் கண்டுபிடிக்கப் பட்ட பிறகுதான் தொடங்குகிறது. சீனாவினுடைய சரித்திரம், ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் வருஷங்களின் புராதனத்தையுடையது. எகிப்தினுடைய சரித்திரம் பதினாயிர வருஷங்களின்' பழமையுடையது. அறிவின் பல துறைகளையும் ஆராய்ச்சி செய்வதற்கு சீனா புஸ்தகத்தின் துணையை நாடியிருக்கிறது. ஆனால் மற்ற நாட்டின் மலைகள், குகைகள், மிருகங்கள் முதலியவைகளைப் பரிசீலனை செய்து பார்த்து அதன் மூலமாகத் தங்கள் அறிவை அபிவிர்த்தி செய்து கொள்ளுகிறார்கள்.

ஆரம்பத்தில் மனிதன், தன்னுடைய தேக பலத்தைக் கொண்டுதான் மிருகங்களின் மீது வெற்றி கண்டான். அப்பொழுது அவன் தற்காப்பினிமித்தம் தனது இரண்டு கைகளையும் கால்களையும் மட்டுமே உபயோகித்தான். ஆனால், மிருகங்களை விட இவனுக்கு அதாவது மனிதனுக்கு, கூர்மையான புத்தி யிருந்தபடியால் சில ஆயுதங்களைக் கண்டுபிடித்து அவைகளின் துணை கொண்டு, காட்டு மிருகங்களின் மீது வெற்றி கொண்டான். காட்டு மிருகங்களோடு இவன் போராடிக் கொண்டிருந்த காலத்தில், இவனுடைய வாழ்க்கை மிகவும் ஆபத்தாயிருந்தது.

காட்டு மிருகங்களின் பயம் மனிதனுக்கு விட்டுப் போன தருணத்தில், பூமியின் பல பாகங்களிலும் மனிதன் குடியேற ஆரம்பித்தான். எந்த மாதிரியான இடங்களில் இவன் குடியேறினான்? காற்று மழைகளினால் பாதிக்கப்படாத பிரதேசங்களிலேயே இவன் குடியேறினான். அதாவது நைல் கணவாய், மெஸொபடேமியா பிரதேசம் முதலிய இடங்களையே இவன் முதன் முதலில் தெரிந்தெடுத்துக் கொண்டான். தவிர இந்தப் பிரதேசங்கள், விவசாயத்திற்கு மிகவும் சௌகரியமான பிரதேசங்களாயிருந்தன. இதனால், இந்த இரண்டு பிரதேசங்களையும், உலக நாகரிகத்தின் தொட்டில்கள் என்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். இங்குக் குடியேறிய ஜனங்களும் சுக வாழ்க்கையை நடத்தினார்கள். இதனால் இவர்களுக்கு மன உழைப்போ, தேக உழைப்போ அதிகம் இல்லாமலிருந்தது. இவர்களுடைய சந்ததியார் நாளாவட்டத்தில் அதிகமாகப் பெருகினர். இதனால் இவர்களிற் சிலர், வேறு வேறு இடங்களுக்குக் குடியேறினார்கள். இப்படிக் குடியேறிச் சென்ற இடங்களில் இவர்களுக்கு இயற்கையாலான தொந்திரவுகள் அதாவது மழை, காற்று, வெள்ளம் முதலியவைகளால் பாதகம் ஏற்பட்டன.

சீனாவிலுள்ள மஞ்சள் நதிப் பிரதேசந்தான், சீன நாகரிகத்தின் உற்பத்தி

ஸ்தானமா யிருந்தது. ஆனால் இங்கு வசித்தவர்கள், பூர்விக ஜனங்கள் என்று சொல்ல முடியாது. இவர்களின் முன்னோர்கள், மெஸொபொடேமியாவிலிருந்து வந்து குடியேறி யிருக்க வேண்டும். இங்ஙனம் குடியேறியவர்கள் புயற்காற்று, வெள்ளம் முதலியவைகளினின்று தடுத்துக் கொள்ளும் பொருட்டு வீடுகள் கட்டிக் கொண்டும், வேறு பல சௌகரியங்களைச் செய்து கொண்டும் தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள். இதன் காரணமாக, நாகரிகம் வரவர வளர்ச்சி யடையத் தொடங்கியது. ஜனங்களும் ஒன்றுபட ஆரம்பித்தார்கள். நிலம் அதிகமா யிருக்க ஜனங்கள் குறைவா யிருந்தபடியால், ஆகாரம் அகப்படுவது மிகவும் சுலபமா யிருந்தது. இயற்கையினால் ஏற்படுகிற சேதங்களைத் தடுப்பதுதான் முக்கிய பிரச்னையா யிருந்தது. தங்களால் தடுக்க முடியாத சக்திகளை யெல்லாம் தெய்விக சக்தி யென்று ஜனங்கள் கருதினார்கள். சில அறிஞர்கள் ஒன்று கூடி, கடவுள் தன்மையைப் பற்றிப் பிரசாரஞ் செய்ய ஆரம்பித்தார்கள். கடவுளின் கோபத்தினாலேயே, துர்ப்பிட்சங்கள் முதலியன உண்டாகின்றன வென்றும், இவைகளைச் சமனப்படுத்த பிரார்த்தனைகள் முதலியன செய்ய வேண்டுமென்றும் கடவுளுக்கு விண்ணப்பித்துக் கொள்வதன் மூலமாகத்தான் நம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள முடியுமென்றும் எண்ணத்தை உண்டு பண்ணி வந்தார்கள். இந்த எண்ணம் நாளாவட்டத்தில் வலுவடைந்தது. பின்னர், தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்வதற்கென்றே, தீர்க்க திருஷ்டியுள்ள ஒருவனை ஜனங்கள் தெரிந்தெடுத்தார்கள். இவனிடத்தில் தெய்விகத் தன்மை நிரம்பி யிருப்பதாக ஜனங்கள் கருதி, இவனுக்கு மரியாதை செலுத்தி வந்தார்கள். இப்படியாகச் சிலகாலம் நடைபெற்று வந்தது.

பின்னர், போர் வீரர்களும் அரசியல் வாதிகளும் ஒன்று சேர்ந்து, மதத் தலைவர்களிடமிருந்த ராஜாங்க அதிகாரத்தைத் தாங்களே கைப்பற்றிக்கொண்டார்கள். அல்லது தாங்களே மதத் தலைவர்களானார்கள். இதன் காரணமாக, மனிதனுக்கும் மிருகத்திற்கும் சண்டை நடப்பது போய், மனிதனுக்கும் மனிதனுக்கும் சண்டை ஏற்பட்டது. எனவே, மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தான் ஒழுங்காக வாழவும் தெய்வ பலம் மட்டும் இருந்தால் போதாதென்றும், ராணுவ பலமும் ஒழுங்கான அரசாங்கமும் தேவையென்றும் உணர ஆரம்பித்தான். இது காரணமாக, அரசர்களுடைய பலம் அதிகரித்தது. அதாவது சுயேச்சாதிகாரம் வலுப்பெற்றது. இப்படியிருந்த நிலையில் விஞ்ஞான சாஸ்திரம் தோன்றலாயிற்று. மனிதனுடைய அறிவு விசாலமாயிற்று. இதனால் ஒரு புதிய உணர்ச்சி உண்டாயிற்று. எனவே, சுயேச்சாதிகாரமானது, பலருடைய துன்பங்களைப் பரிகரிக்க வில்லை யென்றும் அதற்கு அழிவு தேட வேண்டுமென்றும் ஜனங்கள் கருதி விட்டார்கள். இந்த எண்ணத்தைத்தான் புரட்சி என்று சொல்லுகிறார்கள். இந்தப் புரட்சி எண்ணம், சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக உலகெங்கும் பரவியிருக்கிறது. இந்த நூற்றாண்டில், ஒவ்வொரு நாட்டிலும்

அரசர்களுக்கும் பிரஜைகளுக்கும் போராட்டங்கள் நிகழ்ந்து வருவதைப் பார்க்கலாம். இப்பொழுதைய பிரச்னை என்னவென்றால் நன்மைக்கும் தீமைக்கும் போராட்டம்; நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் போராட்டம், இப்படியாக நடைபெறுகிறது. இதைத்தான் ஜனநாயக காலம் என்று நாம் சொல்லிகிறோம். அதாவது இப்பொழுது ஜனுஸிக்கத்திற்கு அதிகமான சக்தி இருக்கிறது. இந்த ஜனுஸிக்க காலத்திற்குள் இப்பொழுது தான் நாம் பிரவேசித் திருக்கிறோம்.

இந்த ஜனநாயக ஆட்சி முறைக்கு, தற்போதைய சீனா தகுதியுடையதாயிருக்கிறதா? இதுதான் இப்பொழுது முக்கியமான பிரச்னை. சிலர் சொல்கிறார்கள், சீனர்களுடைய வாழ்க்கை அந்தஸ்து மிகவும் தாழ்வாயிருக்கிறது; அதனால் அவர்கள் ஜனநாயக ஆட்சி முறைக்குத் தகுதியுண்டயவர்களாயில்லை யென்று. அமெரிக்கா ஒரு ஜனநாயக நாடுதான். ஆனால் சீனாவில் யுவான்-ஷி-காய் என்பவர் தான் சக்ரவர்த்தியாக வேண்டு மென்று விரும்பின காலத்தில், குட் னௌ என்ற ஓர் அமெரிக்கர், சீனர்கள் முற்போக்கான எண்ணங்களையுடையவர்களில்லை யென்றும், அவர்களுடைய கலைஞானம் மிகவும் பிற்போக்குடையதாயிருக்கிறதென்றும், ஆகலால் ஜனநாயக அரசியல் பரீட்சையைச் சீனாவைப் பொறுத்த மட்டில் நடத்த வேண்டா மென்றும் மேற்படி யுவான்-ஷி-காய்க்கு யோசனை கூறினார். இந்த வாதங்களை ஏற்றுக் கொண்டு, யுவான்-ஷி-காய், சீனாவில் குடியரசு ஏற்படவிடாமல் தடுத்து, தாமே சக்ரவர்த்திப் பட்டஞ் சூட்டிக்கொண்டார். சீனாவில் ஜனநாயக ஆட்சி முறையை நாம் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமானால் அதன் பூரணப் பொறுப்பையும் நாம் நன்கு உணர வேண்டும். சீனா, ஆரம்ப காலத்திலிருந்தே ஜனநாயகத்தை தனது ஆட்சி முறை அமிசமாகப் புகுத்தினதாகத் தெரியவில்லை. சென்ற நாலாயிரம் வருஷங்களாக சீனாவில் யதேச்சாதிகாரந்தான் நடைபெற்றுக் கொண்டு வந்திருக்கிறது. இந்த யதேச்சாதிகார முறை, சீனாவுக்கு நன்மையை உண்டு பண்ணியதா தீமையை உண்டு பண்ணியதா வென்று ஆராய்ச்சி செய்து பார்த்தால் பாதி நன்மையும் பாதி தீமையுமே உண்டாயிருக்கிறது. ஆனால் ஜனங்களுடைய நன்மையை நாடக் கூடியது ஜனுஸிக்கந்தான்.

அந்நியர்கள், சீனர்களைப் பற்றியும் சீன நாகரிகத்தைப் பற்றியும் சரியாகத் தெரிந்து கொள்ளாமையினால் சீனாவுக்கு ஜனநாயக அரசியல் முறை தகுதியுடையதல்லவென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். அந்நிய நாடுகளுக்குச் சென்று கல்வி பயின்ற சீன இளைஞர்கள்கூட, சீனா, ஜனநாயக ஆட்சி முறைக்குத் தகுதியுடையதாயில்லை யென்று அதே ஸ்வரத்தில் பாடுகிறார்கள். ஆனால் சீனாவின் சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஜனநாயகத்துவம் நிலவியிருக்கிறதென்பது நன்கு தெரிய வரும். ஆனால் மேனாட்டிலோ, இந்த ஜனநாயகப் பேச்சு சென்ற 150 வருஷ காலமாகத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மானிட சமூகத்தின் சரித்திரத்தை நாம் ஆராய்ந்து பார்க்கையில் அந்தக்

தக் காலத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் தகுந்தாற் போல் ஆட்சி முறையும் மாறி யிருக்கிற தென்பது நன்கு தெரியும். ஆகையால் தற்போதைய காலத்திற்கு ஜனநாயக ஆட்சி முறை தான் சிறந்த தென்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இதனாலேயே, சீனாவிலுள்ள புரட்சியாளர்களாகிய நாம், சீனாவில் ஜனநாயக தத்துவத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கூறினோம். இந்தமாதிரி நாம் சொல்வதையே, அன்னியர்கள் மட்டுமல்ல நம்மவர்களும் ஆட்சேபித்தார்கள். சீனப் புரட்சி யியக்கம் ஆரம்ப தசையிலிருந்த போது ஐரோப்பாவில் எதேச்சாதிகார அரசாங்கங்கள் பல நிலவி யிருந்தன. இதனாலேயே சீனாவில் புரட்சி யியக்கம் வெற்றி பெறாமல் போய்விட்டது. தவிர, சீனாவில் முடியாட்சி யேற்பட இருந்தது. ஆனால் ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியிலும் ருஷ்யாவிலும் முடியாட்சிகள் வீழ்ந்துபட்டன. அது மட்டுமல்ல, அவை குடியரசு நாடுகளும் ஆயின. இதனால் என்ன தெரிகிற தென்றால், இப்பொழுது உலகத்தின் எண்ணமானது ஜனநாயக பாதையில் போய்க்கொண்டிருக்கிறதென்பது நன்கு புலனாகிறது. ஜனநாயக தத்துவத்தை எதிர்த்து நிற்கிற சீன அறிஞர்களில் பலர் மஞ்சூ ஏகாதிபத்தியத்தை வீழ்த்தக்கூடிய சக்தி உங்களிடம் என்ன இருக்கிறது என்று புரட்சிக் கட்சியை சேர்ந்த நம்மைப் பார்த்துக் கேட்கின்றனர். ஆனால் 1911-ம் வருஷம் உலகத்தின் பல பாகங்களிலும் ஏற்பட்ட மாறுதல்களின் எதிரொலிபோல் ஒரே தாக்குதலில் அந்த மஞ்சூ ஏகாதிபத்தியம் வீழ்ந்து பட்டது. இப்படி உலகத்தின் பல பாகங்களிலும் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களின் விளைவாகத்தான் நமக்கடுத்தாற்போலுள்ள மங்கோலியாவில்கூட ஜனநாயக இயக்கம் வலுத்து வருகிறது. திபேத்திலும் இந்தச் சலசலப்பு ஏற்படாமல் இருக்கப்போவதில்லை. ஐரோப்பாவிலேகூட இப்பொழுது எதேச்சாதிகார சக்தி வலு விழந்து நிற்பதை நீங்கள் நன்றாகப் பார்க்கலாம். இவைகளினின்றும் நாம் அறியக் கிடப்பது என்னவென்றால் தற்போதைய காலம் ஜனநாயக காலம் என்பதாகும்.

நமது புரட்சியில் ஜனநாயகத்தை முக்கிய அம்சமாகக் கொண்டதன் காரணம் என்னவென்றால் உலக சக்திகளோடு நாமும் ஒன்று சேர்ந்து போக வேண்டுமென்பது. இரண்டாவது, கூடிய மட்டில் உள் நாட்டுக் குழப்பங்கள் இல்லாமல் செய்ய வேண்டுமென்பது. சீனாவில் புராதன காலத்திலிருந்தே முக்கியஸ்தர்களாயிருந்தவர்களுக்கு ஒரே ஒரு ஆசை தான் இருந்திருக்கிறது. அதாவது ஒவ்வொருவரும் தாங்களே அரசராக வந்துவிட வேண்டுமென்ற எண்ணம் உடையவர்களா யிருந்திருக்கிறார்கள். இந்த அதிகார மோகம் ஒவ்வொருவரையும் பிடித்து ஆட்டி வந்திருக்கிறது. நான் புரட்சி இயக்கத்தை ஆரம்பித்தவுடன் நமக்கு ஆதரவு தருவதாகச் சொல்லி நமது கட்சியில் வந்து சேர்ந்த பத்து பேரில், ஆறு அல்லது ஏழு பேர் ஏகாதிபத்தியவாதிகளாகவே இருந்தார்கள். நமது புரட்சியின் நோக்கம் ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவது மட்டுமல்ல, குடியரசை ஏற்படுத்துவதுமாகும் என்று நான்

அவர்களுக்கு எடுத்துச் சொன்ன பிறகுதான் அவர்கள் தங்கள் சுய நலக் கொள்கையை விட்டார்கள். இப்பொழுதுகூட, குடியரசு ஏற்பட்ட 13 வருஷங்கள் கழிந்த பிறகுங்கூட நம்மிலே சிலருக்கு அரசராகவேண்டுமென்ற ஆசை இருக்கிறது. இதனாலேதான் நமக்குள்ளே கட்சிச் சண்டைகள் ஏற்படுகின்றன. நாம் புரட்சியியக்கத்தைப் பகிரங்கப் படுத்திய போது பிரஜா உரிமையை அஸ்திவாரமாகக் கொண்டுதான் நமது குடியரசு ஸ்தாபிக்கப்படும் என்று கூறினோம். அப்படிக் கூறியதற்குக் காரணம் என்னவென்றால் ஏகாதிபத்திய ஆசைகளினால் ஒருவருக்கொருவர் போட்டி போடக் கூடாதென்பதற்குத்தான். ஆனால் அந்தோ, நம்மிலே இன்னும் சில முட்டாள்கள் இருக்கிறார்கள். அவர்களை நாம் திருத்தவே முடியாது. நமது குடியரசானது ஊர்ஜிதமாகி ஸ்திரப்பட்டு விட்டால் அப்பொழுது யார் அரசராயிருப்பார் என்று சிலர் இன்னும் கேட்கின்றனர்! நமது நாற்பது கோடி ஜனங்களுமே அரசர்கள்தானே என்று நான் அவர்களுக்குப் பதில் சொல்லுகிறேன். இங்ஙனம் ஜனாதிக்கத்தை அஸ்திவாரமாகக் கொண்டு அரசாங்க அமைப்பை நாம் ஏற்படுத்தி விட்டோமானால் பின்னர் அதிகார மோகம் யாரையும் பிடித்து அல்லல்படுத்தாது. சீனாவின் சரித்திரத்தை நீங்கள் ஆராய்ந்து பார்த்தீர்களானால் ஒரு வம்சாவளி மாறி மற்றொரு வம்சாவளி சிங்காதனத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகிற போது ஒவ்வொரு தடவையிலும் போராட்டம் நடைபெற்றிருப்பதை நன்றாகப் பார்க்கலாம். அந்நிய நாடுகளில் மதத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் சீனாவில் நடைபெற்ற யுத்தமெல்லாம் சிங்காதனத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்குத்தான். இதனாலேயே இந்தமாதிரியான போராட்டங்கள் நடைபெறாமலிருக்க வேண்டுமென்பதற்கு குடியரசு ஸ்தாபிதத்தை புரட்சியின் லட்சியமாக நாம் கொண்டோம். இந்த உண்மையை நாம் தெரிந்துகொண்டு விடுவது நல்லது.

---

தற்போதைய சீன அரசாங்கத்தின் முக்கிய துப்பறியும் நிபுணர் ஒரு ஸ்திரீ. இவர் பெயர் யாங்-ஹ்யு-மிங். இவரைக் கண்டு பிடித்துத் தங்கள் வசம் ஒப்புவிப்பவர்களுக்கு ஐம்பதினாயிரம் பவுன் சன்மானம் அளிப்பதாக ஜப்பானிய அரசாங்கத்தார் தெரிவித்திருக்கின்றனர்.

# பொருளாதாரமும் புதிய திட்டங்களும்

—வ. அ. தியாகராஜன் M. A.

ஆகாயத்தில் ஒரு கல்லை விட்டெறிந்தால் அது கீழே வந்து விழுமேயொழிய அப்படியே பறந்து போய் விடாது. இதுதான் இயற்கையின் நியாயம். இது போலவே மனித வாழ்க்கையிலும் சில நியாயங்களும் விதிகளும் இருக்கின்றன. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ஒரு விதி இருக்கிறது என்று எண்ணித்தான் நடக்கிறோம். நெல் விதைத்தால் 3 அல்லது 4 மாதங்களில் பயிர் ஆகும் என்று நினைத்தே குடியானவன் பயிர் செய்கிறான். சில வேளை நெல் பயிர் வரலாம், சில வேளை முள் விளையலாம் என்று இருந்தால் ஒருவரும் பயிரிட மாட்டார்கள். பொருளாதர்ர விஷயங்களிலும் இது போலவே விதி என்பது ஒன்று உண்டு. முன்னொரு காலத்தில் மானிட சமூகத்தில் நடைபெறும் விதிகள இயற்கை விதிகளைப் போல் எப்பொழுதும் மாற்ற முடியாதவை என்றும் அவற்றை மீறி நடப்பவன் காற்றுக்கு எதிரே எச்சில் துப்புவோனைப் போல் தனக்குத்தானே கெடுதி விளைவித்துக் கொள்வான் என்றும் எண்ணப்பட்டது. இந்தக்கொள்கை இங்கிலாந்தில் 1820ம் வருஷமுதல் ஏறக்குறைய நூறு வருஷங்களாக நம்பப்பட்டது. அதன் பயனாக அரசாங்கம் பொருளாதார விஷயங்களில் ஈடுபடக் கூடாது என்றும், வியாபாரம் போனபடி விட்டுவிட வேண்டும் என்றும் கருதப் பட்டது. இங்கிலாந்தின் செல்வாக்கு பல காரணங்களால் அதிகரித்து வந்ததால், அவைகளெல்லாம் அரசாங்கம் பொருளாதார விஷயங்களில் ஈடுபடாததின் பயன் என்று கருதப்பட்டது. இங்கிலாந்தின் செல்வாக்கு யந்திர ஸ்தாபனங்களை வைத்து பொருள்களை உற்பத்தி செய்ததினாலும், நெப்போலியனைத் தோற்கடித்ததினாலும், குடியேற்ற நாடுகளிலிருந்து மூலப் பொருள்களை வரவழைத்ததினாலும், போட்டிக்கு யாரும் இல்லாததினாலும், உச்ச நிலையை யடைந்ததே தவிர அரசாங்கம் சும்மா விருந்ததனாலல்ல. நாளாவட்டத்தில் அரசாங்கம் சும்மா விருந்ததனால் ஏற்பட்ட கெடுதிகள் ஒன்றொன்றாய் வெளியாயின. தொழிற்சாலைகள் ஏற்பட்டதின் முதல் பலன் என்னவென்றால் தனி வேலைக்காரன் நாளா வட்டத்தில் ஒடுக்கப்பட்டு பெரிய தொழிற்சாலைகளில் கூலிக்கு வேலை செய்பவனும் ஒரு விதமான பொருள் என்றும், மற்றப் பொருள்களைப் போல் அவனுடைய வேலையும் குறைந்த விலைக்கு வாங்கத் தக்கது என்றும் கருதப்பட்டன. அதனால்

தொழிற்சாலை சொந்தக்காரர்கள் எவ்வளவு குறைந்த கூலி கொடுத்தாலும் அதை வேலைக்காரர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியும் ஏற்பட்டது. அதிகமான வேலையும் குறைந்த கூலியுமன்றி இன்னும் பல கேடுகளும் ஏற்பட்டன. யந்திரங்கள் ஓடும் போதே அவற்றைச் சுத்தம் செய்ய வேண்டி இருந்தாலும்; அவை சரியாய்ப் பாதுகாக்கப்படாமலிருந்ததாலும் பலருக்கு காயம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. இப்படி இருந்தும் தாய் தந்தையர் சம்பாதித்த கூலி போதாததினால் சிறிய பிள்ளைகளையும் கூலி வேலைக்குக் கொண்டு வர வேண்டியதாயிற்று. எட்டு மணி வேலை செய்தவன் பதினாறு மணி வேலை செய்தான். தனி மனிதன் செய்த வேலையை ஒரு குடும்பமே செய்ய ஆரம்பித்தது. கைத்தொழிலால். செய்யப்பட்ட வஸ்துக்கள் இயந்திரங்களால் ஏராளமாகச் செய்யப்பட்டன. முதலாளிகளின் செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகமாயிற்று. ஆனால் உழைத்தவன் மாத்திரம் சுகப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன? குறைந்த கூலி கொடுத்தது மாத்திரம் அல்ல. அவர்கள் சம்பாதித்த கூலி அவர்களிடமிருந்து பலவிதமாய் அபகரிக்கப்பட்டது. கூலிக்குப் பதிலாக சில சாமான்கள் கொடுக்கப்பட்டன. இது தவிர சில சமயம் கூலி, கள்ளுக்கடையில் கொடுக்கப்பட்டதும் உண்டு. வேலை செய்தவன் குடித்து விட்டு வீடு போய்ச் சேரலாம். பணத்தை மாத்திரம் பார்க்க மாட்டான். இப்படிப்பட்ட கொடிய நிலையிலிருந்து தேசத்தின் அடிப்படையாயிருந்த தொழிலாளர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை இப்போது கவனிப்போம்.

இங்கிலாந்து அரசாங்கத்தில் நிலச்சுவான்தார்களுக்கு முதலில் அதிக செல்வாக்கு இருந்தது. தொழிற்சாலைகள் முன்னுக்கு வந்த பிறகு தொழிற்சாலைகளை வைத்தவர்களுக்குச் செல்வாக்கு அதிகமாயிற்று. இவர்கள் நினைத்தது என்னவென்றால் தேசத்துக்கு உள்ளே வரும் உணவுப் பொருள்களுக்குப் போட்டிருக்கும் வரியை எடுத்து விட்டால், கூலியை இன்னும் குறைத்து விட்டு லாபத்தை இன்னும் அதிகப்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான். இதற்குத் தகுந்தாற் போல் ஏழை ஜனங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த உருளைக் கிழங்கு சாகுபடியில் புழு விழுந்து பஞ்சம் ஏற்பட்டு விட்டது. இதன்பயனாக வெளிதேசங்களிலிருந்து உணவுப் பொருள்கள் வரியின்றி இறக்குமதி செய்யப்பட்டன. தங்களுடைய பழைய உரிமைகளையும் லாபத்தையும் இழந்த நிலச்சுவான்தார்கள் தங்களுக்கு அரசாங்கத்தில் செல்வாக்குக் கிடைத்த போது தொழிற்சாலை முதலாளிகள் அதிகலாபத்தை அடைவதைத் தடுப்பதற்காக, வேலை செய்யும் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்றும், தொழிற்சாலைகள் சுத்தமாய் இருக்க வேண்டும் என்றும், இயந்திரங்கள் சரியாய்ப் பாதுகாக்கப்பட்டு இருக்க வேண்டும் என்றும் சில நிபந்தனைகள் கொண்டு வந்தார்கள். இதன்பயனாக அரசாங்கம் பொருளாதார விஷயங்களில் முழுதும் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்னும் கொள்கையை விட்டுவிட்டு கொஞ்சம் கொஞ்சமாய்

தலையிட ஆரம்பித்தது. ஒரு சிறிய விஷயத்தை எடுத்துக் கொள்வோம். கள் வியாபாரத்தில் அரசாங்கம் ஈடுபடாமல் இருந்தபோது, 'ஒரு பென்னி குடி, இரண்டு பென்ஸுக்கு வெறி' என்று கள் மிகக் குறைவான விலைக்கு விற்கப்பட்டது. இதன் பயனாக தேசத்து ஜனங்களின் தேக சௌக்கியம் பாதிக்கப் பட்டது. இதன் பிறகு அரசாங்கம் கள் விலையை ஏற்றவேண்டி ஏற்பட்டது. இவ்விரண்டு உதாரணங்களிலிருந்து தெரியவருவதென்னவென்றால், அரசாங்கம் சும்மாவிருக்குமானால், வரி வாங்குவதும் சிப்பாய்களை பயிற்சிப்பதும் தவிர தனக்கு வேறே வேலை இல்லை என்று நினைக்குமானால், அந்த தேசத்தின் நல்வாழ்வு செல்லரித்துப்போகும் என்பதேதான். ஆகாயத்தில் கல்லை எறிந்தால் அது நம்மேலேயே சிறிது நேரத்துக்குப் பின் வந்து விழுகிறது. இதுதான் இயற்கையின் விதி. இதிலிருந்து தப்ப முடியாது.

ஆனால் ஆகாயத்தில் விமானங்கள் பறக்கும்போது, அவை ஏன் கீழே விழவில்லை என்று கேட்கலாம். இயற்கையின் விதி இங்கே மாறுதல் அடைந்தது என்று சொல்ல முடியாது. இங்கேயும் விதி இருக்கிறது. ஆனால் நாம் இதுவரை நினைக்காத விதிகள் இங்கே வேலை செய்கின்றன. அப்படிப்பட்ட விதிகள் மானிட சமூகத்திலும் இருக்கின்றன. அவற்றில் முக்கியமான விதி ஒன்று அரசாங்கம் பொதுஜனங்களின் க்ஷேமத்துக்காக பொருளாதார விஷயங்களில் ஈடுபட வேண்டும் என்பது. இந்த ஈடுபாடு இரண்டு விதமாய் இருக்கலாம், முதலாவது எல்லா விஷயங்களிலும் அரசாங்கம் ஈடுபட்டு புதிய திட்டங்களைப் போட்டு முழுவதும் முன்னோக்குடன் வேலை செய்வது. இரண்டாவது, அரசாங்கம் என்னென்ன செய்யக் கூடாதோ அவைகளைத் தடுத்துவிட்டு, என்ன செய்யலாம் என்பதைத் தனி மனிதன் புத்திக்கு விட்டுவிடுவது. இவ்விரண்டு வழிகளும் இப்போது உலகத்தில் நடைமுறையில் கொணரப் பட்டிருக்கின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய பழைய தேசங்களில் இரண்டாவது முறையும், புதிய ருஷியாவில் முதல் முறையும் கையாளப் பட்டு வருகின்றன. இதற்குக் காரணம் என்னவென்பது பின்வரும் உதாரணத்திலிருந்து எளிதில் விளங்கும். பீகாரில் பூகம்பம் ஏற்பட்டது. எல்லா வீடுகளும் இடிந்து போய் விட்டன. இதன் பிறகு, ஊரைச் சீர் திருத்த புதிய மாதிரி ரோட்டுக்களைப் போட்டு, புதிய முறையில் வீடுகளைக் கட்டுவது கஷ்டமில்லை. ஆனால் ஒரு பழைய ஊரைச் சீர் திருத்தத்திற்காக அடியோடு யாரும் இடிப்பதில்லை. இது போலவே பழைய அரசாங்கம் ருஷியாவில் அடியோடு போய்விட்ட பிறகு புதுத் திட்டங்களை வழிக்குக் கொண்டு வருவது ஏறக்குறைய சுலபமாய் இருந்தது. இதுவுமன்றி ருஷியாவில் புரட்சி ஏற்பட்ட போது வெளி தேசத்துடன் வியாபாரம் நின்று விட்டது. தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. இந்தப் பஞ்சத்திலிருந்து தேசத்தை எப்படிக் காப்பாற்றுவது என்று புரட்சித் தலைவனான லெனின் யோசிக்க வேண்டிதாயிற்று. லெனின் மார்க்ஸீயத்திலேயே நம்பிக்கையுள்ளவனாதலால் சில திட்டங்களை வகுத்தான். அவற்றில் முதலாவது

என்னவென்றால், நிலம், சுரங்கம், இருப்புப்பாதை, ரயில், தொழிற்சாலைகள் இவைகளெல்லாம் பொது ஜனங்களுக்குச் சொந்தமானவை. இவற்றை யாரும் தன்னுடையது என்று சொல்லக் கூடாது. இந்தச் சொத்துக்களை யாரும் லாபத்துக்காக உபயோகிக்கக்கூடாது. ஆனால் எல்லாரும் சமமாய் பொது நன்மைக்காக வேலைசெய்ய வேண்டும். வேலையிலிருந்து உண்டாகும் பயன்களை ஒவ்வொருவரும் தத்தம் தேவைக்கு தகுந்தபடி பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்தக் கொள்கையின் விரிவான தன்மையில்தான் பொது உடமை நிலஸ்தாபனங்களும், ஏராளமான தொழிற் சாலைகளும், மின்சார நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. இந்தப் புதிய திட்டத்தை வழிக்குக் கொண்டுவருவதற்கு ஜனங்களின் மனதைக் கவருமாறு பிரசாரங்கள் செய்யப்பட்டன. நாடகங்கள் மூலமாயும், பத்திரிகைமூலமாயும், பள்ளிக்கூடங்கள் மூலமாயும் இந்தப் பிரசாரங்கள் செய்யப்பட்டன. புதிய திட்டங்கள் அமுலுக்கு வரு முன் எவ்வளவோ கஷ்டங்கள் நேர்ந்தன. பெரிய நிலச்சுவான்தார்களை அடியோடு அழிக்க வேண்டியதாயிற்று. இவர்களுக்கு ஒரு விதமான தயையும் காட்டப் படவில்லை. இது போலவே அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு விரோதமாய் நடக்கிறவர்கள் பூச்சி புழுக்களைப் போல் நசுக்கப் பட்டார்கள். ருஷியாவில் புதிய திட்டத்தை ஏற்படுத்த ரத்த வெள்ளத்தைக் கடந்துபோக வேண்டி ஏற்பட்டது. ருஷியாவில் புதிய திட்டம் ஏற்பட்ட சில வருஷங்களுக்குப்பின் 'ஐந்து வருஷ திட்டம்' என்று தேசத்துக்கு என்ன வேண்டும் என்பதை கவனித்து ஐந்து வருஷத்துக் கொருமுறை முன் யோசனையுடன் அரசாங்கம் வேலை செய்து வருகிறது. இதன் பயனாக மிகவும் பின்னுக்கிருந்த ருஷியா சில வருஷங்களில் மிகவும் முன்னுக்கு வந்து விட்டது. வறுமை ஒழிக்கப் பட்டது. கல்வியறிவு எங்கும் பரவி இருக்கிறது. மதத்தினாலும் இதர கட்டுப்பாடுகளினாலும் தன்னம்பிக்கை இழந்திருந்த ஜனங்களிடம் ஒரு விதமான ஊக்கமும் தைரியமும் ஏற்பட்டு இருக்கின்றன.

ருஷியாவின் முன்னேற்றத்தைப் பார்த்த மற்ற தேசங்கள் தாமும் புதிய திட்டங்களைக் கையாள வேண்டும் என்று கருதின. ஆனால் இவை புதிய திட்டங்களை அவ்வளவு விலை கொடுத்து வாங்க வேண்டி விரும்பவில்லை; இவைகளுக்கு அது அவசியமும் இல்லை. சமுத்திரத்தில் அலைகள் அடிக்கும் போது பள்ளம் மேடாயும் மேடு பள்ளமாயும் மாறி மாறி வருகின்றது. அது போலவே மானிட சமூகத்திலும் புரட்சி ஏற்படும் போது எல்லாம் தலை கீழாய்ப் போகிறது. இத்தலியிலும் ஜெர்மனியிலும் இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படாமல் இருப்பதற்காக புதியதிட்டங்கள் கையாளப் பட்டன. புதிய திட்டங்கள் ஒரு தடியைப் போல. தடியைக் கொண்டு எஜமானன் வேலைக்காரனை அடிக்கலாம். வேலைக்காரன் தடியைப் பிடுங்கிக் கொண்டு எஜமானனையும் அடிக்கலாம். இரண்டும் சாத்தியம். ருஷியாவில் ஒருவிதமாய் நடந்தது. இத்தலியிலும் ஜெர்மனியிலும் மறுவிதமாய் நடந்தது. பின்னிரண்டு தேசங்களிலும் தொழிலாளர்கள் வேலை

நிறுத்தம் செய்வது சட்டத்துக்கு விரோதமானது என்று நியமிக்கப் பட்டது. தொழிலாளர்களுக்கு எவ்வளவு கூலி தரவேண்டும் என்பதையும் சட்டத்தில் நியமிக்கப்பட்டது. வேலையில்லாத கூலியாட்களுக்கு புதிய வேலைகள் கண்டு பிடிக்கப் பட்டன. இத்தலியில் சதுப்பு நிலத்திலிருந்த நீரை வடித்து வயல்களாக மாற்றும் வேலையை அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜெர்மனியில் வேலையில்லாதவர்கள் யுத்த தளவாடங்களைச் செய்வதில் எடுத்துக் கொள்ளப் பட்டார்கள். ஆனால் இவர்களுக்குக்கூலிகொடுப்பதற்கும் மூலப் பொருள்களை வாங்குவதற்கும் அரசாங்கத்திற்கு பணம் ஏது என்று கேட்கலாம். ஜெர்மனியில் தொழிலாளர்களுக்கு கூலி எவ்வளவு கொடுக்கலாம் என்றும் ஏற்பாடு செய்தது. தவிர, லாபம் எவ்வளவு வரை போகலாம் என்றும் பொருள் எந்தவிலைக்கு விற்கவேண்டும் என்றுங் கூட நியமிக்கப்பட்டது. இதன் பயனாக அரசாங்கத்திற்கு, மிச்சமாயிருக்கும் லாபமெல்லாம் தானே போய்ச் சேர்ந்தது. இதுவுமல்லாமல் அரசாங்கத்துக்காக வேலை செய்தவர்களுக்கு உடனே பணம் கொடுக்கவில்லை. ஆறுமாதத்துக்கப்புறம், அல்லது ஒரு வருஷத்துக்கப்புறம் பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்கம் நோட்டுகளைக் கொடுத்து விட்டது. ஆனால் இந்த நோட்டுகளைப் பெற்றவர்கள் வட்டி இழக்காமல் இருக்கும் பொருட்டு இந்தச் சீட்டுகளுக்கும், பணத்துக்கு உள்ளமதிப்பு உண்டு என்று ஏற்பாடு செய்யப் பட்டது. மேலும் ஜெர்மனியிலிருந்து விரட்டப் பட்ட யூதர்களுடைய பணத்தையெல்லாம் அரசாங்கம் அபகரித்துக் கொண்டு விட்டு, தேசத்திலிருந்து பணத்தை யாரும் எடுத்துக் கொண்டு போகாமலிருக்கும் பொருட்டு விதிகள் ஏற்படுத்தப் பட்டன. ஆனால் இதன் பொருட்டு வியாபாரம் ஒடுங்காமல் இருப்பதற்காக அரசாங்கம் தனக்கு முக்கியமாய் தேவையான வஸ்துக்களை மாத்திரம் ஒவ்வொரு தேசத்தினுடனும் செய்து கொண்ட தனித்தனி வியாபார ஒப்பந்தங்களினால் வரவழைத்துக் கொண்டது. இங்கேயும் ஜெர்மனி ஒரு சிறிய உபாயத்தைத் தேடியது. தான் கொடுக்கும் வஸ்துக்களை விட அதிகமாய் அயல் நாடுகளிலிருந்து வரவழைத்து விட்டு, பிறதேசங்கள் வேறெங்கேயும் வியாபாரம் செய்யாமல் தன்னிடமே வியாபாரத்தை அதிகரித்துக் கொண்டு, தான் எந்தெந்த வஸ்துக்களை தரமுடியுமோ அவற்றை வாங்கும்படி வற்புறுத்திற்று. இத்தனை திட்டங்களும் என்ன நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டன என்று கேட்கலாம். இதற்கெல்லாம் ஒரே பதில்தான். சென்ற யுத்தத்தில் ஜெர்மனி தோற்றுப் போகவில்லை. ஆனால் தொழிலாளர் புரட்சியினாலும், ஜனங்களுக்குப் போதுமான அளவு உணவுப் பொருள்கள் இல்லாததாலும் தோற்றுப் போய் விட்டது. மறுபடியும் யுத்தம் வந்தால், இந்த இரண்டு காரணங்களால் தேசம் தோற்றுப் போகக்கூடாதே என்பதற்காக இந்தப் புதிய திட்டங்கள் விதிக்கப்பட்டன. ருஷியப் புதிய திட்டம் புரட்சியின் பயனாய் வந்தபோதிலும் பொதுஜனங்களின் சௌக்கியத்திற்காக விதிக்கப் பட்டது. ஜெர்மானியப் புதிய திட்டம் சண்டைக்காக விதிக்கப் பட்டது.

உலகம் பல விதங்களில் வியாபார மூலமாய் ஒன்றாய் இணைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் எந்தப் பாகத்தில் மாறுதல்கள் ஏற்பட்டாலும், அவை மொத்தத்தையே பாதிக்கின்றன. அதனால் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய முதலாளித்துவ தேசங்களும் சில புதிய முறைகளைக் கையாள நேர்ந்தது. நாம் பிறரோடு வியாபாரம் செய்ய விரும்பி இரண்டு கதவுகளையும் திறந்து வைக்கலாம். ஆனால் மற்றவன் தன்னுடைய இரண்டு கதவுகளையும் அழுத்தி மூடிக்கொண்டு உள்ளேயே உட்கார்ந்து விட்டால் நாம் மாத்திரம் கதவைத் திறந்து வைப்பதில் என்ன பயன்? இங்கிலீஷ் ஏகாதிபத்தியம் தன்னுடைய வியாபாரத்தைப் புது வழிகளில் அமைக்கவேண்டி ஏற்பட்டது. இதற்காக ஆட்டாவா (Ottowa) என்னும் நகரில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு, போதுமான அளவு சமாதானத்திலும் யுத்தத்திலும் பிறரை அனுசரிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் செய்துகொண்டு விட்டது. இதன் பயனாக அமெரிக்காவும் புதிய திட்டங்களைக் கையாளவேண்டி ஏற்பட்டது. இவ்விரண்டு தேசங்களிலும் புதிய திட்டங்கள் வியாபார மந்தத்தினால் ஏற்பட்டதேயொழிய புரட்சியினாலாவது, யுத்தத்தில் ஜெயிக்கவேண்டும் என்னும் எண்ணத்துடனாவது ஏற்படவில்லை.

பொருளாதார விஷயங்களில் ஏன் சுமார் பத்து வருஷத்துக்கொரு முறை மந்தம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது என்பதை இப்போது கவனிப்போம். இங்கிலீஷ் நாகரிகம் வியாபார நாகரிகம். வியாபாரியின் கொள்கை என்னவென்றால் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்றால் லாபம் அதிகரிக்கும் என்பதே. அதனால் மூலப்பொருள்களை விற்பவர்க்கு அதிகமாய்ப் பணம் வருவதில்லை. அதனால் இங்கிலாந்துக்கு விற்பவர்கள் இங்கிலாந்து செய்தனுப்பும் பொருள்களை வாங்குவதற்கு பணம் இல்லாதவராய்ப் போகிறார்கள். அதுவுமில்லாமல் இங்கிலாந்து வாங்குவது விவசாயப் பொருள்கள். இவை இயற்கையில் உற்பத்தி செய்யப்படுபவை. இயற்கையை நாம் அவசரப்படுத்த முடியவில்லை. நாலு மாதத்தில் விளையும் நெல் பயிரை ஒரு மாதத்தில் விளைவிக்க முடியாது. ஆனால் இங்கிலாந்து அனுப்புவது இயந்திரத்தால் செய்யப்பட்ட வஸ்துக்கள். புதிய இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டாலாவது, அல்லது 12 மணி ஓடும் இயந்திரங்கள் 24 மணி ஓடினாலாவது வஸ்துக்களை ஏராளமாகச் செய்து விடலாம். இதன்பயனாக பொருள்கள் அதிகமாய்க் குவிகின்றன, வாங்குபவரை மட்டும் காணோம். உதாரணமாக இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் ஒருஷர்ட்டு அதிகமாய் வாங்கினால், இங்கிலாந்திலுள்ள பருத்தி இயந்திரங்களுக்கு ஓய்வே இராது. ஆனால் ஷர்ட்டு வாங்குபவர்கள் கையில் பணம் இல்லை. இதனால்தான் வியாபார மந்தம் ஏற்படுகிறது.

இந்தியாவைவிட்டுவிடுவோம். இங்கிலாந்திலேயே என்ன வாகிறது என்று கவனிப்போம். மேனாடுகளில் நாகரிகம் அதிகரித்ததின் பயனாக ஜனன விகிதம் குறைந்து கொண்டே வருகின்றது. சிறிய பிள்ளைகள் அதிகமாய்

இருக்கும் தேசங்களில் வரும்படியெல்லாம் உணவுப் பொருள்களிலும் துணிமணிகளிலும், புஸ்தகம் வாங்கிப் பாடம் கற்பிப்பதிலும் செலவழிக்கப் படுகிறது. அப்படி இல்லாத தேசங்களில் வரும்படி யெல்லாம் மோட்டார் வண்டி, ரேடியோ முதலிய அழிவில்லாத வஸ்துக்களில் செலவழிக்கப்படுகின்றன. வியாபாரத்தில் மந்தம் ஏற்பட்டு, வரும்படி குறைந்தால் சாமான்கள் வாங்குவதை ஜனங்கள் நிறுத்தி விடுகிறார்கள். இதன் பயனாக மந்தம் அதிகரிக்கிறது. சேற்றில் எப்படி வண்டி அகப்பட்டுக் கொண்டு விட்டால் வண்டி ஓட்டுகிறவன் கீழே இறங்கி சக்ரத்தை பிடித்து இழுக்கிறானோ, அது போல இங்கிலீஷ் அரசாங்கமும் தேசத்தை மந்தத்திலிருந்து பிடித்து இழுக்க வேண்டியதாயிற்று. அரசாங்கம் என்ன செய்ய முடியும்? பொருள்களை உற்பத்தி செய்ய முடியாது. ஆனால் பணத்தை உற்பத்தி செய்யும். அதனால் இங்கிலீஷ் அரசாங்கம் தன்னுடைய நாணயத்தை தங்கத்திலிருந்து விலக்கி விட்டு காகித நாணயமாக்கி விட்டது. எப்படி ஒரு வியாபாரி அதிக நஷ்டமடைந்தால் ‘இன்ஸால் வெண்ட்’ ஆகிவிடுகிறானோ அது போலவே அரசாங்கங்களும் காகிதப் பணத்தை அதிகரித்து தங்கம் இல்லாமலே பழைய கட்டுப்பாடுகளிலிருந்து விலகிக் கொண்டு விடுகின்றன. இப்படிச் செய்வதினால் தேசத்துக்குள் விலை கொஞ்சம் ஏறினாலும் வெளி தேசங்களுடன் வியாபாரம் செய்யும் போது தன்னுடைய பொருள்கள் மலிவாகி வியாபாரம் அதிகரிக்கிறது. இதன் பயனாக தேசத்துக்குள்ளே வேலை அதிகரிக்கிறது. எப்படி தேனீக்களுக்கு வறண்ட காலத்தில் அவை செத்துப் போகாமல் இருக்கும் பொருட்டு அவற்றை தோட்டக்காரன் தேன் கொடுத்து ரக்ஷிக்கிறானோ அதுபோல, வேலையில்லாத சமயங்களில் அரசாங்கம் ஜனங்களுக்குப் புதிய வேலைகளைத் தேடிக் கொடுக்கின்றது. பழைய கட்டடங்களை இடித்துக் கட்டுவது, புதிய பாதைகளைப் போடுவது, யுத்த தளவாடங்களைச் சேகரிப்பது முதலியவைகளைத் தேடி வேலை கொடுத்து பாங்கியில் உறைந்து கிடக்கும் பணத்தை மறுபடியும் வெளியே வரச் செய்கிறது. இவையெல்லாம் தொழிலாளர் அதிகமாயிருந்து, விவசாயம் குறைந்து இருக்கும் தேசங்களில் கையாளப்படும் முறைகள்.

அமெரிக்கா போன்ற விவசாய தேசங்களில் விவசாயிக்கு உழைப்புகேற்ற பணத்தை எப்படி கிடைக்க வைப்பது என்பதையும் கவனிக்கவேண்டியதாயிற்று. விவசாயிகளிடம் பணம் இருந்தால்தானே இயந்திரத்தால் செய்யப்பட்ட பொருள்களை வாங்க முடியும்? அமெரிக்கா தேசத்தில் விஞ்ஞான சாஸ்திர முறைகளைக் கையாண்டதால் பொருள் விளைவு அதிகமாயிற்று. எப்பொழுது பொருள் அதிகரிக்கிறதோ அப்பொழுது விலை குறைகிறது. அரசாங்கம் விலை குறைவதைத் தடுக்கும்பொருட்டு அதிகமாய் விளைந்த பொருள்களைத் தானே வாங்கி நாசம் செய்துவிட்டது. வட அமெரிக்காவில் கோதுமையை வாங்கி எருவாகவும், தென்னமெரிக்காவில் காப்பியை வாங்கி கரியாக்கி அதிலிருந்து வரும் புகையை தெருக்களில் விளக்கெரிப்பதற்கும் உபயோகிப்பது தெரிந்த விஷயமே. இவ்வளவு யோசனை செய்து ஏன் அர

சாங்கம் வறுமையைத் தேடவேண்டும் என்றால், முதலாளித்துவ தேசங்களில் தனி மனிதனுடைய நல் வாழ்வுக்கு முக்கியமே யொழிய பொது ஜனங்களின் • நல்வாழ்வுக்கு முதல் இடம் கொடுப்பது இல்லை. தனி மனிதன் லாபத்தை அடைய விரும்புகிறான். அதனால் லாபம் சம்பாதிப்பதை அரசாங்கம் தடுக்காமல் இதற்கு ஒத்தாசையான வழிகளையெல்லாம் தேடுகிறது.

•

இதனால் நமக்கு என்ன தெரிய வருகிறது என்றால் ஒவ்வொரு தேசத்தினுடைய தேவையும் வேறு வேறு மாதிரியாய் இருக்கிறது. எப்படி எல்லா வியாதிகளுக்கும் ஒரே மருந்து என்பது கிடையாதோ அதுபோலவே எல்லாத் தேசங்களுக்கும் ஒரே விதமான புதிய திட்டம் சரிப்படாது. வட துருவத்திலிருப்பவர்களுடைய வீடுகள் பனி வீடுகளாய் இருக்கின்றன. ஆப்ரிக்காவில் பாலை வனத்தில் பனி வீடு வேண்டுமென்றால் எங்கே கிடைக்கும்? நமது நாட்டின் தேவைகள் என்ன, அவற்றை நிறைவேற்றிக் கொள்ள எந்தெந்த முறைகளைக் கையாள வேண்டும் என்று கவனிப்போமானால் பிறருடைய அனுபவங்களினாலேயே நாம் பிழைத்து விடலாம் என்று எண்ணக் கூடாது. பூப்பிரதக்ஷிணம் செய்தாயிற்று. ஊர் வந்து சேர்ந்தோம். நம்முடைய தேவைகளை மறு முறை கவனிப்போம்.

---

இந்தியா, எகிப்து முதலிய நாடுகளின் மீது சோவியத் ருஷ்யா படையெடுக்கப் போவதாகச்சொல்லப்படுவ தெல்லாம், வெறும் புரட்டாகும். பரிகசிக்கத்தக்க இந்த மாதிரியான பேச்சுக்களை அறிவில்லாதவர்கள்தான் நம்பக்கூடும்.

சோவியத் பார்லிமெண்டில்

மோலோடோவ் பேச்சு.

அரசாங்க சேவையில் ஒருசிறு உத்தியோகஸ்தரா யிருந்தார். அவருடைய பிள்ளைகள் ஆங்கிலக் கல்வி பயின்று வந்தார்கள். நமது ஆச்சாரியாரும் இவர்களுடன் சேர்ந்து ஆங்கிலம் படித்துக் கொண்டு வந்தார். பின்னர் சென்னைக்கு வந்து பச்சையப்பன் ஹைஸ்கூலில் படித்து பிரவேசப் பரிட்சையில் தேறினார். அப்புறம் பிரசிடென்சி காலேஜில் சேர்ந்து படித்து 1875ம் வருஷம் பி. ஏ. பரீட்சையில் தேறினார். இவர் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறி வந்தபடியால், இவருக்கு, பிரதி வருஷமும் ஸ்காலர்ஷிப் கிடைத்துக் கொண்டு வந்தது. பி. ஏ. பரீட்சை தேறியதும், வக்கீல் பரீட்சையிலும் தேறினார். அப்பொழுது சென்னை கல்வி இலாகா தலைவராக இருந்த டாக்டர் டங்கன் என்பவருடைய முக்கிய சிஷ்யராக இவர் இருந்தபடியால், காலேஜ் படிப்பு முடிந்ததும் இவருக்கு ஓர் உத்தியோகம் கிடைத்தது. மங்களூரிலுள்ள ஒரு பாதிரிமார் பள்ளிக்கூடத்தில் இவர் ஓர் ஆசிரியராக நியமிக்கப் பட்டார். இந்த உத்தியோகத்தை இவர் திறமையுடன் மூன்று வருஷ காலம் நிருவகித்து வந்தார். அப்பொழுது, மேற்படி கல்லூரியின் தலைவரா யிருந்தவர் நிறத் துவேஷம் நிரம்பியவர். இது காரணமாக அவருக்கும் ஸ்ரீ ஆச்சாரியாருக்கும் அடிக்கடி வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்து வந்தன. இதனால் இவர் 1878ம் வருஷம், மேற்படி பள்ளிக்கூட ஆசிரியர் பதவியினின்று விலகிக் கொண்டு விட்டார்.

பிறகு 1879ம் வருஷம் சேலத்திற்கு வந்து வக்கீல் தொழிலை நடத்தத் தொடங்கினார். இந்தக் காலத்திலிருந்து சுமார் ஐம்பது வருஷ காலம் வக்கீல் தொழிலை நடத்தி தமது ஜீவனத்தைச் சௌகரியமான நிலைமையில் நடத்தி வந்தார். 1882ம் வருஷம் இவர் சேலம் நகர சபை அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டு, அது காரணமாக நகர சபை நிருவாகத்தில் அதிக புலமை பெற்றார்.

1882ம் வருஷம் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சேலத்தில் ஒரு பெரிய ஹிந்து-முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது இதில் ஸ்ரீ ஆச்சாரியார் சம்பந்தப்பட்டிருந்தார் என்று சொல்லி விசாரிக்கப்பட்டு தண்டனை விதிக்கப் பட்டார். ஆனால் இவர் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டதின் பேரில் இவருடைய தண்டனை ரத்து செய்யப்பட்டது. அந்தக் காலத்தில் இவருடைய பெயர் பாரத தேசம் முழுவதும் மிகவும் பிரசித்தியடைந்தது.

நகர விவகாரங்களில் இவருக்கிருக்கும் ஆற்றலையும் அறிவையும் கண்ட சேலம் ஜில்லா கலெக்டர் இவரை நகர சபைத் தலைவராக நியமித்தார். இதே காலத்தில் இவர் ஹிந்து சமுதாயத்தை ஒரு கட்டுப் பாட்டுக்குட் படுத்த வேண்டுமென்பதற்காக 'ஹிந்து சபை' யொன்றை ஸ்தாபித்தார். தவிர, 'ஹிந்து' பத்திரிகையிலும், அதிகாரிகளால் ஹிந்துக்களுக்கு என்னென்ன உபத்திரவங்கள் ஏற்பட்டு வருகின்றனவென்பதைப் பற்றி விரிவாக எழுதி வந்தார். இவையெல்லாம் கலெக்டருக்குப் பிடிக்கவில்லை. எனவே, இவரை உடனே நகர சபைத் தலைவர் பதவியினின்று விலக்கி விட்டார். பின்னர், சேலம் கலகத்தின் காரணமாகக் கைது

செய்யப்பட்ட பலரும் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று இவர் பெரு முயற்சி செய்தார். இதற்காக தமது வக்கீல் தொழில் செய்வதையும் நிறுத்திக் கொண்டார். சுமார் இரண்டு வருஷ காலம் இவர் இதற்காகச் சிரமப்பட்டு கடைசியில் லார்ட் ரிப்பனுடைய தலையீட்டின் பேரில் எல்லாக் கைதிகளையும் விடுதலை செய்வித்தார்.

சென்னை மாகாணத்துத் தென் பிரதேசங்களிலுள்ள நகர சபைகள், ஜில்லா போர்டுகள் முதலியவைகளின் பிரதிநிதியாக ஸ்ரீ ஆச்சாரியார் 1885ம் வருஷம் சென்னை சட்ட சபைக்கு ஓர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பின்னர் தேர்தல் உரிமை அளிக்கப்பட்ட காலத்தில் இவர் அபேட்சகராக நின்று ஒரு முறை, ஒரே ஓட்டு வித்தியாசங் காரணமாக இவர் தோல்வியுற்றிருக்கிறாராயினும், பல முறை வெற்றி பெற்று 1902ம் வருஷம் வரை தொடர்ச்சியாக அங்கத்தினராக இருந்து சேவைகள் பல செய்திருக்கிறார். 1913ம் வருஷத்தில் இவர் டில்லி சட்டசபைக்கு ஓர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். ரௌலட் மசோதா ஆஜர்படுத்தப் பட்டபோது இவர் அதை ஆட்சேபித்துப் பேசிய பேச்சு மிகவும் நன்றாயிருந்ததென்று, அப்பொழுது ராஜப்பிரதிநிதியாக இருந்த லார்ட் செம்ஸ்போர்டே பாராட்டிப் பேசினார். ஹிந்து சர்வகலாசாலை மசோதா ஆஜர் படுத்தப்பட்ட காலையில், இவர், அஃது ஒரு தனிப்பட்ட சமூகத்திற்குரிய மசோதாவாயிருக்கிறதென்றும் அதைத் தாம் அங்கீகரிக்க முடியாதென்றும் இவர் ஆட்சேபித்தார். பாரத மக்கள் அனைவருக்கும் பொதுவாக உள்ள ஒரு சர்வகலாசாலையையே இவர் விரும்பினார்.

1900ம் வருஷம் கள்ளிக்கோட்டையில் கூடிய சென்னை மாகாண அரசியல் மகாநாட்டுக்கு இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். பின்னர், 1919ம் வருஷம் மாண்டேகு-செம்ஸ்போர்ட் திட்டத்தைப்பற்றி ஆலோசிக்கக்கூடிய விசேஷ மகாநாட்டில் இவர் தலைமை வகித்து மேற்படி அரசியல் திட்டத்தைப்பற்றி வியாக்கியானஞ் செய்து நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

1918ம் வருஷம் அரசாங்கத்தார் இவருக்கு 'திவான் பகதூர்' பட்டம் அளித்தனர். ஆனால் இவர் அதனை நிராகரித்து விட்டார். பின்னர் இவருக்கு 'ஸர்' பட்டமும் கொடுப்பதாக இருந்தது. ஆனால் இவர் அனைத்தையுமே வேண்டாமென்று சொல்லி விட்டார்.

காங்கிரஸ் என்று தொடங்கியதோ அன்று முதல் ஸ்ரீ ஆச்சாரியாருக்கும் காங்கிரஸுக்கும் தொடர்பு இருந்தது. முதல் இரண்டு காங்கிரஸ்களுக்கு இவர் செல்லவில்லை. ஏனென்றால் இவருடைய தகப்பனாரின் சிரார்த்தம் அப்பொழுதுதான் நடைபெற வேண்டிய காலம். இதனால் இவர் முதலிரண்டு காங்கிரஸ்களுக்குச் செல்லவில்லை. மூன்றாவது காங்கிரஸ் காலத்திலிருந்து இவர், எந்த இடத்தில் காங்கிரஸ் கூடுகிறதோ அந்த இடத்திலேயே சிரார்த்தம் செய்வதென்று முடிவு செய்துகொண்டு அப்படியே செய்து வந்தார். ஒவ்வொரு காங்கிரஸுக்கும் விடாமல் போய் வந்தார். வயது முதிர்ச்சியின் காரணமாக, பின்னர் சில வருஷம் இவர் காங்கிர




1940

பிப்ரவரி

28 மஹாத்மா காந்தியின் ஆசீர்வாதத்தைப் பெற்று சர்தார் பிருத்விசிங், இந்திய வாலிபர்களுக்கென்று தேசப்பயிற்சி சாலையொன்று ஆரம்பிப்பார். இந்தப் பயிற்சிசாலை குஜராத் மாகாணத்தில் ஸ்தாபிக்கப் படுமென்றும், வருஷத்தில் எழுபது பேருக்கு மேல் பயிற்சி யளிக்கப்படுவார்களென்றும் சொல்லப்படுகிறது.

இந்தியாவுக்கு இங்கிலீஷ் முறையில் ஜனநாயக அரசியல்தான் தேவையென்று சென்னையில் ஸ்ரீ சத்தியமூர்த்தி ஒரு பிரசங்கத்தில் கூறினார்.

29 பாட்னாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம், வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியை ரத்து செய்துவிட்டதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

இன்று, இந்தியா சட்ட சபையில் இந்தியா அரசாங்க வரவு செலவுத் திட்டம் ஆஜர் படுத்தப்பட்டது.

துருக்கிக்கும் ருஷ்யாவுக்கும் எவ்வித மனஸ்தாபமும் இல்லையென்று துருக்கி

---

ஸுக்குச் செல்ல முடியாமலிருக்கிறது.

1920ம் வருஷம் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸுக்கு இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இவருடைய தலைமைப் பிரசங்கத்திலிருந்து, இவருடைய அரசியல் ஞானம் பரிபூரணமாக விளங்கியது. 1927ம் வருஷம் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸில் இவர் விசேஷப் பங்கெடுத்துக் கொண்டார். 1928ம் வருஷம் டெல்லியில் நடைபெற்ற சர்வகட்சி மகா நாட்டுக்கு இவர் தலைவரா யிருந்து, இந்தியாவின் வருங்கால அரசியல் திட்டம் என்னவாயிருக்க வேண்டுமென்பதை நிர்ணயித்துக் கூறினார். 1921ம் வருஷம், மத்திய மாகாணத்திலுள்ள அகோலா என்னும் ஊரில் கூடிய ஹிந்து மகா சபையின் வருஷக் கூட்டத்திற்கு இவர் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டு, ஹிந்து ஜாதியின் கட்டுப்பாட்டைப்பற்றி நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

1933ம் வருஷம் இவர் வக்கீல் தொழில் நடத்துவதை நிறுத்தி விட்டார். இவர் பொது விஷயங்களில் ஈடுபடுகிற காலங்களில் தமக்கு எது நியாயம் என்று தோன்றுகிறதோ அதைத் தாராளமாக எடுத்துச் சொல்வார். யாருக்கும் அஞ்சமாட்டார். எதிர்ப்புகளைக் கண்டு சலிக்க மாட்டார்.

இவர் இன்னும் பல வருஷ காலம் சுகஜீவியாக இருக்க வேண்டுமென்று பிரார்த்திப் போமாக.

யின் பிரதம மந்திரி இன்று ரேடியோ மூலம் கூறினார்.

காந்தியத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கென்றுஓர் ஆசிரியர் பீடம் அமைக்க, ஆந்திர சர்வ கலாசாலைக்கு, மேற்கு கோதாவரி ஜில்லா போர்டார் 4200 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கின்றனர்.

மார்ச்

1 பாட்னாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம், இந்தியாவின் லட்சியம் பரிபூர்ண சுதந்திரமே என்பதை வலியுறுத்தி நீண்டதொரு தீர்மானம் நிறைவேற்றியது. இந்த ஒரு தீர்மானந்தான், ராம்கார் காங்கிரசில் ஆஜர் படுத்தப்படும்.

ருஷ்ய—பின்லாந்துப் போராட்டத்தில் பின்லாந்துப் படைகளின் நிலைமை மிகவும் நெருக்கடியா யிருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

2 தமக்குப் பிறகு, சாந்திநிகேதனத்தை காந்தியடிகளிடம் ஒப்புவிப்பதாகவும் அதை அவர் ஏற்றுக் கொள்ளுமாறும் காந்தியடிகளுக்கு ரவீந்திரர் ஒரு கடிதம் எழுதி யிருப்பதாக 'ஹரிஜன்' பத்திரிகையில் ஒரு செய்தி வெளியா யிருக்கிறது.

ருஷ்ய பின்லாந்து போராட்டத்தில் ருஷ்யப் படைகள் வீபுரி நகரத்திற்குள் பிரவேசித்தன.

ஸ்ரீ சம்மர் வெல்ஸ் என்ற அமெரிக்க தூதரை, இன்று ஹிட்லர் வரவேற்றார்.

இன்று கல்கத்தா சர்வ கலாசாலை பட்டமளிப்பு விழாவில் மைசூர் திவான் ஸர் மிர்ஸா இஸ்மெயில் நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

3 இன்று பம்பாய் மில்களில் வேலை செய்யும் சுமார் நாற்பதினாயிரம் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள்.

ஐரோப்பாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டுமானால், மற்ற வல்லரசுகள், தாம் கூறும் ஐந்து நிபந்தனைகளுக்கு இசைய வேண்டுமென்று ஹிட்லர் கூறியதாக ஒரு செய்தி கூறுகிறது. அந்த நிபந்தனைகளாவன :—

1. பொஹிமியா, மோரேவியா, போலந்து ஆகிய பிரதேசங்களின் மீது ஜெர்மனிக்குப் பூரண ஆதிக்கம் இருக்க வேண்டும்.

2. ஸ்காண்டநேவிய பிரதேசத்தில் பிரிட்டன் எவ்வித சூழ்ச்சிகளையும் செய்யக் கூடாது.

3. மால்டா, ஜிப்ரால்டர், சிங்கப்பூர் முதலிய துறை முகங்களில் பிரிட்டிஷ் ஆதிக்கம் கூடாது.

4. மத்திய ஐரோப்பாவில் ஜெர்மனியின் ஆதிக்கம் இருக்க வேண்டும்.

5 ஜெர்மனிக்கு, அதன் பழைய குடியேற்ற நாடுகள் திருப்பிக் கொடுக்கப் பட்டுவிட வேண்டும்.

4 'டோமோலா' என்ற 8441 டன் நிறையுள்ள ஒரு பிரிட்டிஷ் கப்பல் இன்று இங்கிலீஷ் கால்வாயில் மூழ்கடிக்கப் பட்டது.

பம்பாயில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தினால் 63 மில்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. இதனால் ஒரு நாளைக்கு தொழிலாளர் கூலியாக 2 லட்சம் ரூபாய் நஷ்டமேற்படுவதாகவும் 45லட்சம் கஜம் துணி உற்பத்தி நின்று போயிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இன்று சென்னை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் ஆஜர்ப் படுத்தப்பட்டது. இதன்படி உத்தேச வரவு சுமார் 1707 லட்ச ரூபாய்; உத்தேச செலவு 1651 லட்ச ரூபாய்; மிச்சம் 56 லட்சம் ரூபாய்.

5 ஸர் ஜான் சைமன் இன்று பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பேசுகையில், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 3,000 லட்சம் பவுன் யுத்தக்கடன் ஒன்று திரட்ட முடிவு செய்துள்ளனரென்று தெரிவித்தார்.

ருஷ்யாவின் தெற்குப் பாகத்தில் ஜெர்மன் துருப்புகள் பிரவேசித்திருக்கின்றனவென்று லண்டனில் ஒரு வதந்தி உண்டாயிருக்கின்றது.

பம்பாயில் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் இன்று இரண்டாவது நாள். ஸ்திரீ தொழிலாளர் வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களை மறியல் செய்து தடுக்கிறார்கள்.

சீன—ஜப்பானிய யுத்தத்தில் சீனர்கள், பத்து ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்து விட்டார்களென்று சொல்லப்படுகிறது.

6 லண்டனிலுள்ள ஒரு பாங்கியின் மீது ஆகாய விமானக் குண்டுகள் எறியப்பட்டன.

7 'க்வீன் எலிஜபெத்' என்ற பெரிய பிரிடிஷ் கப்பல் இன்று சுகமாக அமெரிக்காவிலுள்ள நியூயார்க் துறைமுகம் போய்ச் சேர்ந்தது.

ஸர் ஏ. டி, பன்னீர் செல்வத்தை ஏற்றிக் கொண்டு சென்ற 'ஹானிபல்' என்ற ஆகாயவிமானம் காணாமல் போய்விட்டதல்லவா? அதைத்தேடும் முயற்சி இன்று கைவிடப் பட்டது.

அகில இந்திய சோஷலிஸ்ட் கட்சியின் காரியதரிசியாகிய ஸ்ரீ ஜெயப் பிரகாச நாராயணர் இன்று, பாட்னாவில் ராஜத்துரோகப்-பிரசங்கமொன்று செய்தார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார்.

8 தொழிலாளர் வேலைநிறுத்தக் காரணமாக ஏற்கனவே பம்பாயில் பல மில்கள் மூடப்பட்டிருக்கின்றன. இன்று, இன்னும் 14பட்டுமில்கள் மூடப்பட்டன. இன்று ஓர் இத்தாலியக் கப்பலின்மீது ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டு போட்டெரித்தன.

அமெரிக்காவிலுள்ள ஒரு சுரங்கத்தில் ஏற்பட்ட ஒரு விபத்துக் காரணமாக 400 பேர் அப்படியே உயிரோடு புதைக்கப் பட்டுப் போயினர்.

'உருகுவே' என்ற ஜெர்மன் கப்பல் தானே மூழ்கடித்துக் கொண்டு விட்டது.

இன்று ஸ்ரீ சத்தியமூர்த்தி ராஜப்பிரதிநிதியைக் கண்டு பேசினார்.

9 ஈரானின் தலைநகரான டெஹ்ரானில் நாஜி சங்கங்கள் ஒன்றும் இருக்கக் கூடாதென்று ஈரான் அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர்.

ருஷ்யாவிற்கும் பின்லாந்திற்கும் சமாதானம் ஏற்படுமென்ற அறிகுறிகள் தோன்றுகின்றன.

10 ஜெர்மனியின் அந்நிய நாட்டு மந்திரியான வான் ரிப்பென்ட்ராப் இன்று ரோமாபுரிக்கு விஜயஞ் செய்திருக்கிறார்.

பின்லாந்துக்கும் ருஷ்யாவுக்கும் சமாதானம் ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

11 இத்தலியும் ஜெர்மனியும் சேர்ந்து ஒரு புதிய சமாதான திட்டத்தைத் தயாரித்து அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிற ஸ்ரீ சம்மர் வெல்ஸிடம் கொடுக்குமென்று தெரிகிறது.

இன்று, பம்பாயில் மூன்று தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்,

ஜப்பானுடன் நீடித்த போராட்டத்தை நடத்த சியாங்-கை-ஷேக் ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

12 இந்தியாவுக்கு குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்குவது தங்கள் நோக்கமென்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வெளியிட்டுள்ளதைத் தாங்கள் பெரிதும் பாராட்டுவதாகவும், வருங்கால அரசியலில், தங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் டெல்லியில் கூடிய சுதேச மன்னர் சபையினர் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றனர்.

வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியாயிருந்த அஷ்ரா புதீன் அஹமத் சௌதரியும், சையத் சஜ்ஜத் ஜாஹீரும், அனில மித்திரா என்பவரும் இன்று கைது செய்யப் பெற்றிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் சோஷலிஸ்டுகள்.

13 பாட்னாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டி செய்திருக்கிற தீர்மானத்தைத் தாங்கள் அப்படியே ஆதரிப்பதாக இன்று அகில இந்திய சோஷலிஸ்ட் கட்சியின் நிருவாகக் கமிட்டி தீர்மானித்தது.

ருஷ்ய-பின்லாந்து ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப் பெற்றது. இதன் ஷரத்துகளாவன:—

1. கரேலியா பூசந்தி, லடோகோ ஏரியின் கரையோரப் பிரதேசம், வடக்கிலுள்ள செம்படவர் தீபகற்பம், கிழக்கு பின்லாந்தின் ஒரு பாகம் ஆகிய இவை ருஷ்யாவுக்குப் போய்ச் சேரும்.

2. ஹாங்கோ பிரதேசம், ஐம்பது லட்சம் பின்னிஷ் மார்க்குகள் வாடகையின்மீது முப்பது வருஷ குத்தகைக்கு ருஷ்யாவிடம் ஒப்படைக்கப் படும்.

3. வட அத்லாந்திக்கடலில் துறைமுக பாதுகாப்புக் காகத் தவிர வேறு விதமான கப்பல்கள் முதலியவற்றை பின்லாந்து வைத்துக் கொள்வதில்லையென்று உறுதி கூறுகிறது.

4. எவ்விதமான சுங்கக் கட்டுபாடுகளுமின்றி, பெட்ஸாமோ பிரதேசத்தின் வழியாக நார்வே நாட்டுக்குப் போகவும் வரவும் ருஷ்யர்கள் அநுமதிக்கப் படுவார்கள்.

5. இந்த வருஷத்துக்குள்ளேயே, கண்டாலக்ஸ் என்ற பிரதேசத்திற்கும் கெமிஜார்வி பிரதேசத்திற்கும் ரெயில்வே போடவேண்டும்.

இன்று லண்டனில் காக்ஸ்டன் ஹாலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் இந்தியன் என்று கருதப்படுகிற ஒருவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன் பயனாக, பஞ்சாப் மாகாணத்தின் மாஜி கவர்னரான ஸர் மைக்கல் ஓட்வியர் கொல்லப் பட்டார். லார்ட் ஜெட் லண்ட், லார்ட் லாமிங்டன் முதலியோர்க்கு காயம்.

பின்லாந்து, ஏன் ருஷ்யாவுடன் சமாதானஞ் செய்து கொண்டதென்பதற்கு பின்லாந்தின் அந்நிய நாட்டு மந்திரி ரேடியோ மூலமாகப் பேசுகையில், வெளி நாடுகளிலிருந்து போதுமான உதவி காலா காலத்தில் கிடைக்கவில்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்.

14 இன்று மகாத்மா காந்தி, தமது பரிவாரங்களுடன் மஷார்புரி என்ற காங்கிரஸ் நகருக்கு வந்து சேர்ந்தார்.

சிட்டகாங்கில் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஸ்ரீ அஷ்ரபுத்தின் அஹமத் சௌதரிக்கு ஒரு வருஷ தண்டனை விதிக்கப்பட்டது.

இன்று சிந்து மாகாணச் சட்ட சபையில் வரவு செலவுதிட்ட சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு வெட்டுப் பிரேரணையின் போது, மந்திரிக் கட்சியினர் தோல்வியடைந்தனர்.

ருஷ்ய-பின்லாந்து ஒப்பந்தத்தின் விளைவாக பின்லாந்தில் 4 லட்சம் பேருக்கு மேல் நிர்க்கதியான நிலைமையில் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

இந்தியாவிலுள்ள பொதுவுடமைக் கட்சியினர் அனைவரையும் கைது செய்ய உத்தேசித்திருப்பதாக இந்தியா அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

15 பம்பாயில் தொழிலாளர் வேலை நிறுத்த சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ள தலைவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று, சுமார் இருபத்தையாயிரம் ஸ்திரீகள் கையெழுத்திட்ட ஒரு மகஜர் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது.

ராகுல சாங்கிருத்யாயன என்ற பிரபல அறிஞர் இன்று அலகாபாத்தில் கைது செய்யப் பட்டிருக்கிறார்.

இன்று மஷார்புரியில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது.

பின்லாந்து பார்லி மெண்ட் இன்று ருஷ்ய—பின்னிஷ் ஒப்பந்தத்தை அங்கீகரித்தது.

16 ராம்கார் காங்கிரஸுக்கு பர்மாவிலிருந்து சென்றிருக்கிற பர்மிய தூது கோஷ்டியினர் இன்று பண்டித ஜவஹர்லால் நேரு

லை மஷார் புரியில் கண்டு பேசினர்,

மஷார் புரிக்கு, காங்கிரஸை முன்னிட்டு ஏறக்குறைய எல்லாத் தலைவர்களும் வந்திருக்கிறார்கள்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் இன்று முக்கிய பிரச்னைகளைப் பற்றி நான்கு மணி நேரத்திற்கு மேல் வாதஞ் செய்து விட்டு பின்னர் கலைந்தது.

17 லண்டன் காக்ஸ்டன் ஹாலில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து, காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறை வேற்றியது.

இன்று அ. இ. கா. கமிட்டி கூட்டம் மஷார் புரியில் கூடியது.

18 இன்று மஷார் புரியில் விஷயா லோசனைக் கமிட்டி கூட்டத்தில் மகாத்மா காந்தி, சுயராஜ்ய போராட்டத்தை தாம் நடத்தி வைப்பதா யிருந்தால், தாம் கூறும் நிபந்தனைகளுக்கு அனைவரும் கட்டுப் பட்டு நடக்க வேண்டு மென்று கூறினார்.

சிந்து மாகாணத்தில் அல்லா—பக்ஷ் மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது. மீர் புண்டாலி எனற புதிய மந்திரிச் சபை அமைக்கப் பட்டது.

காக்ஸ்டன் ஹால் சம்பவத்தினால், இந்தியாவைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டிருக்கும் கொள்கையானது மாறு தென்று லார்ட் ஜெட்லண்டு, இன்று லார்ட்ஸ் சபையில் கூறினார்.

இன்று, ஜெர்மனியின் எல்லைப் புறமும் இத்தலியின் எல்லைப்புறமும் சந்திக்கிற பிரெம்னர் கணவாயருகில், ஒரு ரெயில் வண்டியிலமர்ந்து, ஹிட்லரும் முஸோலினியும் பேசினார்கள்.

19 இன்று 53வது காங்கிரஸ் மஷார் புரியில் கூடியது. நல்ல மழையின் காரணமாக கூட்டம் தொடர்ந்து நடை பெறாமல் கலைந்து விட்டது. காலையில் கொடியேற்ற விழாவை; மௌலானா அஸாத் நடத்தி வைத்தார். மாலையில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் பாபு ராஜேந்திரர், பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசினார். மௌலானா அஸாத் தமது தலைமையுரையை நிகழ்த்தினார்,

மஷார் புரியில் இன்று சமரஸ எதிர்ப்பு மகா நாடு பாபு சுபாஷ் போஸின் தலைமையில் கூடியது.

சோவியத் பார்லி மெண்டில், பின்லாந்து ஒப்பந்தம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

20 இன்று டலாடியரைப் பிரதம மந்திரியாகக் கொண்ட பிரெஞ்சு மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

அதிக லாபவரி மசோதா இன்று இந்தியா சட்ட சபையில் நிறை வேற்றப்பட்டது. 1940ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6ந்தேதியில், சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்க வேண்டு மென்று இன்று மஷார் புரியில் கூடிய சமரஸ எதிர்ப்பு மகா நாட்டில் ஒரு தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

இன்று காங்கிரஸின் இரண்டாவது நாள் கூட்டம் 'ஜண்டா சவுக்' கில் நடைபெற்றது. மழையும் சகதியுமா யிருந்தும், ஏராளமான கூட்டம் இருந்தது. பாட்னாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அப்படியே நிறைவேற்றப் பட்டது. மகாத்மா காந்தி பின்னர் பேசினார்.

21 இன்று புதிய பிரெஞ்சு மந்திரிச் சபை அமைந்து விட்டது. ரேனாட் என்பவர் பிரதம மந்திரி. இவரே அந்நிய நாட்டு மந்திரியாகவும் இருப்பார்.

ஜெர்மனி, இத்தலி, ருஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளும் என்று சொல்லப்படுகிறது.

லாகூரில் கக்ஸார்கள் என்னும் ஆயுதந் தாங்கிய முஸ்லீம் தொண்டர் படையினர் ஊர்வலமாகச் செல்லக் கூடா தென்று அரசாங்கத்தினால் தடுக்கப் பட்டிருந்தும், மீறிச் சென்றமையால், அவர்களுடைய காயம். சிலர் மரணமடைந்தனர்.

# சந்ததமும் இளமையோடிருக்க வழியென்ன?

——"ஆசிரமவாசி"

இளமைப் பருவம் இன்பம் நுகர்வதற்கு உகந்தது. ஆதலால் மக்கள் அனைவரும் இளமையை விரும்புகின்றனர். இப்பருவத்தை எவ்வளவுக்கு நீடித்து வைத்திருக்க முடியுமோ அவ்வளவுக்கு நீடிப்பதற்குத் தக்க முறைகளைக் கைக்கொள்ளுகின்றனர். இளமைப் பித்தேறினவர்களுள் மேல் நாட்டார் தலை சிறந்து விளங்குகின்றனர். சிலர் உலகப் பிரசித்தி பெற்ற டாக்டர் வரனோவ் என்னும் பெரியாருடைய உதவியைக் கொண்டு குரங்கின் தசையை (Gland)ப் பிரயோகித்து யௌவனமடைய முயலுகின்றனர். வேறு சிலர் காயகல்ப சிகிச்சையினாலோ, அல்லது தேகாப்பியாச, யோகாப்பியாச முறைகளினாலோ இளமையைக் காப்பாற்றுவதற்கு எத்தனிக்கின்றனர். இன்னுஞ் சிலர் தம் நரை திரைகளைச் செயற்கை முறையால் மறைத்து விடலாமென்று சந்தோஷமடைகிறார்கள். இவர்கள் முயற்சிகள் அனைத்தும் கானல் நீர் போல அனர்த்தமாகின்றது.

மக்கள், இளமையைப் போற்றுவதற்கும் முதுமையை வெறுப்பதற்கும் காரணந்தானென்ன? மனிதன் தனது இளம்பிராயம் நீங்கியதும் பிணி, மூப்பு, சாக்காடு நிறைந்த அந்திய காலத்தை எதிர்பார்க்கின்றான். மூப்புச் சம்பந்தமான கவலைகளை நினைக்குந்தோறும் கொஞ்சம் பகீரென்கின்றது. அவற்றின் விசேஷ சக்திதானென்னே? ஒருவனுடைய முகத்திலுள்ள அழகையும், குளிர்ச்சியையும், இளமையையும் இந்தக் கவலைகள் அழித்து விடுகின்றன. கண்களின் ஒளியை மாற்றிப் பசலையும், மங்கல் நிறத்தையுமுண்டாக்கி விடுகின்றன. நெற்றியிலே வரிகளும், கன்னங்களிலே சுருக்கங்களும் இந்த நீசக் கவலைகளினால் ஏற்படுகின்றன. வயது முதிர முதிர தொண்டையின் இனிய குரல் போய் கடூரமான கரகரப்புச் சத்தம் உண்டாகிறது. மார்பிலும் தோளிலுமிருந்த வலிமை நீங்கிப் போய்விடுகிறது. இரத்தம் விரைவாக ஓடுதலின்றி மாசு நீரோடை போல மந்தமடைகின்றது. அவயவங்களில் தளர்ச்சியேற்படுகின்றது. கவலைகள் என்ற விஷ செந்துக்கள ஒருவனுடைய சரீரத்தை உள்ளூர அரித்து விடுகின்றன. சரீரத்தை மட்டுமா? அறிவையும் பாழாக்கி மறதியை அதிகப்படுத்தி விடுகின்றன. முக்கியமான செய்திகளெல்லாம் நல்ல சந்தர்ப்பத்திலே நினைவுக்கு வராமல் போய்விடுகின்றன. படித்த படிப்பெல்லாம் பாலை வனத்தில் பெய்த மழைபோன்று நிஷ்பலனாய் விடுகிறது. அறிவிலே பிரகாசமில்லாமல் எப்போதும் மேகம் படர்ந்தது போலாய் விடுகிறது. யோசனை தட்டுகிறது. இவைகளை நிவர்த்தி செய்வதற்கு யாதொரு உபாயமுந் தெரியாது மனிதன் தத்தளிக்கின்றான்.

இவ்வாறு கவலுறும் மக்களில் பலர் முதுமை நீங்கி அழியா இளமையை எய்தும் மார்க்கத்தைக் கண்டு பிடிக்க

முயன்றனர். முயன்றவர்களோ பலர்; சித்தி யெய்தியவர் சிலர். ஆன்றோர் கூறும் உறுதிமொழி தானென்ன? 'சந்ததமும் இளமையோடிருக்கலாம்' என்பது. இந்த ஆப்தவாக்கியம் நரை திரை கண்டு நலியும் மாந்தருக்குப் புத்துயிரளிக்கிறது. ஆனால் இங்குக் கூறப்பட்ட இளமையோ தேக சம்பந்தமானதல்ல; ஆத்ம சம்பந்தமானது. இது எல்லா மனிதரிடத்தும் மறைந்து கிடப்பது. ஆத்மாவின் இளமையைத் தக்க நிலையில் ஸ்திரப் படுத்தினால் முதுமை தன் வலியில் குன்றும் என்பதற்குச் சந்தேகமில்லை.

வயதுக்கும் மூப்புக்கும் உள்ள சம்பந்தத்தைச் சிறிது ஆராய்வாம். சோபோகிலிஸ் என்னும் பிரபல ஞானி, தம் அரும் பெருங் காப்பியங்களை எண்பதாவது வயதில் இயற்றினார். சிற்பக்கலை நிபுணரான மைக்கல் ஆஞ்சலோ என்பவரின் கலைத்திறமை எண்பத்து மூன்று வயதிலும் மங்கவில்லை. ஹம்போல்ட் என்னும் பிரபல விஞ்ஞான சாஸ்திரி தனது தொண்ணூறாவது வயதிலும் ஆராய்ச்சிகளை வெளிப்படுத்தினார். கிளாட்ஸ்டன் என்னும் பிரித்தானிய பிரதம மந்திரி எண்பத்து மூன்று வயதுவரை அரசாங்க நிர்வாகங்களைத் திறமையோடு நடத்தினார். வணக்கத்துக்குரிய போப்பரசரான லீயோ என்பார் தொண்ணூறு வயதுக் கப்பாலும் தம் கடமைகளில் குறையவில்லை. ஜேம்ஸ் மார்ட்டினோ என்னுங் கலைவாணர் தமது அரிய நூல்களை எண்பது வயதுக்குந் தொண்ணூறு வயதுக்கு மிடையே உலகுக்கு அளித்தார். மகிமை தங்கிய விக்டோரியா இராணி எண்பத்திரண்டு வயது வரை இராஜரீகக் கடமைகளைத் திறமையுடன் நடத்தியுள்ளார். இன்னும் எத்தனையோ வயது முதிர்ந்த பெரியாரின் அருஞ் செயல்கள் உலக சரித்திரத்தில் பரந்து கிடக்கக் காணலாம். இந்த உதாரணங்களிலிருந்து பெறப்படும் உண்மைதானென்ன? உடம்பின் வயதுக்கும் முதுமைக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை யென்பதாம்.

மூப்பு யாது காரணம் பற்றி ஏற்படுகிறது? ஒருவனுடைய மனதுக்கும் அவன் முதுமைக்கும் நெருங்கிய சம்பந்த முண்டென்பது ஆன்றோர் துணிபு. வாழ்க்கையின் இளமையையும் குளிர்ச்சியையும் இனிமையையும் இழந்தவன் கிழவனாகின்றான். பிறருடைய கற்பின் திறமையைச் சந்தேகிக்கும் பெண் எவ்வளவு யௌவன முடையவளாயினும் முதுமையை அடைகின்றாள். ஏனெனில் வதனம் அழகாயிருப்பினும் அவளுடைய மனம் விகாரமாகி விட்டது. மனிதன் சுயநலங் கருதியே தொழில்களில் ஈடுபடுகின்றான் என்று எண்ணுபவன் முதுமையை அடைகிறான். ஏனெனில் அவன் இருதயம் வறண்டு போயிற்று. சத்தியம், நீதி என்பனவற்றில் நம்பிக்கையில்லாதவனும், தன்னிலும், தன் சகோதரராகிய மக்களிடத்தும், கடவுளிடத்தும் விசுவாசமில்லாதவனும் முதுமையை அடைகிறான். ஏனெனில் அவனுக்கு மனத் தளர்ச்சி யேற்படுகின்றது. வாழ்க்கை நலங் கண்டு மகிழாதவன்; புதுமை யொன்றிலும் புலன் செலுத்தாதவன்; இளைஞரின் எதிர் காலப் பெருமையில் நம்பிக்கை இல்லாதவன்; பயங்காரணமாகப் புது முயற்சிகளில்

ஈடுபடாத கோழை; குறளை பேசுபவன்; பிள்ளைகளைக் கவனியாதவன்; அவர்கள் சிரிப்பிலும் மழலைமொழிகளிலும் ஆனந்தமடையாதவன்; நகைச்சுவையில்லாதவன்; மன மகிழ்ச்சியினால் முகம் மலராதவன்; பட்சியின் இசையிலும் பூவின் மணத்திலும் இன்பம் நுகராதவன்; சீரிய எண்ணத்தைப் பார்க்கிலும் பணத்தையே பெரிதாக மதிப்பவன்; இத்தகையோரனைவரும் முதியரினும் முதியவரே ஆவர்.

முதுமையை ஒழிப்பதற்கு வழிதானென்ன? தேயும் இயல்பையுடைய உடம்பின் மீதுள்ள பற்றை ஒழித்து நாம் நித்தியமான ஆத்மா என்பதை உணரவேண்டும். மூப்பு, அழிவு, என்பன இந்திரியம், மனம், ஞாபகம் முதலியவற்றையே பாதிக்கின்றன. ஆத்மாவோ அவை யெல்லாவற்றிற்கும் சாட்சியாய் நிற்பது. ஆகையால் உடல், மனம் முதலியன தளர்வுறுதலால் அதற்கு எவ்வித இடையூறுமில்லை. அது எக்காலத்தும் யௌவனமுடையது. இந்த உபநிடத வாக்கியங்களில் நம்பிக்கை யுடையவன் முதுமையால் பந்தப்படான். 'யான் என்றும் யௌவன முடையோன்; யான் அழியா யாக்கையுடையோன்; நான் தேவ குமாரன்' என்று சாதிப்பான். இதைவிட வேறு வழிகளும் உண்டு வாலிப வயதில் கேளிக்கை விளையாட்டுக்களில் உற்சாகத்தோடு கலந்துகொண்டதுபோல அந்திய காலத்திலும் இவைகளில் கலந்து கொள்ளல்வேண்டும். ஆனால் வாலிபர்களைப்போலச் சிரமப் படக்கூடாது. பலத்துக்குத் தகுந்த விளையாட்டுக்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். சாக்ரடீஸ் என்னும் கிரேக்க ஞானி தம் அந்திய காலத்தில் சங்கீதம் பழகினார்; கிளாட்ஸ்டன் என்பார் துவிசக்கரம் (பைசிக்கிள்) ஓடப் பயின்றார்; யோட்ச் பான்கிரோப்ட் என்பார் குதிரைச் சவாரி செய்தார். தோட்டச் செய்கை பலருக்கு மன உற்சாகத்தை உண்டு பண்ணுகிறது. சிலர் தமது பிள்ளைகளுக்குக் கதை சொல்வதில் காலங் கழிக்கின்றனர். புதிய எண்ணங்களிலும் முயற்சிகளிலும் சிரத்தை யெடுத்தல் நன்று. சுயநலந் தவிர்த்துப் பொதுநல வேலைகளில் தலையிடல் வேண்டும். செல்வர்கள் தங்கள் பணத்தைத் தமது பின் சந்ததியாருக்கு நன்மை பயக்கும் வழிகளில் பிரயோசனப் படுத்தல் போற்றத்தக்கது. இச் சந்ததியாரைப் பார்க்கிலும் இனிமேல் வருஞ் சந்ததியார் மேலோங்கி நன்னிலை அடைய வேண்டுமென்ற நோக்கம் சாலவும் நன்று. உலகத்திலே நடக்கும் தற்கால இயக்கங்களை அறிந்து அவைகளில் சிரத்தை யெடுத்தல் வேண்டும். குழந்தைகள் மீது அன்பு பாராட்டி அவர்கள் கூட்டுறவை நாடுதல் இளமையைப் பயக்கும். இந்த உலகம் தெய்வீகமானது; நமது வாழ்வு தெய்வீக வாழ்வு என்று கொள்ளவேண்டும். சந்ததமும் இளமையோடிருக்க இவைதான் நல்ல வழிகள்.

(டாக்டர் சண்டர்லாண்டைத் தழுவி எழுதப்பட்டது.)